# 2008

# ஆண்டறிக்கை

நெடுஞ்சாலைகள் மற்றும்
வீதி அபிவிருத்தி அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# National Road Network in Sri Lanka

**MINISTRY OF HIGHWAYS**
**&**
**ROAD DEVELOPMENT**

PROJECT FORMULATION,MONITORING & GIS SECTION,
PLANNING DIVISION,
ROAD DEVELOPMENT AUTHORITY,
"SETHSIRIPAYA",
BATTARAMULLA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளடக்கம்


1.0 முன்னுரை

| | | |
|---|---|---|
| 1.1. | மேலெழுந்தவாரியான அறிக்கை | 01 |
| 1.2. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவம். | 04 |
| 1.3. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கமும் குறிக்கோளும் | 05 |
| 1.4. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இலக்குகளும் குறிக்கோளும் | 05 |
| 1.5. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாக அமைப்பு | 05 |
| 1.6. | பொது முகாமையாளர் | 06 |
| 1.7. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் | 06 |
| 1.8. | தொழிற்பாட்டுப் பிரிவுகள் | 06 |

2.0 பிரிவுகளின் தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் 09

| | | |
|---|---|---|
| 2.1 | பராமரிப்பு முகாமை நிர்மாணப் பிரிவு | 09 |
| 2.2 | வேலைகள் பிரிவு | 09 |
| 2.3 | ஆதன முகாமைத்துவமும் வருமானப் பிரிவும் | 10 |
| 2.4 | எந்திரவியற் சேவைகள் பிரிவு | 11 |
| 2.5 | நெடுஞ்சாலை வடிவமைப்புப் பிரிவு | 12 |
| 2.6 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 13 |
| 2.7 | காணி சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றல் பிரிவு | 13 |
| 2.8 | சூழலியல் மற்றும் சமூகப் பிரிவு | 14 |
| 2.9 | திட்டமிடற் பிரிவு | 16 |
| 2.10 | பொறிமுறைப் பிரிவு | 19 |
| 2.11 | பயிற்சியளித்தல் பிரிவு | 20 |
| 2.12 | சட்டப் பிரிவு | 21 |
| 2.13 | நிதிப் பிரிவு | 22 |
| 2.14 | நிர்வாகப் பிரிவு | 23 |
| 2.15 | உள்ளகக்கணக்காய்வுப் பிரிவு | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




3.0. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரிவுகளின் செயலாற்றுகை 26

3.1 பராமரிப்பு முகாமை நிர்மாணப் பிரிவின் செயற்படுகை 29
3.2. வேலைகள் பிரிவின் செயற்படுகை 29
3.3. ஆதன முகாமைத்துவம் மற்றும் வருமானப் பிரிவின் செயலாற்றுகை 31
3.4. எந்திரவியற் சேவைகள் பிரிவின் செயற்படுகை 33
3.5. நெடுஞ்சாலை வடிவமைப்புப் பிரிவின் செயற்படுகை 35
3.6. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் செயற்படுகை 39
3.7. காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல் பிரிவின் செயற்படுகை 46
3.8. சுற்றாடல் பிரிவின் செயற்படுகை 47
3.9. திட்டமிடல் பரிவின் செயற்படுகை 49
3.10. பொறிமுறைப்பிரிவின் செயற்படுகை 61
3.11. பயிற்சியளித்தல் பிரிவின் செயற்படுகை 64
3.12. சட்டப் பிரிவின் செயலாற்றுகை 73
3.13. நிதிப்பிரிவின் செயலாற்றுகை 73
3.14. நிருவாகப் பிரிவின் செயற்படுகை 74
3.15 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தொழிற்படுகை 75

4.0. வெளிநாட்டு நிதிச் செயற்திட்டங்கள் 78

4.1. ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு 83
4.2. ஜப்பான் உதவி பெற்ற செயற்திட்ட முகாமைத்துவ அலகு 96
4.3. பல்வகை வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம் 99
4.4. தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் 105


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | | |
|---|---|---|
| 4.5 | வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் | 109 |
| 4.6. | கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேகப் பாதை செயற்திட்டம் | 114 |
| 4.7. | கொழும்பு-கண்டி மாற்றுப் பாதை செயற்திட்டம் | 115 |
| 4.8. | தேசிய நெடுஞ்சாலைத் துறை செயற்திட்டம் | 118 |
| 4.9. | உலக வங்கி நிதிபெற்ற வீதித் துறை உதவிச் செயற்திட்டம் | 128 |
| 4.10. | இங்கிலாந்து உருக்குப் பால செயற்திட்டம் | 129 |
| 4.11. | வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் அலகு | 133 |

5.0. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இலக்குகளும் பெறுகைகளும் 137


## இணைப்பு


இணைப்பு 01 - வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாக அமைப்பு வரைபடம்
இணைப்பு 02 - நிதிக்கூற்று அறிக்கை - 2008
இணைப்பு 03 - கணக்காய்வாளரின் அறிக்கை
இணைப்பு 04 - கணக்காய்வாளரின் அறிக்கைக்கான மறுமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## ஆண்டறிக்கை – 2008

## 1.0 அறிமுகம்

### 1.1 பொது ஆராய்வுரை

1981 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை (வீ.அ.அ.ச) சட்ட இல: 73 இன் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் நியதிச்சட்ட தொகுதியாக (Statutory body) கூட்டிணைக்கப்பட்டு, 1986 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள் திணைக்களத்தின் பின்னுரிமையாளராகி, தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னலை பேணி மற்றும் மேம்படுத்துவதற்கு வீ.அ.அ.ச. ஆனது கடமைப்பாடுடையதாகியது. வினைத்திறனான போக்குவரத்து முறைமையானது நாட்டின் விரைவான பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை சீர்திருத்த முன் தேவையானதொன்றாகும். இலங்கையில் 70% ஆனது தரை மார்க்க போக்கு வரத்தானதாகவுள்ளது. வாகனப் போக்குவரத்து ஒழுங்காக வளர்ச்சியடைந்ததனால், அதிகரித்து வரும் வீதித் தேவைப்பாடு போக்குவரத்து முறைமையின் ஆற்றலுக்கு பற்றாக்குறைவாகவுள்ளது. அத்துடன், பார வாகனங்கள் வீதியோர தளவரிசை (pavement) கட்டமைப்புகளில் துரித சீரழிவினை ஏற்படுத்தி, அதனால் வீதி வலைப்பின்னலின் பாவனைக்குரிய சேவைக்காலத்தை குறைக்கின்றது. வீ.அ.அ.ச. ஆனது தற்போதை வீதி வலைப்பின்னலை புனருத்தாபனம் மற்றும் சீர்திருத்தும் முகமாக தாங்கக்கூடிய நிகழ்ச்சிமுறை ஒன்றில் ஈடுபட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் அ.ஆ வகுப்புகளாக (A,B Class) வகுப்பாக்கப் செய்யப்பட்டுள்ள மொத்த 11, 902 கி.மீ. வீதிகள் மற்றும் பாலங்கள் (3மீ. அகலத்தை விஞ்சியது) பேணிக்காப்பது வீ.அ.அ.ச. இனது செயலெல்லையின் கீழ் வருகின்றன.

### திட்டமிடல் மற்றும் நிகழ்ச்சிமுறைப்படுத்தல்

வீ.அ.அ.ச. இனது முற்று முழுமையான இயக்கப்பாடானது, அடைவு மற்றும் குறிக்கோள்களின் பாதையிலேயே திட்டமிடல் ஆரம்பமாகின்றது. பராமரிப்பு மற்றும் புனருத்தாபரண நிகழ்ச்சி முறையானது பிராந்தியங்களிலிருந்து பெறப்படும் தகவல் அடிப்படையிலும் மற்றும் சீர்திருத்த வேலையின் நிகழ்ச்சி முறையானது தேசிய வீதி தனிச்சிறப்புத் திட்ட (தே.வீ.த.சி.தி;NRMP) அடிப்படையிலும் தயாரிக்கப்படும்.

### தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு

வருடம் பூராகவும் திருப்தியான மட்டத்தில் சேவைகளை நடாத்தி, வீதிகளின் சீர்கெடுதலினை தடுத்து அதனை ஒழுங்காக பராமரித்தல் வேண்டும். பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு வீ.அ.அ.ச. ஆனது அதியுயர் முதன்மையை அளித்து, அதனை நேரடியான தொழிலாளர் மூலமோ அல்லது பிராந்திய நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்தில் (நி.ப.அ.நி ; ICTAD) பதிவு செய்யப்பட்ட தனியார் ஒப்பந்ததாரர் மூலமோ நடைமுறைப்படுத்தும். வீதி நிலவர மதிப்பீட்டின் பிரகாரம் வீதி பராமரிப்பிற்காக தேவையான மொத்த நிதிவளம், பிராந்தியத்திற்கு ஒதுக்கப்பட்ட வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றது. 2008 ஆம் ஆண்டிற்கான செயல்முறை பராமரிப்பிற்காக ரூபா 2,433 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. செயல்முறை பராமரிப்புடன், காலாகாலம் மண்ணினால் உறுதிப்படுத்தி பராமரிக்கும் முறைமையும் வீ.அ.அ.ச. இடம் உண்டு, இவ்வகையான முறையில் 2008 ஆம் ஆண்டில் 596 கி.மீ. நீள வீதியானது மண்ணினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீதி புனருத்தாபரணமும் சீர்திருத்தமும்

வீதி வலைப்பின்னலை சேவைக்குரிய நிலையில் வைத்திருப்பதற்கு, வீதி பராமரிப்பு போல் புனருத்தாபரணமும் சமமாக முக்கியம் வாய்ந்ததாகும். சேவைத்தரம் மற்றும் போக்குவரத்து செயலுறவு ஆகியனவற்றின் உடனுக்குடனான வீழ்ச்சியை தடுப்பதற்கு, புனருத்தாபரணம் வீதியின் பாவனைக்குரிய நாட்களை நீடிக்க உதவுகின்றது. பழமை வாய்ந்த நெடுஞ்சாலைகளின் மேலதிக ஆற்றலைக் கூட்டுவதற்கு பராமரிப்பு மற்றும் புனருத்தாபரணத்தை, சீர்திருத்தாது விடுதல், தேவையான இயங்குநிலையை அடையச் செய்ய முடியாத தொன்றாகும். ஆற்றல், சவாரி செய்யும் தரம், வீதி பாதுகாப்பு மற்றும் வாகன முகாமைத்துவம் ஆகிய முதல்நிலை காரணிகளுக்கான தீர்வு முயற்சியே, வீதி வலைப்பின்னலில் தேவையான இயக்கத்தை அடைய உதவும். 2008 ஆம் ஆண்டுகால கட்டத்தில் வீ.அ.அ.ச. ஆனது தற்போதைய வீதி வலைப்பின்னலின் புனருத்தாபரணம் மற்றும் சீர்திருத்தப் பணிகளுக்காக ரூபா 24,418 மில்லியனை செலவளித்துள்ளது.

### தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்களின் புனருத்தாபரணம் / மீள் நிர்மாணம்

வீதி முறைமையின் ஒரு பகுதியான; பாலங்களின் பராமரிப்பு, புனருத்தாபரணம் மற்றும் மீள் நிர்மாணிப்பு, தேவைப்பாடானதொன்றாகும். தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள நலிந்த மற்றும் ஒடுக்கமான பாலங்கள் போக்குவரத்து நெருக்கடி நிலையை உருவாக்கி, வாகன மற்றும் பாரக் கட்டுப்பாடுகளுக்கும் காரணியாகின்றது. பல வீதி சீர்திருத்த நிகழ்ச்சிமுறைகளானது பாலங்கள் மற்றும் மதகுகளின் பழுதுபார்த்தல் மற்றும் மதகுகளின் பழுதுபார்த்தல் அத்துடன் மீள் நிர்மாணித்தலையும் உள்ளடக்குகின்றது. இவ்வருடத்தில் நலிந்த பாலங்களின் சீர்திருத்த நிகழ்ச்சிமுறையின் கீழ் 24 பாலங்கள் சீர்திருத்தப்பட்டுள்ளன. அறுகம்குடா பாலத்தின் நிர்மாணிப்பானது சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய இராச்சிய முகவர் (ச.அ.ஐ.இ.மு ; USAID) இனது நிதி உதவியின் கீழ் முடிபுறுத்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டில் வாகனப் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளது.

### அதி சீக்கிரப்பாதை நிர்மாணிப்புகள்

மாகாணத்திற்கிடையிலான அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் அதிசீக்கிரப் பாதைகளின் 21 வது நூற்றாண்டுத் தொடக்கச் சிந்தனையானது, சமூக – பொருளாதார அபிவிருத்தி அடைவுகளின் பாதையில், உந்தலை ஏற்படுத்தியது. 2007-2017 ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட தே.வீ.த.சி.தி. (NRMP) ஆனது 594 கி.மீ.தூரமான நெடுஞ்சாலைகள் மற்றும் அதிசீக்கிர பாதையானது, தென் மாகாண பொருளாதாரத்தை தாங்கும் இலக்குடன் நடாத்தப்படுகின்றது. வெளிவட்ட நெடுஞ்சாலையானது; கொழும்பு நகரைத் தவிர்த்து, கொழும்பு – கட்டுநாயக்க சீக்கிரபாதை மற்றும் தென் சீக்கிர பாதை இணைப்பினை ஏற்பாடு செய்கின்றது. கொழும்பு – கண்டி சீக்கிரப் பாதையானது புதிய மாற்று நெடுஞ்சாலையாக கண்டிக்கு அமைகின்றது.

### வருவாய்களும் வருமானங்களும்

ஆலோசனை சேவைகள், வரைபுகள், வெளிக்கள மற்றும் ஆய்வுக்கூட சோதனைகள் மூலம் வருமானங்களும் ; கடைத் தொகுதிகள், சட்டங்கள் (gantries), இளைப்பாறும் பூங்கா, பேரூந்து காப்பிடங்கள், தொலைக்காட்சி வடகத் தூண்கள், விளம்பரத்தலங்கள் ஆகியனவற்றிலான வாடகை, அதிஷ்டசீட்டுச் சாவடிகள் மற்றும் அனுமதியற்ற விளம்பரத் தலங்களிலிருந்து அபராதம் ஆகியனவற்றின் மூலம், வருமானங்களையும் வருவாயினையும் பெற்றுத் தருகின்றது. 2008 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்ச் சேகரிப்பானது ரூபா 60.016 மில்லியன் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2008 ஆம் ஆண்டிற்கான நிதி தொடர்பான வினையாற்றல்**

2008 ஆம் ஆண்டிற்கான தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னல், அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு அத்துடன் அதிசீக்கிரப் பாதை நிர்மாணிப்புச் செயல்திட்ட விடயமாக அந்நிய உதவிக்கடன், (அ.உ.க) திரும்பச் செலுத்தும் அந்நிய உதவிக் கடன்கள், (தி.அ.உ.க.), அந்நிய உதவிக் கொடைகள் (அ.உ.கொ), உள்நாட்டு நிதிகள் தொடர்பான அந்நிய உதவி (உ.நா.நி.தொ.அ.உ.) மற்றும் உள்நாட்டு நிதிகள் ஆகியனவற்றின் முற்றும் முழுதான நிதி தொடர்பான வினையாற்றல் ஆனது ரூபா 59,620 மில்லியன் ஆகும்.

அட்டவணை : 01 - 2008 ஆம் ஆண்டுக்கான நிதி வினையாற்றல்

| செயற்பாடுகள் | ஒதுக்கீடு மில்லியன் ரூபா | செலவினம் மில்லியன் ரூபா |
|---|---|---|
| அதிவேகபாதை அபிவிருத்தி | 16,620.55 | 15,737.42 |
| வீதி வலைப்பின்னலின் புனரமைப்பு | 15,757.39 | 14,859.89 |
| தேசிய நெடுஞ்சாலைகளின் அகலிப்பும் மேம்படுத்தலும் | 6,552.20 | 6,053.20 |
| பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணிப்பு | 10,749.52 | 10,040.53 |
| சுனாமியால் பாதிக்கப்பட்ட வீதிகளின் புனரமைப்பு | 9,299.06 | 8,847.68 |
| ஆதாரஅமைப்புக்களின் | 4,161.30 | 4,081.65 |
| மொத்தம் | **63,140.02** | **59,620.37** |

**செயற்திட்டங்கள் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி வினையாற்றல்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவம் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்திக்கான கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவச் சபையால் நிறைவேற்றப்படுகின்றது. இந்த முகாமைத்துவச் சபையானது நாட்டின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பினை அபிவிருத்தி செய்வதற்குரிய அரசாங்கத்தின் கொள்கைளை அமுல்படுத்துவதற்கு கௌரவ அமைச்சருக்குப் பொறுப்பாகவுள்ளது. 2008 ஆண்டு தை மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலுள்ள மீளாய்வுக் காலம் வரை முகாமைத்துவ சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

திரு. எம்.பீ.எஸ்.பெர்னாண்டோ - தலைவர் (12.12.2005– 02.09.2008 வரை)
திரு.எஸ்.அமரசேகர - தலைவர் (03.09.2008 முதல்)
திரு.நிமால் விஜயசூரிய - செயலாளர்
திரு.பி.திஸாநாயக்க - உறுப்பினர் (27.03.2008 முதல்)
(நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர்)
திரு.எல்.ரி.கே.டீ சில்வா - உறுப்பினர் (17.06.2008 முதல்)
திரு.ரஜீவ்சிறி சூரியாராச்சி - உறுப்பினர் (14.02.2008 முதல்)
(நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரின் பிரதி அமைச்சர்களுக்கான இணைப்புச் செயலாளர்)
திரு.கே.எல்.ஆர்.சீ.விஜேசிங்ஹ - உறுப்பினர்
(மின்வலு எரிசக்தி அமைச்சுக்கான - உதவிப் பணிப்பாளர்)
ஆர்.பி.டீ.ஏ.பிரேமலால் - உறுப்பினர்
(மின்வலு எரிசக்தி அமைச்சுக்கான பிரதம கணக்காளர்)
திரு.பீ.டி.எல்.தர்மப்பிரிய - உறுப்பினர்
(போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்)
திரு. விபுல் ஜெயவர்த்தன - உறுப்பினர்
திரு.சீ.பி.தென்னக்கோன் - உறுப்பினர்
திரு.வீ.எஸ்.பெர்னாண்டோ புள்ளே - உறுப்பினர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேலைப் பணிப்பாளர்)
திருமதி. எம்.கங்காதரன் - உறுப்பினர்
நிதி அமைச்சு

2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒன்பது சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயல் நோக்கமும் செயற்பாடுகளும்

*செயல் நோக்கம்*

சகல பங்களிப்பாளர்களினதும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பை மேம்படுத்தலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை நெடுஞ்சாலை எந்திரவியலில் பல்துறைகளிலும் அதிசிறந்த தாபனமாக மாற்றியமைத்த-லுமாகும்.

*செயற்பணி*

வீதித் துறையின் முதன்மையான தேசிய அமைப்பு என்ற வகையில் நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு ஏற்றுக் கொள்ளக்கூடிய பாதுகாப்பான, வசதியான மட்டத்தில் நகர்வையும், அணுகுகையையும் உறுதிப்படுத்தும் விதத்தில் சூழலுக்கு உகந்த வகையில் மக்களையும், பொருட்களையும் கொண்டு செல்வதற்குப் போதுமான வினைத்திறன் மிக்கதொரு தேசிய நெடுஞ்சாலையமைப்பை வழங்குதல்.

## 1.4 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இலக்குகளும் குறிக்கோள்களும்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இலக்குகள், குறிக்கோள்கள் பின்வருமாறு:

- போதுமான அளவிலான தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை அமைத்தல்.
- தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்திலான நகரும் தன்மையினைப் பெறுதல்.
- உயர் சுலபத்தில் நகரும் தன்மையான அதிவேகப் பாதை வலையமைப்பை அளித்தல்.
- தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை ஒரு ஏற்றுக் கொள்ளக்கூடிய தரத்தில் பராமரித்தல்.
- வீதிப் பாவனையாளரின் செலவினைக் குறைத்தல்.
- தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பில் வீதிப் பாதுகாப்பினை அதிகரித்தல்.
- முதலீட்டின் திறமையான உபயோகத்தை உறுதிப்படுத்துதல்.
- சகல நடவடிக்கைகளிலும் சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.
- நிறுவனத்தின் அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- உள்ளூர் வீதி நிர்மாணக் கைத்தொழிலில் அபிவிருத்திக்கு உதவுதல்.

## 1.5 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாக அமைப்பு

நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களின் திட்டமிடல், வடிவமைத்தல், நிர்மாணித்தல், பராமரித்தல் ஆகியவற்றிலும் நெடுஞ்சாலை பாதுகாப்பிலும் விசேட திறமைகளைக் கொண்ட ஒரு பாரிய குடிசார் எந்திரவியல் நிறுவனமே வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையிற்கு அளிக்கப்பட்ட பங்கினை நிறைவேற்றுவதற்கும் மற்றும் அதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் உரிய விதத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாகக் கட்டமைப்பு வடிவமைக்கப்-பட்டுள்ளது. முகாமைத்துவ சபையின் கீழுள்ள இந்த அமைப்பு ஒரு பொது முகாமையாளரை பிரதான நிறைவேற்று அதிகாரியாகக் கொண்டுள்ளது. பொது முகாமையாளரின் பல்வேறு வகையான கடமைகளை நிறைவேற்ற, 4 மேலதிக பொது முகாமையாளர்களும், 14 பணிப்பாளர்களும் உதவுகின்றனர்.
இதற்கு மேலதிகமாக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ளதும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு தலைவரின் ஊடாக இணைக்கப்-பட்டுள்ளதுமான செயற்திட்ட முகாமைத்துவ அலகுகளிற்கு 11 திட்டப் பணிப்பாளர்கள் உள்ளனர்.
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அமைப்பு வரைபடம் இணைப்பு - 01 காட்டப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.6 பொது முகாமையாளர்

திரு.ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறி அவர்கள் 2005 ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் பொது முகாமையாளராகச் செயற்பட்டு வருகின்றார்.

## 1.7 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது கடைகள் மற்றும் காரியாலயங்கள் சட்டத்தின் கீழ் வரும் 3962 ஊழியர்கள் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிகின்ற தொழிற்படை ஒன்றைக் கொண்டுள்ளது. இவர்கள் எந்திரவியல், தொழில்நுட்பம், நிர்வாகம், கணக்கியல் மற்றும் துணைச் சேவைகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு மேலதிகமாக பொறியியல் சேவைகளின் கூலிச்சபையின் கீழ் அண்ணளவாக 4236 ஊழியர்கள் நாளாந்த பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## 1.8 தொழிற்பாட்டுப் பிரிவுகள்

மீளாய்வு வருட காலத்தில் ஒவ்வொன்றும் ஒரு பணிப்பாளரினால் நிர்வகிக்கப்படும் 15 தொழிற்பாட்டுப் பிரிவுகள் இருந்தன. 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதத்திற்குப் பின், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்குடன் பின்வரும் மேலதிக பொது முகாமையாளர்களை நியமித்தது.

கீழ்வரும் 3 பிரிவுகளுக்கும் மேலதிக பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டது. (சொத்து இயக்கமும் முகாமைத்துவமும்)

பராமரிப்பு முகாமைத்துவமும் மற்றும் நிர்மாணப் பிரிவும்
வேலைகள் பிரிவு
ஆதன முகாமைத்துவமும் வருமானப் பிரிவும்
கீழ்வரும் 5 பிரிவுகளுக்கும் மேலதிக பொது முகாமையாளர் (சொத்து அபிவிருத்தி) நியமிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது.
(சொத்து இயக்கமும் முகாமைத்துவமும்)
மேலதிக பொது முகாமையாளர் - சொத்து அபிவிருத்தி
எந்திரவியல் சேவைப் பிரிவு
நெடுஞ்சாலை வடிவமைப்புக்கள் பிரிவு
ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு
காணி சுவீகரித்தலும் மீள்குடியமர்த்தல் பிரிவு
சூழலியல் சமூக அபிவிருத்திப் பிரிவு
ஐக்கிய இராச்சிய உருக்குப் பாலப் பிரிவு (செ.மு.பி.)
வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதிகள் (செ.மு.பி)

மேலதிக பொது முகாமையாளர் - திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டப் பிரிவு

திட்டமிடல் பிரிவு

மேலே குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்கு மேலதிகமாக பின்வரும் பிரிவுகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளரின் மேற்பார்வையின் கீழ் நேரடியாக முகாமை செய்யப்பட்டு நிறுவன அமைப்பின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்கின்றது.

| | |
|---|---|
| பொறிமுறைப் பிரிவு | சட்டப் பிரிவு |
| பயிற்சிப் பிரிவு | நிதிப் பிரிவு |
| நிர்வாகப் பிரிவு | உள்ளக கணக்காய்வுப் பிரிவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழான செயற்திட்ட முகாமைத்துவ அலகுகள் (செ.மு.அ.) வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்களை கையாள்வதற்கு தாபிக்கப்பட்டதுடன், இவர்கள் வெவ்வேறான செயற்திட்டங்களின் உரிய இலக்குகளை எய்துவதில் சுதந்திரமாக செயலாற்றுகிறார்கள். அவர்கள் சுதந்திரமான கணக்கீட்டு அலகுகளை பேணுவதுடன், நெடுஞ்சாலை வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும் பொறுப்புக் கூறுகின்றார். பின்வரும் பதினொரு செயற்திட்ட முகாமைத்துவ அலகுகளின் வருடாந்த அறிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளது.

1. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிடப்பட்ட செயற் திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
2. ஜப்பான் உதவி பெறும் செயற் திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
3. பல்வகையான வெளிநாட்டு நிதி பெறும் செயற் திட்டங்களுக்கான செயற் திட்ட முகாமைத்துவ அலகு
4. தென் பிராந்தியப் போக்குவரத்து அபிவிருத்தி செயர் திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
5. வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலை செயற் திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
6. தேசிய நெடுஞ்சாலைத் துறை செயற் திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு.
7. உலக வங்கி நிதியிடப்பட்ட வீதித் துறை உதவி செயற் திட்டத்திற்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
8. வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதிக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
9. கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப் பாதைக்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
10. கொழும்பு – கண்டி மாற்றுப் பாதை செயற் திட்டத்திற்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு
11. ஐக்கிய இராச்சிய உருக்குப் பால செயற் திட்டத்திற்கான செயற்திட்ட முகாமைத்துவ அலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுகளின் தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரிவுகளின் தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

### 2.1 பராமரிப்பு முகாமைத்துவமும் நிர்மாணப் பிரிவும்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண மற்றும் பிராந்திய அமைப்புக்கள், தலைமை அலுவலகத்திலுள்ள பராமரிப்பு முகாமைத்துவ மற்றும் நிர்மாணப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. மேலதிக பொது முகாமையாளர் (சொத்துக்கள் நிர்வகித்தலும் பராமரித்தலும்) மற்றும் பணிப்பாளர் (பராமரிப்பு முகாமைத்துவமும் நிர்மாணமும்) ஆகியோர் பொது முகாமையாளருக்கு தொழிலாண்மைத் துணையை வழங்குவதுடன், மாகாணப் பணிப்பாளர்களுடைய வேலைகளை ஒருங்கிணைத்து வழிநடத்துகின்றனர். இவர்களுக்கு ஒரு பிரதிப் பணிப்பாளர் உதவுகின்றார். நாட்டில் 10 மாகாணப் பணிப்பாளர்கள் உள்ளனர். ஒவ்வொருவரின் கீழும் 2 அல்லது 3 பிரதான எந்திரவியலாளர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்குப் பொறுப்பாக உள்ளனர். ஒவ்வொரு பிரதான எந்திரவியலாளர்களுக்கு இரண்டு அல்லது மூன்று நிறைவேற்றுப் பொறியியலாளர்கள் உதவுகின்றனர். நிறைவேற்று பொறியியலாளர்களின் பகுதி அந்தப் பகுதியிலுள்ள வீதிகளின் நீளத்தைக் (கிலோ மீற்றர்) கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.

#### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன :-

- தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரித்தல்.
- தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்களைப் பராமரித்தல்.
- உள்நாட்டு நிதிகளைப் பாவித்து தேசிய நெடுஞ்சாலைகளை புனரமைத்தும், சிறிய அபிவிருத்திகளை மேற்கொள்வதும்.
- உள்ளூர் நிதிகள் மூலம் பலவீனமான பாலங்களை மேம்படுத்தல்.
- ஏதாவது வேண்டுகோளின் அடிப்படையில் சிறிய பாலங்களையும் வீதிகளையும் புனரமைத்தல்.

### 2.2. வேலைகள் பிரிவு

வேலைப் பிரிவு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய பகுதிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. வேலைகள் பிரிவானது பின்வரும் செயற்திட்டங்களை மேற் கொள் கின்றது.

- வீதிகளை அகலமாக்குததலும் மேம்படுத்தலும் - இது 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய செயற்திட்டங்களையும், சிறியளவிலான உட்கட்டுமாண புனரமைப்பு மேம்பாட்டுச் செயற் திட்டங்களின் தொடர்ச்சியையும் உள்ளடக்குகின்றது. அம்பாறை, மொனறாகலை, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் உள்ள செயற் திட்டங்களுக்கு 2007 சித்திரை மாதத்தில் இருந்து ஏழ்மை நேய கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (PPRDP) சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கியினால் (JBIC) நிதியளிக்கப்படுவதுடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள திட்டங்களுக்கு உள்நாட்டு நிதி பாவிக்கப்படுகின்றது. (GOSL)
- சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கியினால் (JBIC) நிதியளிக்கப்படும் இலங்கைச் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு புத்துயிரூட்டும் திட்டம் (STAART).

#### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன:-

- எல்லா ஒப்பந்தங்களையும் சுதந்திரமாகக் கண்காணித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாகாணப் பணிப்பாளர்களுக்கும், பொது முகாமையாளர்களுக்கும் முகாமை/ உரிமை மதிப்பீடு, கால நீடிப்பு ஆகியவற்றிற்கு முறையே அறிவுரை வழங்குதல்/ ஆதரவாக இருத்தல், பயிற்சியளித்தல்.

## 2.3. ஆதன முகாமைத்துவமும் வருமானப் பிரிவும்

ஆதன முகாமை வருமானப் பிரிவானது 2004 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் தாபிக்கப்பட்டது. இது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக, தனது சொந்த வளங்களிலிருந்தே வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிட்டுள்ளது. உழைக்கப்பட்ட வருமானமானது இலங்கையின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்புக்களை நிர்மாணித்தல், பராமரித்தல், மேம்படுத்தல், அதனுடைய பணிகளை நடைமுறைப்படுத்தல், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளையும் கட்டடங்களையும் பராமரித்தல் மற்றும் ஊழியர்களின் நலன்புரி வேலைகளைச் செய்தல் போன்றவற்றிற்காக திறைசேரியில் இருந்து பெறப்பட்ட வருடாந்த நிதியத்துடன் இணைத்துப் பயன்படுத்தப்படுகிறது.

ஆதன முகாமைத்துவ வருமானப் பிரிவானது விளம்பரங்கள் ஒட்டப்படுவதற்கான சுவர்கள் சட்டம், விளம்பரப் பலகைகள், வீதியோர தொலைபேசிப் பெட்டிகள், பேரூந்து தரிப்பிடங்கள், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனை நிலையங்கள் போன்றவற்றிற்கு அறவிடப்படும் வாடகை மூலமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வருமானத்தை ஈட்டித் தருகிறது. இப்பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளை அபிவிருத்தி செய்து, வருமானத்தை ஈட்டுவதற்கு உத்தேசித்துள்ளது. வீதியைப் பாவிக்கும் நீர் வழங்கல் சபை, மின்சார சபை போன்ற நிறுவனங்களிட- மிருந்தும் வாடகை அறவிடுவதற்கான சாத்தியக் கூறுகளை அறிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

இப்பிரிவின் செயற்பாடுகளாவன :

- காணிகள், கட்டிடங்கள் உட்பட சகல சொத்துக்களையும் நிர்வகித்தல் (வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய விடுதிகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் தவிர்ந்த).
- விளம்பரப் பலகைகள், தொலைபேசிப் பெட்டிகள், பேரூந்து தரிப்பிடங்கள், வழிகாட்டும் பலகைகள் போன்றவற்றை நிறுவும் தனியாரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகையை நிர்ணயிப்பதும், அது சம்பந்தமான கொள்கை, நடைமுறை போன்றவற்றை வகுத்தலும்.
- விளம்பரப் பலகைகள், தொலைபேசிப் பெட்டிகள், பேரூந்து தரிப்பிடங்கள் போன்றவற்றிற்கு அனுமதி வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண அமைப்புகளுக்கு உதவி வழங்கலும் கண்காணித்தலும்.
- தேசிய நெடுஞ்சாலைகளின் வீதியோரங்களில் இளைப்பாறும் பகுதிகளை அபிவிருத்தி செய்தலும் ஊக்குவித்தலும்.
- சுரங்கப் பாதைகளில் அமைக்கப்பட்டுள்ள கடைத் தொகுதிகளை வாடகைக்கு விடல்.
- வருமானம் பெறக்கூடிய வேறு வழிகளை ஆராய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4. எந்திரவியற் சேவைப் பிரிவு

எந்திரவியற் சேவைப் பிரிவு பாலங்களின் வடிவமைப்புக்குப் பொறுப்பாக உள்ளது. எந்திரவியல் சேவைகள் பணிப்பாளரினாலும், பிரதிப் பணிப்பாளரினாலும் (பாலங்கள் வடிவமைப்பு) நிர்வகிக்கப்படும் இப்பிரிவில் சிரேஷ்ட வடிவமைப்பு எந்திரவியலாளர்கள், வடிவமைப்புப் எந்திரவியலாளர்கள், படவரைஞர்கள் மற்றும் துணை ஊழியர்கள் ஆகியோர் பணி புரிகின்றனர்.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் :

பாலங்களின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புத் திட்டங்களுக்குரிய பாலங்களினதும் அவற்றின் அணுகு வீதிகளினதும் வடிவமைப்பைத் திட்டமிடல், காணிச் சுவீகரிப்புக்களை நிர்ணயித்தல், பொது வசதி உட்கட்டமைப்புக்களை இடம் மாற்றுதலை நிர்ணயித்தல், திட்டங்களை அமுலாக்கும் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அமுலாக்கல் பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கல் என்பன இப்பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாகும்.

மேற்கூறியனவற்றை அடைவதற்காக, கீழக்காணும் நேரடி நடவடிக்கைகளிலும் மற்றும் அவற்றோடிணைந்த நடவடிக்கைகளிலும் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

- வேலைத்தள ஆய்வுகள் (அத்திவார ஆய்வுகளும் போக்குவரத்துக் கணிப்பீடுகளும் தவிர்ந்த) பால அமைப்புக்கான பிரேரணைகளும் அதன் தகைமைக்கான ஆய்வுகளும் உள்ளடங்கலாக.
- மதகுகள், பாலங்கள், வீதிக் கீழ்க் கடவைகள் மற்றும் மேம்பாலங்கள், அவற்றின் அணுகு பாதைகள் போன்றவற்றை எந்திரவியல் ரீதியான வடிவமைத்தல், வேலைக்குரிய வரைபடங்களைத் தயாரித்தல், எந்திரவியலாளர்களின் மதிப்பீடுகளைத் தயாரித்தல், கேள்விகோரும் பத்திரங்களைத் தயாரித்தல், காணிச் சுவீகரிப்புப் பத்திரங்களைத் தயாரித்தல்.
- வரைபடங்களிற்கேற்ப நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது, குறிப்பாக வடிவமைப்பின் போது எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க வித்தியாசமானதாக உண்மை நிலவரம் இருக்கும் போது, தேவையான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல்.
- பாலங்களின் வலுவை அதிகரிக்கும் போதும், பாரிய திருத்த வேலைகளை மேற்கொள்ளும் போது, அவற்றை வடிவமைத்தலும் கண்காணித்தலும்.
- வழமைக்கு மாறான நீளங்களுள்ள முன் அழுத்திய கொன்கிறீட் பாலங்கள் மற்றும் உருக்குப் பாலங்கள் ஆகியவற்றுக்கான வடிவமைத்தலுக்கான கணக்கீடுகளைச் செய்தல்.
- பொது வரைபடங்களைத் தயாரித்தல்.
- பாலங்களுக்கான ஒப்பந்தங்களின் 2008 ஆம் ஆண்டிற்கான விலை விபரங்களையும், மதிப்பீடுகளையும் தயாரித்தலும், விலை அதிகரிப்புச் சுட்டிகளைத் தயாரித்தலும்.
- ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்படும் மாற்று வடிவமைப்புக்களைச் சரி பார்த்தல்.
- ஆலோசகர்களினால் சமர்ப்பிக்கப்படும் வடிவமைப்பு அறிக்கைகளைச் சரி பார்த்தல்.
- தற்போதுள்ள பாலங்கள், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கு உகந்தனவா என்பதை சரிபார்த்தல்.
- தற்போதுள்ள பாலங்கள், இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் அமைக்கப்படும் கம்பிகளை பொருத்துவதற்கு உகந்தனவா என்பதைச் சரி பார்த்தல். புனரமைப்பு மட்டத்தை அறிவதற்கான முதற்கட்ட விசாரணைகள்.
- அரச திணைக்களங்களுக்கும், பிரத்தியேக நிறுவனங்களுக்கும் பால வடிவமைப்பு சம்பந்தமாக ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- மின் பிறப்பாக்கிகளைப் போன்ற அசாதாரண நிறை கொண்ட பொருட்களைக் கொண்டு செல்வதற்காக பாலங்களுக்குத் தேவையான திருத்தங்களையும், வலுவூட்டல்களையும் தீர்மானிப்பதும் பாலங்களின் தாங்கும் தன்மையை கணித்தலும். இவ்வகையான பாரங்களை சுமந்து செல்லும், போக்குவரத்துச் சாதனங்களின் அமைப்பைத் தீர்மானித்தலும் இப்போக்குவரத்திற்கான அனுமதியை வழங்குதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.5. நெடுஞ்சாலை வடிவமைப்புப் பிரிவு

நெடுஞ்சாலை வடிவமைப்புக்கள் பிரிவானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் விசேட பிரிவுகளில் ஒன்றாகும். இப்பிரிவு மேலதிக பொது முகாமையாளரின் (சொத்து அபிவிருத்தி) நிர்வாகத்தின் கீழ் வருகின்றது. வீதிகள், சுற்றுவட்டங்கள், சந்திகள் மற்றும் சமிக்ஞை விளக்குகள் போன்றவற்றை வடிவமைத்தல் இப்பிரிவின் முக்கிய பணியாகும்.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- பாரிய புதிய வீதிகள் மற்றும் அதிவேகப் பாதைகளை அமைப்பதற்கும் பாரிய வீதிப் புனரமைப்புகளைச் செய்வதற்கும் வேண்டிய விசாரணைகள், விரிவான அளவீடுகள், ஆரம்ப எந்திரவியல் வடிவமைப்புக்கள் மற்றும் விரிவான எந்திரவியல் வடிவமைப்புக்கள் என்பவற்றைச் செய்தல். அளவுகளின் அட்டவணை மற்றும் எந்திரவியலாளரின் மதிப்பீடுகளையும் தயாரித்தல்.
- பிரதேச அலுவலகங்களிற்கும் மற்றும் அரச நிறுவனங்களிற்கும் நெடுஞ்சாலை வடிவமைப்பு சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குதல். பிற அரச நிறுவனங்-களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற் திட்டங்களுக்கு நெடுஞ்சாலை வடிவமைப்புக்களைச் செய்தல்.
- நன்கொடை முகவர்களினால் நிதியளிக்கப்பட்டு, வெளிநாட்டு மதியுரைஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய புதிய நெடுஞ்சாலை/அதிவேக நெடுஞ்சாலைத் திட்டங்கள் மற்றும் நெடுஞ்சாலை மேம்படுத்தல்/புனரமைப்புத் திட்டங்களுக்கும் வெளிநாட்டு ஆலோசகர்களினால் தயாரிக்கப்படும் சாத்திய ஆய்வுகள், செல்வழி இட ஆய்வுகள் மற்றும் விரிவான எந்திரவியல் வடிவமைப்புக்கள் போன்றவற்றை கண்காணித்தல்.
- இலங்கையில் உள்ள பிரதான நெடுஞ்சாலைகள் அதிவேகப் பாதைகளின் வடிவமைப்புக்கான வகுப்பீடுகள், நெடுஞ்சாலை வடிவமைப்பு நியமங்களை இற்றைவரை வகைப்படுத்தல், வடிவமைப்பு வழிகாட்டல்கள், வடிவமைப்புக் கையேடுகள் தயாரித்தல் போன்றன.
- அதிவேக வீதியின் வடிவமைப்பு தொழில் ரீதியான மீளாய்வு உட்பட நெடுஞ்சாலை வடிவமைப்புத் துறையிலுள்ள எந்திரவியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- காணி சுவீகரிக்க வேண்டிய திட்டங்களுக்கான காணிச் சுவீகரிப்பு முன்மொழிவு- களைத் தயாரித்தலும், காணிச் சுவீகரிப்புச் மீதான பொது மக்களின் முறைப்பாடு- களை விசாரித்தல், அது தொடர்பான பிரச்சனைகளை வகைப்படுத்தல்.
- ஒட்டோடெஸக், சிவில் 3D போன்ற மென்பொருட்களைப் பாவித்து செய்யப்படும் விபரமான எந்திரவியல் வடிவமைப்புக்களுக்கும் பொருத்தமான நில அளவீடுகளுக்கான புதிய தரநிர்ணயங்களைத் தயாரித்தல்.
- புவியியல் நிலை குறிக்கும் திட்டப் புள்ளிகளை அமைப்பதற்கு மாகாண அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதும், நில அளவை திணைக்களத்துடன் இணைந்து இப்புள்ளிகளின் ஆள்கூறுகளைக் கணித்தலும்.
- ஆலோசகர்களினால் தயாரிக்கப்பட்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி, பல்வகை வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம், உலக வங்கி, தேசிய நெடுஞ்சாலை துறை செயற்திட்டம், வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதிகள் ஆகியவற்றுக்கான செயற்திட்டப் பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் வடிவமைப்புக்களை மீளாய்வு செய்து அபிப்பிராயங்களைத் தெரிவித்தல் மற்றும் வேலைத் தளங்களுக்கு விஜயம் செய்து தேவையான திருத்தங்கள் அமுல்படுத்தப்படுவதை கண்காணித்தல். அதேசமயம், விபரமான பொறியியல் வடிவமைப்பின் போது செயற்திட்டப் பணிப்பாளர்களின் சார்பாக, ஆலோசகர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதல்களைச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தை நிர்வகித்தலும், அறிவை விருத்தி செய்வதற்கான புதிய நூல்களை இற்றைவரை சேகரித்தலும்.
- நில அளவீடுகளை செய்வதற்கான சேவைகளைப் பெறுதல்.

## 2.6. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

வேலைகளின் தரக் கட்டுப்பாட்டைக் கண்காணிப்பதே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் முக்கிய கடமையாகும். இப்பிரிவு மேலதிகப் பொது முகாமையாளரின் (சொத்து அபிவிருத்தி) கீழ் உள்ளது. இப்பிரிவு பிரதேச வேலைகள் மற்றும் திட்டங்கள் பகுதி, மத்திய ஆய்வுக்கூடங்கள் மற்றும் விசாரணைகள் பகுதி என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்பகுதிகள் இரு பிரதிப் பணிப்பாளர்களின் கீழ் இயங்குகின்றது. இப்பிரதிப் பணிப்பாளர்கள் பணிப்பாளரினால் கண்காணிக்கப்-படுகின்றனர். இப்பிரிவு மாகாண ஆய்வுக்கூடங்கள் செயற்திட்ட ஆய்வுக்கூடங்கள் மற்றும் தேவைக்கேற்ப அமைக்கப்படும் கள அலகுகள் ஆகியவற்றின் உதவியுடனும் இயங்குகிறது.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் :

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன :-

- வீதி நிர்மாணம், புனர்நிர்மாணம், பராமரிப்பு, தரக் கட்டுப்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய நடவடிக்கைகளில் வரும் பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.
- வீதி நிர்மாணம், புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் கடைப்பிடிக்கும் முறைகள், பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் பின்பற்றப்படும் முறைமைகள் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- வீதி கனை வரம்புகள், வீதி நடை பாதைகள் மற்றும் மேல்தட்டு ஆகியவற்றை விசாரணை செய்தலும் வடிவமைத்தலும்.
- பாலங்களுக்கான அத்திவாரங்களை விசாரணை செய்தல்.
- பொருட்களின் பரிசோதனை மற்றும் பல்வகை வடிவமைப்பு சம்பந்தமான பரிசோதனைகளைச் செய்தல்.
- மண் சரிவுகளினால் பாதிக்கப்படும் வீதிகளில் விசாரணை செய்தல், அவற்றை வடிவமைத்தல் மற்றும் திருத்த வேலைகளைச் செய்தல்.
- வீதி நிர்மாணம், புனரமைப்பு மற்றும் தொழிநுட்ப பராமரிப்பு போன்றவற்றில் தொழில்நுட்பவியலாளர்களை பயிற்றுவித்தல்.

## 2.7. காணி சுவீகரித்தல் மற்றும் மீளக்குடியமர்த்தல் பிரிவு

காணி சுவீகரிப்பு மற்றும் மீளக்குடியமர்த்தல் பிரிவானது அனைத்து வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்களிலும் காணி சுவீகரித்தலையும் மீளக் குடியமர்த்தலையும் துரிதப்படுத்துவதன் பொருட்டு தாபிக்கப்பட்டது. இப்பிரிவின் நிர்வாகம் மேலதிக பொது முகாமையாளரின் (சொத்து அபிவிருத்தி) கீழ் வருகின்றது.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் :

- சாதாரண, அவசர சுவீகரிப்பு செயன்முறைகளின் கீழ் 1950 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம் காணி சுவீகரிப்பு செயன் முறைகளை மேற்கொள்வதற்காக, நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு மாகாணப் பணிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட சுவீகரிப்பு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.
- காணி அமைச்சுடன் தொடர்பு கொண்டு தேவையான ஆவண உதவிகளைச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காணி சுவீகரிப்பு எல்லைகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் நில அளவைத் திணைக்களத்திற்கு உதவுதல்.
- காணி சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 2, பிரிவு 5 மற்றும் பிரிவு 7 க்கு ஏற்ப கொடுக்க வேண்டிய அறிவித்தல்கள் சம்பந்தமான ஆவண உதவிகளை பிரதேச செயலகங்களுக்குச் செய்தல்.
- பிரதேச செயலாளர்கள், மதிப்பீட்டுத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து நிபந்தனையான அறிக்கைகளைத் தயாரிப்பதில் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு உதவுதல்.
- கொழும்பு காணி சுவீகரிப்பு உத்தியோகத்தருடைய பிரதேசத்துக்குட்பட்ட காணிகளைப் பொறுப்பேற்றல் மற்றும் மாகாணங்களிலுள்ள ஏனைய பிரதான எந்திரவியலாளர் பிரிவுகளிலுள்ள காணிகளைப் பொறுப்பேற்பதற்கான ஒழுங்குகளைச் செய்தல்.
- சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தல்/ புனரமைத்தல்/ அகலமாக்குதல் போன்றவற்றுக்காக தேவைப்படும் காணிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
- நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஊடாக பணிப்பாளரின் (வரவு செலவுத் திட்டம்) அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும் எதிர்கால காணி சுவீகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செயன்முறைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தொடரும் காணி உரிமையாளர்களுடைய காணி வழக்குகளில் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்துக்கு உதவுதலும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திட- மிருந்து அறிவுரைகளைப் பெறுதலும்.

## 2.8. சூழலியல் மற்றும் சமூகப் பிரிவு

சூழலியல் மற்றும் சமூகப் பிரிவானது மேலதிக பொது முகாமையாளரின் நிர்வாகத்தின் (சொத்து அபிவிருத்தி) கீழ் வருகின்றது. நிலையான அபிவிருத்திக்கான தேசியக் கொள்கையின் கீழ், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செயற் திட்டங்களின் போது சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. சகல அபிவிருத்தித் திட்டங்களிலும் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்வது ஒரு கட்டாய நிபந்தனை. இதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒரு பிரிவை ஆரம்பிக்க வேண்டி இருந்தது. இப்பிரிவு ஆடி 2008 ஆம் ஆண்டு காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியமர்த்தல் பிரிவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின் நிதி பயன்படுத்தப்பட்டது.

சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்புக்களில் ஒரு தொழில்நுட்ப ரீதியான இப்பிரிவு, பாதுகாப்பு நிபந்தனைகளை மேற்கொள்வதுடன், அதனைத் தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது. மேலும் வீதித்துறை அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட பல்வேறான சர்வதேச நிதியளிப்பு முகவர்களுக்கு வழிகாட்டல்களை மேற்கொள்கின்றது. மேலும் சுற்றாடல் மற்றும் சமூகப் பிரிவின் பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதித்துறைக்கு வரும் முதலீடுகளை மேம்படுத்தி உயர்த்துவதுடன், சூழல் சமூகப் பாதுகாப்பின் ஊடாக மேற்கொள்ளும் செயற்திட்டங்களுக்காக அங்கீகாரம் வழங்குகிறது.

**தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்:**

2008 ஆம் ஆண்டு காலத்தில் சுற்றாடல் மற்றும் சமூகப் பிரிவின் ஊழியர்கள், சுற்றாடல் சமூகப் பாதுகாப்பு நிபந்தனைகளைப் பற்றி ஆவணப்படுத்தலை மேற்கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்டங்களும், பகுதிகளுக்கும் உதவுகின்றனர். நாட்டின் சமூகத் தலங்கள், இடங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுகின்ற சூழல் சமூக பகுதி முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) அபிவிருத்திக்கு ஆதரவு வழங்குகின்றது. சூழல் மற்றும் சமூகப் பிரிவினால் மீளாய்வு செய்யப்பட்ட பின்வரும் சூழல் சமூக பாதுகாப்பு நிபந்தனைகளாவன:

சுற்றாடல் பாதுகாப்புக்கள் :

அடிப்படைத் தகவல் கேள்விக் கொத்து
விரைவுச் சுற்றாடல் அளவிடும் சிட்டை
செயற்திட்டத்தின் சுற்றாடல் மற்றும் சமூக அத்தியாயங்கள் - முன் சாத்தியக் கூறு மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை
ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகள்
கேள்வி/ஒப்பந்தப் பத்திரங்களின் சுற்றாடல் நடவடிக்கை திட்டங்கள் பகுதிகள் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திட்டம்

சமூகப் பாதுகாப்புக்கள் :

ஆரம்ப ஏழ்மை மற்றும் சமூக மதிப்பீடு
தன்னிச்சையான மீளக் குடியமர்த்தலைக் காட்டுகின்ற அளவிடும் சிட்டை
உள்ளூர் மக்கள் தொகை அளவிடும் சிட்டை
மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைத் திட்டங்கள் (RAPs)
மீள்குடியமர்த்தல் நடவடிக்கைத் திட்டங்கள் பற்றிய அறிக்கைகளை கண்காணித்தல்.

எவ்வாறெனினும், உறுதியான பகுதிகள் மற்றும் செயற்திட்டங்களின் அவசரம் காரணமாக சுற்றாடல் மற்றும் சமூகப் பிரிவானது மேற்போன்ற ஆவணங்கள் தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளது. சுற்றாடல் மற்றும் சமூகப் பிரிவின் ஊழியர்கள், தேசிய நெடுஞ்சாலை துறைச் செயற்திட்டங்களின் பாதுகாப்பு நிபந்தனைகளை கண் காணிக்கின்றது. கள நடவடிக்கைகள் நடாத்தப்படாத போதிலும், சுற்றாடல் மற்றும் சமூகப் பிரிவானது தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்தின் (STDP) மேற்பார்வை மதியுரைஞர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்படுத்துகை கண்காணிப்பு முறைமையினைத் தயாரித்தல் 2008 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான நடவடிக்கையாக இருந்தது. முன்னமே கூறப்பட்டுவந்த, இந்த நடவடிக்கைகளை முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) யின் உள்ளீடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.9. திட்டமிடற் பிரிவு

திட்டமிடற் பிரிவானது, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லா திட்டமிடல் தொழிற்பாடுகளுக்கும் அதிகாரசபையால் அமுல்படுத்தப்படும் எல்லா வேலைகளினது செயற்திட்ட உருவாக்கம், நிகழ்ச்சித் திட்டமிடல், முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் புவியியல் தகவல் முறைமைப் பிரிவின் வரைபடம் ஆகியவற்றிற்குப் பொறுப்பாக உள்ளது.
இப்பிரிவு பின்வரும் 4 பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. போக்குவரத்து எந்திரவியல் மற்றும் தரவு சேகரிக்கும் பகுதி
2. திட்டமிடல், வகுப்பீடு, நிகழ்ச்சித் திட்டமிடல் முன்னேற்ற கண்காணிப்பு மற்றும் புவியியல் தகவல் முறைமைப் பிரிவு
3. போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவு
4. முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு

எனினும் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் உச்சளவு வரியீட்டினைப் பெறுவதற்கும், மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் திட்டமிடல் பிரிவை பலமடையச் செய்ய வேண்டியுள்ளது. நான்கு பிரிவுகளிலும் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் குறைவாகவே உள்ளது. இது இப் பகுதியின் நாளாந்த வேலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் ஒவ்வொரு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை சீராகவும் தொடர்ந்தும் செய்வதற்கு தடையாக உள்ளது.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

**i. போக்குவரத்து எந்திரவியல் மற்றும் தகவல் சேகரிக்கும் பகுதி :**

இப்பிரிவு போக்குவரத்துத் தரவுகளை சேகரித்தல், விசேட போக்குவரத்து அளவைகள், புள்ளிவிபரம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து தரவுகளைச் சேகரித்தல், வீதிகளை கையேற்றல், ஏனையோருக்குப் போக்குவரத்துத் தரவினை வழங்கல் போன்றவற்றிற்குப் பொறுப்பாக உள்ளது.

- தரவு சேகரிக்கும் நடவடிக்கைகள் :
  போக்குவரத்து அளவைகள், அச்சுப்பார அளவைகள், வீதியின் கரடுமுரடுத் தன்மை அளவைகள் மற்றும் ஏனைய தரவு சேகரிப்பு நடவடிக்கைகள், வேறு பிரிவுகளுக்கும், நிறுவனங்களுக்குமான தரவுகளை சேகரித்தலும் தயாரித்தலும்.
- வழி அமைவிடம் :
  புதிய வீதி வழி அமைப்புக்குரிய வழி அமைவிடம்.

**ii. திட்டமிடல், திட்ட வகுப்பீடு, நிகழ்ச்சித் திட்டமிடல், முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் புவியியல் தகவல் முறைமை பிரிவு:**

இப்பிரிவுக்கு பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) தலைமை தாங்குகிறார். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் சகல திட்டமிடற் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக இருப்பதுடன், இதனது நடவடிக்கைகள் பின்வருமாறு:

***செயற்திட்ட வகுப்பீடு***

- தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் அபிவிருத்திக்கு வேண்டிய செயற்பாடுகளை திட்டமிடுதல், அரசின் கொள்கைகளுக்கு ஏற்பவும், தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கைகளுக்கு ஏற்பவும், நாட்டின் எதிர்காலச் சமூகப் பொருளாதார அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் பாரிய திட்டமிடல்.

- வெளிநாட்டு நிதியத்திற்காக எல்லாப் பெரிய செயற்திட்டங்களின் முன்மொழிவு- களைத் தயாரித்து வெளிக்கள திணைக்களத்திற்கும், தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும் சமர்ப்பித்தல்.
- வெளிநாட்டு நிதியளிப்புக்கான செயற்திட்ட கொள்கைப் பத்திரங்களின் தயாரிப்பும், தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் திரட்டும் நிதியத்திலிருந்து நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை மேற்கொள்ளும் பிராந்திய எந்திரவியலாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட கொள்கைப் பத்திரங்களின் தெரிவு.
- அமுல்படுத்துவதற்கான செயற்திட்ட முன்மொழிவுகளின் அபிவிருத்தியும் வகுப்பாக்கமும்.
- வீதி மற்றும் பாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகத் தெரிவு செய்தல். படிநிலைத் தேவைகள், வசதி வாய்ப்புக்களின் நிலைமைகள், போக்குவரத்து முகாமை/பயன்பாடு, பொது மக்கள் தேவைகள், அரசியல் அழுத்தங்கள் என்பவற்றின் அடிப்படையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வெவ்வேறு பகுதி- யினரால் இனங் காணப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளை முதன்மைப்படுத்தித் தெரிவு செய்தல்.
- தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக முற்சாத்திய ஆய்வுகள் மற்றும் சாத்திய ஆய்வுகளை நடாத்துதல். ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்- பட்ட சாத்திய ஆய்வுகளை மீளாய்வு செய்தல்.
- சூழல் தாக்க மதிப்பீடுகள் (EIA) மற்றும் IEE ஆகியவற்றின் விண்ணப்பங்களைத் தயாரித்தலும் பிற அமைப்புக்களிலிருந்து சூழல் அங்கீகாரங்களைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட வேலைகளை ஒருங்கிணைத்தல்.

*நிகழ்ச்சித் திட்டமிடலும் கண்காணித்தலும்*

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான நிகழ்ச்சித் திட்டமிடல்.
  திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படும் பொது முதலீடுகள் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்ட பிரேரணைகளையும் தயாரித்தல்.
- நிதி முன்னேற்றங்களினதும் பௌதீக முன்னேற்றல், நிதி ஒதுக்கமும், கண்காணித்தலும், அளிக்கப்பட்ட நிலத்தின் உச்சப் பயன்பாட்டை உறுதிப்படுத்தலும்.
- மாதாந்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.

*தரவுப்படுத்தலும் சொத்து முகாமைத்துவமும்*

- வீதி மற்றும் பாலச் சொத்து அபிவிருத்தியும் பராமரிப்பும்
  வீதிகள் மற்றும் பாலங்கள் பற்றிய பரிசோதனைகளை நடாத்துதல்
  தரவுகளை சேகரித்தல், களஞ்சியப்படுத்தல்
  தொடக்க விபரமான பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களையும், முறைமைகளையும் விருத்தி செய்தல்.
- வீதித் திட்டமிடலில் நெடுஞ்சாலை அபிவிருத்தியும் முகாமைத்துவம் மாதிரி 4 இன் விண்ணப்பமும், உரிய தரவுப்படுத்தலின் பராமரிப்பும்
  தரவுகளை சேகரிப்பதற்கும், அவற்றை சீரான முறையில் பேணுவது தொடர்பில் வழிகாட்டல்களையும் செயன்முறைகளையும் விருத்தி செய்தல்.
  தரவு சேகரிப்பது தொடர்பில் அறியத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அறிக்கையிடல்*

- ஐந்து ஆண்டு திட்டமான கூட்டுத்திட்டம் மற்றும் செயல் திட்டத்தைத் தயாரித்தல். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயல் நோக்கமும் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் இனங்காணுதல். அந்த நோக்கங்களை எய்தும் பொருட்டும் தடைகளை நிவர்த்தி செய்வதற்கும் உரிய தந்திரோபாயங்களை மேற்கொள்ளல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கைகளைத் தயாரித்தல்.
- மத்திய வங்கி, புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் ஏனைய பல்வேறு அமைப்புக்களால் கோரப்பட்ட அறிக்கைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளின் அடிப்படையில் அறிக்கைகளைத் தயாரித்தல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சபைக்கான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.

*ஏனைய தொழிற்பாடுகள்*

- அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் சபைப் பத்திரங்களைத் தயாரித்தல்.
- உரிய அங்கீகாரத்தை வழங்குவது தொடர்பில் அளவிலும் நிறையிலும் கூடிய வாகனங்களின் பதிவுகளைக் கட்டுப்படுத்தல். மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் குறித்துரைக்கப்பட்ட அளவிலும், நிறையிலும் கூடிய வாகனங்களின் பதிவுகளை பரிந்துரை செய்து வழங்கல். அத்துடன் விசேட போக்குவரத்து நடவடிக்கைகளுக்கான அங்கீகாரத்தைப் பெறல்.
- நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுற்றுலா அமைச்சு, முதலீட்டுச் சபை, மின்வலு அதிகாரசபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, சார்க் செயலகம் போன்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான அபிவிருத்திச் செயற் திட்டங்களின் செயற்திட்டக் குழுக்களிலும், உள்ளக அமைச்சரவைக் கூட்டங்களிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில் பிரதிநிதித்துவப்-படுத்தல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேலைகள்/செயற்திட்டங்கள் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளர்/தலைவரினால் காலத்திற்குக் காலம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் செயற்திட்டக் குழுக்களைப் பாதுகாத்தல்.

iii. **வீதிப் பாதுகாப்பு போக்குவரத்து முகாமைப் பிரிவு** (RSTM):

வீதிப் பாதுகாப்பு போக்குவரத்து முகாமைப் பிரிவானது (வீ.பா.போ.மு) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் பகுதியின் கீழ் செயற்படுகிறது. நாட்டிலுள்ள முழுத் தேசிய நெடுஞ்சாலைகளின் வீதிப் பாதுகாப்பும் போக்குவரத்து முகாமைத்துவத்திற்கும் உத்தரவாதம் வழங்குவதே இப்பிரிவின் பிரதான வேலையாகும்.

- போக்குவரத்து சைகைகளும் வீதிக் குறியீடுகளும் : உள்ளூர் நிதியளிக்கப்பட்ட செயற் திட்டங்களுக்காக வீதிச் சைகளையும், வீதிக் குறியீடுகளையும் வடிவமைத்தல் மற்றும் வெளி நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற் திட்டங்களுக்காக வீதிச் சைகைகளையும் வீதிக் குறியீடுகளையும் பரிசீலித்தல்.
- வீதிப் பாதுகாப்பின் கீழ் வீதி விபத்து நடக்கக் கூடிய இடங்களை இனங் காணுதல் மற்றும் இவ்விடங்களைத் திருத்துவதற்கான வடிவமைப்புக்களைச் செய்தல். வீதிகள் மற்றும் சந்திகளுக்குத் திருத்தங்கள் தேவைப்படும் இடங்களை வடிவமைத்தலும், அவற்றிற்குரிய பட்டியல்களைத் தயாரித்தலும்.
- குறுக்கு மட்டங்களின் சீர்படுத்தல்.
- வெவ்வேறு வகையான வாகனங்களுக்கான ஒழுங்கு விதிகள் வெளியிடப்படும் வர்த்தமானிப் பத்திரங்கள், வேக எல்லைகள் ஆகியன சம்பந்தப்பட்ட ஆவணங்களைத் தயாரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புதிய வீதிச் சமிக்ஞை விளக்குகள் முறைமையை நிறுவுதல்.
- நடைமுறையில் இருக்கின்ற வீதிச் சமிக்ஞை விளக்குகள் முறைமையை கண்காணித்தலும் பராமரித்தலும்.

iv. **முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) :**

முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவானது (மு.த.பி.) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவின் கீழ் இயங்குகிறது. முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு தகவல் தொழில்நுட்ப தீர்வுகளையும் வலைப்பின்னல், இன்டநெற், ஈமெயில், கணனிக் குறைபாட்டு வேலைகள், தொழில்நுட்பப் பயிற்சி யளித்தல் போன்ற வசதிகளையும் அளிக்கின்றது. மேலும் புவியியல் தகவல் முறைமை (GIS) வீதி வரைபடங்கள், எல்லைகள், மட்டங்கள், இடவமைப்பு வரைபடங்கள் போன்ற வரைபடங்களைத் தயாரிக்கின்றது.

## 2.10 பொறிமுறைப் பிரிவு

கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சீரான இயக்கத்திற்குத் தேவையான வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், பொறிகள், படகுச் சேவைகளை வழங்குதல், அவை சம்பந்தமான சேவைகளை அளித்தலுமே இப்பிரிவின் பொறுப்பாகும். பொறிமுறைப் பிரிவானது தலைமையகத்திலுள்ள பணிப்பாளர் அலுவலகம் மற்றும் போக்குவரத்துப் பகுதி, மருதானையிலுள்ள பராமரிப்பு வேலைத்தளம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. மருதானைக் களஞ்சியத்திலுள்ள உதிரிப்பாகங்களை களஞ்சியப்படுத்தல், வழங்கல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றையும் இப்பிரிவு கையாள்கின்றது.

மேலும் பற்றிவில, கடுவெல மற்றும் குண்டசாலை ஆகிய இடங்களிலுள்ள பெய்லிப் பாலக் களஞ்சியங்களையும் நிறைவேற்றுப் பொறியியலாளர்களின் உதவியுடன் இப்பிரிவு நிர்வகிக்கின்றது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் வளாகத்திலுள்ள கிராமிய பால மறுசீரமைப்பு வேலைத்தள நிர்மாணம் மற்றும் வரையறுக்கப்பட்ட மகாநெகும வீதி நிர்மாண உபகரண நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இயந்திரங்களின் திருத்துதல் ஆகியவற்றிலும் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் :

இப்பிரிவின் முக்கிய பொறுப்புக்களாவன :

- மருதானையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேலைத்தளம், வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண இயந்திர நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் வேலைத்தளங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் வேலைத்தளங்கள் ஆகியவற்றின் உதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல், இயக்குதல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல்.
  பால நிர்மாணம், இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் பெய்லி பாலங்களை கொள்வனவு செய்தல் ஆகியவற்றிற்கு கீழ்வருவனவற்றின் மூலம் உதவி கிடைக்கப்பெறல்.
  (அ) ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி
  (ஆ) அரசாங்க திரட்டு நிதியம்
- இயந்திர தொகுதிகள் மற்றும் வாகனங்களுக்கான சம்பந்தமான சேவைகள் தேவைப்படுமிடத்து வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளுதல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முழு இயந்திரத் தொகுதிகளையும் வாடகைக்கு விடுதல் மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட சூழலில் உள்ள இயந்திரங்களின் வாடகை, பாவனை மற்றும் திருத்தம் சம்பந்தமான தரவுத் தளத்தைப் பராமரித்தல்.
- வாடகை முகாமைத்துவம் - இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் அவை சம்பந்தமான சேவைகள் தேவைப்படுமிடத்து வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளை நிர்வகித்தல் (செலவளித்தல் மற்றும் கொடுப்பனவுத் தேவைகளுக்காக பொருத்தமான பதிவுகளைப் பராமரித்தல்).
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனத் தொகுதிகளுக்கான வருமானப் பத்திரங்களைப் பெறல், காப்புறுதி செய்தல் மற்றும் விபத்துகள் திருட்டுகளின் பின்பு நடவடிக்கையைத் தொடருதலும்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வர்த்தக வாகனங் களுக்கான உறுதிச் சான்றிதழை வழங்குதல்.
- சிக்கனமற்ற வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை ஆய்வுகளை நடாத்திய பின் விற்பனை செய்தலும், அகற்றும் செயன்முறைகளுக்கான தேவையான அங்கீகாரத்தையும் ஒழுங்கு முறையையும் பெறல்.
- வீதித் தொடர்பு இல்லாத ஆறுகளிற்கு குறுக்காகவும், கடல்நீர் ஏரிகளுக்குக் குறுக்காகவும் பாதைச் சேவைகளை பிரதான பொறியியலாளர்களின் உதவியுடன் அளித்தல். (திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் பாதைச் சேவைகள் வழங்கப்பட்டு வருவதுடன், ஊர்காவற்துறை – குறிகட்டுவான் - நெடுந்தீவு ஆகியவற்றுக்கிடையிலான படகுச் சேவையும் நடைபெறுகிறது.)
- கொங்கிறீற்றணைப்பு, சாளரங்கள், உருக்குத் தகட்டுப் பாரமுனைகள் போன்ற பால நிர்மாண உதிரிப் பாகங்களை வழங்குதலும் இருப்பு முகாமைத்துவமும்.
- போக்குவரத்துப் பகுதியினூடாக போக்குவரத்து முகாமைத்துவம்.

## 2.11 பயிற்சிப் பிரிவு

நாட்டின் நெடுஞ்சாலை சார்ந்த முதன்மை நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகும். போதியளவு தேர்ச்சியும் மனநிறைவும் உடைய தொழிற்படையைப் பெற்றி ருத்தல் நெடுஞ்சாலை நிறுவனத்தின் இயக்கத்திற்கும் நம்பகரமான செயற்பாட்டின் நிறைவேற்றுகைக்கும் மிகவும் முக்கியமான தொன்றாகும். வளர்ந்து வரும் தொழில் நுட்ப உலகில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கின்ற பயிற்சியினை வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது மிகவும் முக்கிய தொழிற்பாடாகவும் முதலீடாகவும் கருதுகின்றது. நிறுவனத்தின் பயிற்சிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு இந்தப் பயிற்சிப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பயிற்சிப் பிரிவினது பிரதான குறிக்கோள் வேலையில் வினைத்திறமையான பயனுறுதியான மேம்பாட்டினை அடையும் பொருட்டு பொருத்தமான மனப்பாங்கை விருத்தி செய்வதற்கும், அவர்களுடைய அறிவினைக் கூட்டுவதற்கும் திறமைகளை வளர்ப்பதற்கும் உரிய வசதி வாய்ப்புக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் உள்ள சகல வகையான பணியாளர்களுக்கும் வழங்குதல் ஆகும். இந்தக் குறிக்கோள்கள் பொதுவாக பயிற்சித் தேவைகளை இனங்கண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்துவதன் மூலம் இனங்காணப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டப்பகுதியானது விரிவுரைகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் இது உள்ளக அமைப்புச் செயன்முறைகளையும், ஏனைய நிறுவனங்களினால் நடாத்தப்படும் பொருத்தமான பயிற்சிக் கற்கை நெறிகளையும் உள்ளடக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்**

பயிற்சிப் பிரிவின் வருடாந்த நிகழ்சித் திட்டம் பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது.

- ஒழுங்கான உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை நிர்வகித்தலும், நடாத்துதலும்.
  - விரிவுரைகள்
  - ஆங்கிலத்தில் தொடர்பாடல் அறிவு
  - வியாபார ஆங்கிலம்
  - கருத்தரங்குகள்
  - கணனி செயன்முறைகள்
  - களத்திற்குச் சென்று பார்வையிடல்
- உள்ளக பதவி உயர்வுக்கான பரீட்சைகளை நடாத்துதல்.
- புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கான அறிமுகக் கற்கை நெறிகளை நடாத்துதல்.
- பூரணமான தொழில்சார் தகமைகளைப் பெறுவதற்கும், வடிவமைப்பில் ஒரு வருட அனுபவத்தைப் பெறுவதற்கும் கனிஷ்ட எந்திரவியலாளர்களை வடிவமைப்பு அலுவலகங்களுக்கு நியமித்தல்.
- வருடாந்த தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் வருடாந்த கடல் கடந்த பயிற்சித் தேவைகளைத் தயாரித்தல்.
- மேற்படி தேவைப்பாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்கு ஊழியர்களை நியமித்தல்.
- ஏனைய உள்ளூர் நிறுவனங்களினால் பொருத்தமான பயிற்சி கற்கை நெறிக்கான ஊழியர்களை நியமித்தல்.
- உள்ளூர் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களில் டிப்ளோமா/பட்டப்பின் படிப்பு டிப்ளோமா/பட்டப்பின் படிப்பு போன்ற நீண்டகால கற்கை நெறிகளுக்கான ஊழியர்களை நியமித்தல்.
- ஏனைய நிறுவனங்களிலுள்ள பயிலுநர்கள் பட்டமுன் பட்டதாரிகள் ஆகியவர்-களுக்கான பயிற்சிகளை அளிப்பதுடன், 2009 ஆம் ஆண்டில் எல்லா ஊழியர்களுக்கும் பயிச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிகளை மேற்கொள்ளல்.

## 2.12. சட்டப் பிரிவு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை சம்பந்தப்படும் வழக்குகள் சம்பந்தமான சகல சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே இப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும்.

**தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்**

- பதில் அளித்தல், மறுப்புக்களை தெரிவித்தல், அவதானிப்புக்களைத் தயாரித்தல், ஒப்பந்தங்களைத் தயாரித்தல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜராதல் மற்றும் அது சம்பந்தமான வேலைகள்.
- பொதுச் செல்வழிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளில் எதிர்ஆட்சேபனைகளைத் தயாரித்து கோவையிடல், நீதவான் நீதிமன்றங்களில் ஆஜராதல் மற்றும் வழக்குகளைக் கையாள்தல்.
- அவதானிப்புக்களைத் தயாரித்தலும், தொழில் நியாயாதிக்க சபையில் மறுமொழிகளைக் கோவையிடலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீதி அபிவிருத்தி அதிகாரசபை சம்பந்தப்படும் வழக்குகளில் மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் அறிவுறுத்தும் சட்டத்தரணியாகத் தோன்றி, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உதவுதல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை சம்பந்தப்படும் வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து ஆலோசனைகளில் பங்குபற்றுதல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பல்வேறுபட்ட பிரிவுகளிற்கு சட்ட அபிப்பிராயங்களை வழங்குதல்.
- நிர்வாகத்திற்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையில் நடைபெறும் கலந்துரை- யாடல்களில் கலந்து கொண்டு சட்ட ஆலோசனை வழங்குதல்.
- தேசிய நெடுஞ்சாலைகள் சட்டவாக்கம் சம்பந்தமான கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு சட்டவாக்கத்தைத் தயாரிக்க உதவுதல்.

## 2.13 நிதிப் பிரிவு

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சகல நிதி நிர்வாகமும் இப்பிரிவின் பொறுப்பாகும். நிதிப் பிரிவானது அமைச்சிலிருந்து வீதி நிர்மாணத்திற்கும் பராமரிப்பதற்குமாக பெறப்படும் சகல நிதிகளையும் நிர்வாகம் செய்வதோடு வேறு அரச, தனியார் நிறுவனங்களிலிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் சேதமடைந்த வீதிகளைத் திருத்து-வதற்காக கிடைக்கும் நிதியையும் நிர்வகிக்கின்றது. இப்பிரிவானது பணிப்பாளரினால் (நிதி) தலைமை தாங்கப்படுகிறது. அவருக்கு ஒரு பிரதிப் பணிப்பாளர், கணக்காளர் குழு ஒன்றும் ஆதரவுப் பகுதியினரும் உதவுகின்றனர். அங்கு ஒன்பது பிரதேசக் கணக்காளர்களும், ஒன்பது பிரதேசங்களிலும் அது தொடர்பான பதவிநிலை உத்தியோகத்தர்களும் இருக்கின்றனர். அவர்கள் மாகாணப் பணிப்பாளர்களின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றனர்.

### தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்

இப்பிரிவு விளம்பரப் பலகை வருமானம், பரிசோதனை வருமானம் போன்ற சகலவற்றையும் சேகரித்து, முறையான முதலீடு, நிதி முகாமைத்துவம் ஆகியவற்றின் மூலம் வருமானத்தை அதிகரிக்கிறது.

- நிதிப் பிரிவு முதலீட்டு வேலைகளின் செலவினத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து மேந்தலைச் செலவுகளை அதன் எல்லைக்குள் வைத்திருக்கின்றது. உரிய நிதிப் பதிவுகளைச் செய்து பேணுவதுடன், மாதாந்த, வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கின்றது. சிறந்த நிதி ஒழுக்கத்திற்கான முறைமைகளை வகுப்பதுடன் வழி சம்பந்தமான விஷயங்களையும் கையாள்கிறது.
- எழுது கருவிகள்/சொத்துக்கள் பொருட் பதிவேடுகளுடன் தொடர்புடைய வழங்கல் செயற்பாடுகளுக்கும் இப்பிரிவு பொறுப்பாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.14 நிருவாகப் பிரிவு

ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, ஒழுங்காற்று நடவடிக்கைகள், ஊழியர் வரவு முகாமை மற்றும் ஊழியர் விடுப்பு போன்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாக விடயங்களுக்கு இப்பிரிவே பொறுப்பாகும்.

**தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும் :**

நிருவாகப் பகுதியானது பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது.

- அதிகாரசபையின் ஆளணி மற்றும் நிர்வாகம் சம்பந்தமான கொள்கைகளை வகுத்தலும், அமுலாக்குதலும்.
- அதிகாரசபையின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகள், ஒழுங்கு முறைகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றுதலும் அமுல்படுத்துதலும்.
- இந்த அதிகாரசபைக்கு ஆளணிச் சேவைகளை வழங்குதல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இயக்கத்திற்குத் தேவையான அலுவலகச் சேவைகளையும், துணைச் சேவைகளையும் வழங்குதல்.

நிர்வாகப் பகுதியின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

***ஆளணித் தொழிற்பாடுகள்:***

- ஊழியர்களை ஆட்சேர்த்தல்
- ஊழியர்களை பணிக்கு அமர்த்துதல்
- ஊழியர்களின் பதவியுயர்வு
- ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு சம்பந்தமான செயற்பாடுகள்
- கைத்தொழில் உறவுகள்
- ஒழுக்காற்றுச் செயற்பாடுகள்
- ஊழியர்களின் வருகை மற்றும் விடுப்பு சம்பந்தமான செயற்பாடுகள்.

***பொது நிருவாகத் தொழிற்பாடுகள்,:***

- அலுவலக இடவசதி மற்றும் தலைமைக் காரியாலய பராமரிப்புச் சம்பந்தமான செயற்பாடுகள்.
- தொலைபேசி, அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் முதலிய துணைச் சேவைகளை வழங்குதல்.

***நிறுவனத் தொழிற்பாடுகள்:***

- ஆளணி மற்றும் அலுவலக முகாமைத்துவம் சம்பந்தமான கொள்கைகள், விதிகள், ஒழுங்கு விதிகள், செயன்முறைகள், கைநூல் மற்றும் அறிவுறுத்தல்களை வகுத்தல்.
- விதிகள், ஒழுங்கு விதிகள், செயன்முறைகள் அடங்கிய சுற்றறிக்கைகளை வழங்குதல்.
- சுற்றறிக்கைகளின் அமுலாக்கத்தைக் கண்காணித்தல்.
- நலன்புரி நடவடிக்கைகள்
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பராமரிக்கப்படும் ஆயுள் காப்புறுதியை அறிமுகப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.15 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

சபை/அதிகாரசபையினால் இவ்வாண்டுக்கென அனுமதிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரமே உள்ளகக் கணக்காய்வு வேலைகள் நடைபெறுகின்றன. நாடு முழுவதிலும் உள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இயக்கம் மற்றும் நிதி நடவடிக்கைகளின் அளவு, நிறுவன அமைப்பு, கணக்கீட்டு முறைமை, முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே இத்திட்டம் வடிவமைக்கப்படுகின்றது.

**தொழிற்பாடுகளும் பொறுப்புக்களும்:**

இந்தப் பிரிவின் தொழிற்பாடுகளாவன :

- கணக்காய்வுத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்கின்ற போது ஆபத்துள்ள பிரதேசங்களை இனங்காணுதல்.
- கணக்காய்வுத் திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் கணக்கீட்டு பதிவுகள், கூற்றுக்கள், வருமானங்கள் உட்பட சகல உத்தியோக ஆவணங்கள் பதிவேடுகளைப் பரிசீலித்தல்.
- விதிகள், ஒழுங்கு விதிகள், முறைமைகள், செயன்முறைகள் பின்பற்றப்படுவதை பரிசீலித்தல்.
- நிறுவனத்திலுள்ள முறமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் செயன்முறைகளை மீளாய்வு செய்தல்.
- முறைமைகள், கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்கு முறைமைகளிலுள்ள பலவீனங்கள், குறைபாடுகளை இனங்கண்டு அவற்றை முன்னேற்றுவதற்கான சிபாரிசுகளைச் செய்தல்.
- சொத்துக்கள் மற்றும் பொருட் பதிவேட்டு விடயங்களின் சிறந்த கட்டுப்பாட்டினை உறுதி செய்தல்.
- செயற்திட்டம்/வேலை, ஊழியர் பயன்பாடு, பொருட் பதிவேடுகளின் கட்டுப்பாடு ஆகியவற்றை பரிசீலித்தல்.
- ஊழல்கள், விரயங்களை கட்டுப்படுத்துவதில் உதவுதல். ஊழல்கள், விரயங்களைப் பற்றி அறிக்கையிடல்.
- முகாமைத்துவத்தினால் குறித்தொதுக்கப்படும் விடயங்கள் பற்றி விசேட புலனாய்வுகளை மேற்கொள்ளல்.
- அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் மூலம் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.0 செயலாற்றுகை

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவுகளின் வருடத்திற்குரிய செயலாற்றுகை கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

### 3.1 பராமரிப்பு முகாமைத்துவ நிர்மாணப் பகுதியின் செயலாற்றுகை

***வீதி பராமரிப்பை அமுலாக்குதல் - தேசிய நம்பிக்கை நிதியம்***

இவ்வாண்டு காலப் பகுதியில், இப்பகுதியின் பெரும்பாலான வேலைகள் நேரடியான தொழில் மூலம், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரான மணல் அடைப்பு வேலைகள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) மூலமும் மேற்கொள்ளப்பட்டன. தேசிய நெடுஞ்சாலை அமைச்சின் நாளாந்த பராமரிப்பானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நேரடி தொழிற்சாலைகள் மூலமும், கேள்விப்பத்திர முறை மூலமும் நிறைவேற்றப்பட்டன. 5 மில்லியன் ரூபா வரையிலான வேலைகளே இவ்வாறு நிறை-வேற்றப்பட்டன. இவ்வாண்டு காலத்தில் 11,902 கிலோ மீற்றர் வீதிகளும், 3065 பாலங்களும் திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலுள்ள பயணிகள் பாதைகளும் கிடைக்கப்பெற்ற நிதியைக் கொண்டு திருப்திகரமான முறையில் பராமரிக்கப்பட்டன.

நாளாந்த மற்றும் அவசர அபிவிருத்தி வேலைகளுக்காக 3103.5 மில்லியன் ரூபா மாகாணப் பணிப்பாளர்களுக்கு அளிக்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்று எந்திரவியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வீதி நிலைமை அளவீடுகளுக்கேற்ப நாளாந்த பராமரிப்புக்கான நிதி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்குமான உண்மையான தேவைகளின் அடிப்படையில் வீதி அபிவிருத்திக்கான நிதி வழங்கப்பட்டது.

***காலத்துக்குக் காலம் நடைபெறும் பராமரிப்பு***

இந்த வருட காலப் பகுதியில் மொத்தமாக 670 மில்லியன் ரூபா காலத்துக்குக் காலம் நடைபெறும் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மணல் அடைப்பு வேலைகள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களினாலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நேரடி முறைகளினாலும் செயற்படுத்தப்பட்டன. மணல், தார் போன்றவை தட்டுப்பாடுகள் இருந்த போதிலும், மொத்தமாக 596 கிலோ மீற்றர் மணல் அடைப்பு வேலைகள் இவ்வருட காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டன.

**அட்டவணை 02 : விசேட அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான தேசிய வீதி அபிவிருத்தி**

| வீதிப் பெயர்/பஸ் இலக்கம் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (ரூ.மில்.) | 2008 மார்கழி மாதத்தி-லுள்ள செலவீனம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| மன்னார் - புத்தளம் வீதிகளின் புனரமைப்பு (மரிச்சிக்கடை வழியாக) | 106 | 3663 | 30% |
| பாரியதம்புள்ளை அபிவிருத்தி திட்டத்திற்கான தேசிய வீதி-கள் மேம்படுத்துகை | 230 | 64.28 | 25% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வீதிப் பெயர்/பஸ் இலக்கம் | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (ரூ.மில்.) | 2008 மார்கழி மாதத்தி-லுள்ள செலவீனம் (ரூ.மில்.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| பதுளை – கண்டி மாற்றுப் பாதைகள் (இராஜ மாவத்தை) (4.2 – 5.7 கிலோ மீற்றர்) | 48.60 | 28.23 | 100% |
| பதுளை – கண்டி மாற்றுப் பாதைகள் (இராஜ மாவத்தை) (5.7 – 7.7 கிலோ மீற்றர்) | 52.63 | 23.76 | 35% |
| குருநாகலிலுள்ள நடைபாதையின் நிர்மாணம் | 37.00 | 20.50 | 95% |

### பலவீனமான பாலங்கள் நிகழ்ச்சித் திட்டம்

பலவீன பாலங்களை அபிவிருத்தி செய்வதற்கு 308 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. பலவீனமான பாலங்களை மேம்படுத்தும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மணல் அடைப்பு வேலைகள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவத்தில் (ICTAD) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மூலமும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நேரடித் தொழிலாளர்களின் மூலமும் நிறைவேற்றப்பட்டன. 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு களிலிருந்து தொடரும் வேலைகள் உட்பட மொத்தமாக 85 பாலங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இப் பாலங்களில் 24 பாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டன.

**அட்டவணை – 03: பலவீனமான பாலங்களை மேம்படுத்தல்**

| மாகாணம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப்பட்ட எண்ணிக்கை | நடைபெறும் செயற்திட்டம் | செலவு |
|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 17 | 02 | 09 | 71.79 |
| மத்திய மாகாணம் | 09 | 01 | 05 | 30.85 |
| தென் மாகாணம் | 08 | 01 | 05 | 44.71 |
| வட மாகாணம் | 09 | 05 | 01 | 1.26 |
| வடமேல் மாகாணம் | 21 | 09 | 07 | 75.91 |
| வடமத்திய மாகாணம் | 04 | 03 | 01 | 24.6 |
| ஊவா மாகாணம் | 05 | 01 | 01 | 13.25 |
| சப்பிரகமுவ மாகாணம் | 12 | 02 | 08 | 52.54 |
| **மொத்தம்** | **85** | **24** | **37** | **314.91** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகலை மாவட்டத்திலுள்ள நடைபாதையின் நிர்மாணம்





மெட்டிபோக்க பாலம் (பலவீனமான பால நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்)



அளவ்வ டம்பிளஸ் வீதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறுப்பிட்டிய பாலம் (பலவீனமான பால நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்



**முன்னேற்றத்திற்கான கட்டுப்பாடுகள்**

- முற்பணம் குறைவு
- குறைவான ஒதுக்கம்
- குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக திறைசேரியால் வழங்கப்பட்ட காசு நிதி
- கிடைக்கத்தக்க வளங்களின் தவறான பங்கீடு (பதவியினர், வாகனங்கள் போன்றன)
- வீதி அடைப்புக்கான மூலப்பொருட்கள், தார் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கான முறைகளில் போட்டித்தன்மை இல்லை.

**செயல் நடவடிக்கை எடுக்கப்பட்ட பிரேரிக்கப்பட்ட பரிகரிப்புக்கள்**

- காசு ஓட்டத்தின்படி முற்பணம் கொடுப்பதற்கு திறைசேரி அறிவிக்க வேண்டும்.
- உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பாக ஒழுங்கான முறைமை பின்பற்றப்பட வேண்டும்.
- போட்டியும் சரியான முறைமையும் பின்பற்றப்பட வேண்டும்.

## 3.2 வேலைப் பிரிவின் செயற்படுகை

2008 ஆம் ஆண்டிற்கான இப்பகுதியின் பின்வரும் செயற்திட்டங்களுக்கான ஒதுக்கம் மற்றும் உண்மைச் செலவினங்கள் கீழே தரப்படுகின்றது.

**அட்டவணை : 04 (அ) வீதிகளை அகலமாக்குதலும் மேம்படுத்தலும்**

| | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| **வெளிநாட்டு உதவி (ரூபா.மில்லியன்)** | 4898.10 | 4221.78 |

**அட்டவணை : 04 (ஆ) ரணவிரு கிராமம்**

| | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| **வெளிநாட்டு உதவி (ரூபா.மில்லியன்)** | 555.00 | 326.54 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 04 (இ) - சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கியின் உதவி யுடனான ஏழைகள் நேய கிராமிய அபிவிருத்தி

| | மீள்நிரம்பக் கூடிய வெளிநாட்டு உதவி (ரூபா.மில்லியன்) | உள்நாட்டு நிதி (ரூபா.மில்லியன்) | மொத்தம் (ரூபா.மில்லியன்) |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 1391.00 | 180.00 | 1571.00 |
| செலவு | 1283.65 | 191.11 | 1474.76 |

அட்டவணை : 04 (ஈ) - இலங்கை சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீளெழுச்சித் திட்டம் (STAART)

| | மீள்நிரம்பக் கூடிய வெளிநாட்டு உதவி (ரூபா.மில்லியன்) | உள்நாட்டு நிதி (ரூபா.மில்லியன்) | மொத்தம் (ரூபா.மில்லியன்) |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 294.50 | 51.97 | 346.47 |
| செலவு | 316.10 | 50.85 | 366.95 |

வருடத்தின் பின் அரைப் பகுதியில் ஒப்பந்தக்காரர்களின் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான பணம் போதியளவு கிடைக்காமையினால், வேலைகளின் முன்னேற்றம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 2008 மார்கழி 31 இல் முடிவடைந்த வேலைகளுக்காக வீதிகளை அகலமாக்குதல், மேம்படுத்தல் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை 1210 மில்லியன் ரூபாவாகும்.

அட்டவணை : 05 – 2008 மார்கழி மாதத்திலுள்ள முன்னேற்றம்

| | 2008 இல் வழங்கப்பட்டவை | 2008 இல் பூர்த்தியானது | 2008 இல் நடைபெறுபவை |
|---|---|---|---|
| வீதிகளை அகலமாக்கு தலும் மேம்படுத்தலும் | 45 | 36 | 103 |
| ரணவிரு கிராமம் | 12 | 6 | 6 |
| PPRD | 5 | 8 | 10 |
| STAART | --- | 140 | 5 |
| மொத்தம் | 62 | 180 | 124 |

**முன்னேற்றத்திற்கான கட்டுப்பாடுகள்**

*பௌதீக*

பொதுவாக பாரிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்ட இவ்வாண்டு காலத்தில் இலங்கையில் வீதி அமைப்பிற்கான மூலப் பொருளுக்கான (தார்) கேள்வி அதிகரித்தது காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக இரண்டு மாதங்களுக்காக பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதன் காரணமாக மூலப் பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் வேலை முன்னேற்றம் பாதிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் கிரயமும் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் காரணங்கள் காரணமாக வேலைகளின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது

1. காணி சுவீகரிப்பின் போது ஏற்பட்ட மேலதிக காலம்
2. பொது வசதிகளை மீளமைப்பதற்கு ஏற்பட்ட அதிக காலம்
3. இந்த இடங்களில் அபிவிருத்தி நடவடிக்கைக்களை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக வேலையின் நோக்கத்தில் மாற்றம்
4. எதிர்பாராத நிலைமைகள் காரணமாக
5. கால நிலையில் ஏற்பட்ட மாற்றம்

*நிதியியல்*

1. திறைசேரியினால் நிதி முற்பணம் வழங்கப்படுதலில் தாமதம் காரணமாக
2. எரிபொருள் மூலப்பொருள் ஆகியவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு

**சீர்படுத்தும் நடவடிக்கைகளும் பிரேரணைகளும்**

ஒப்பந்த நிபந்தனைகளில் வழங்கப்பட்ட ஏற்பாடுகள் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொடுப்பனவில் தாமதம் காரணமாக, ஒப்பந்தக்காரர்களுக்கு வட்டியும், நட்டஈடும் செலுத்தப்பட்டது. ஒப்பந்த ஏற்பாடுகளின் பிரகாரம் மணல் அடைப்பு வேலைகள் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) வெளியிடப்படும் அடிப்படையில் இந்தக் காலப் பகுதிக்கான விலையேற்றங்களைக் கொடுப்பதன் மூலம் நட்டஈடு செய்யப்பட்டது.
எதிர்பாராத நிலைமை கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவை காரணமாக ஏற்பட்ட தாமதத்தால் ஒப்பந்தங்களுக்கான நேர நீடிப்பு வழங்கப்பட்டது.

**3.3 ஆதன முகாமைத்துவம் மற்றும் வருமானப் பிரிவின் செயலாற்றுகை**

ஆதன முகாமைத்துவ வருமான பகுதியின் நடவடிக்கைகளின் சுருக்க விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அறிவித்தற் பலகைகள்/விளம்பரப் பலகைகள் / சமிஞ்ஞை பலகைகள்:**

வீதிப் பக்க நேரங்களில் அறிவித்தற் பலகைகள்/விளம்பரப் பலகைகள்/ஏனைய விளம்பரப் பொருட்கள் என்பவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தலானது 2008 மார்கழி 31 ஆம் திகதி வரை தொடரப்பட்டது.
அறிவித்தற் பலகைகள், விளம்பரப் பலகைகள், விளம்பரப் பொருட்களை நிறுவுதல், சுற்று வட்டங்களை பராமரித்தல் போன்றவற்றிற்கான வழிகாட்டல்களின் பிரகாரம், உடன் படிக்கைகள், ஏனைய அறிக்கைகள் ஆகியவற்றிற்கான புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வகையில், முக்கிய விளம்பர இடங்கள் இனங் காணப்பட்டு, இவற்றில் விளம்பரம் நிறுவும் உரிமை, ஏல விற்பனை மூலம் கேள்விப் பத்திர செயன்முறை ஊடாகக் கையளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பாரிய விளம்பரப் பலகைக்கான ஏலம்:**

1. பேலியகொடயிலுள்ள கைவிடப்பட்ட பாலத்தின் உச்சியில் விளம்பரப் பலகையை வாடகைக்கு விடுவதற்கு ஏலம் நடைபெற்றது. வரையறுக்கப்பட்ட செலின்கோ காப்புறுதி நிறுவனத்திற்கு 4.1 மில்லியன் ரூபா பெறுமதியில் அளிக்கப்பட்டது.
2. பேலியகொடயிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான மிகப்பெரிய விளம்பரப் பலகையை வாடகைக்கு விடுவதற்கு ஏலம் நடைபெற்றது. வரையறுக்கப்பட்ட மொபிடெல் (தனியார்) நிறுவனத்திற்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியில் அளிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய நெடுஞ்சாலைகளில் இளைப்பாறும் இடங்களைத் தாபித்தல்**

கொழும்பு - இரத்தினபுரி – வெள்ளவாயா – மட்டக்களப்பு வீதி, பேலியகொடை – புத்தளம் வீதி, பெரகல - ஹாலிஅல வீதி மற்றும் குருநாகல் - பாதெனிய – அநுராதபுரம் வீதி ஆகியவற்றில் இளைப்பாறும் பூங்காக்களை அமைப்பதற்கான அக்கறையுள்ள நபர்களிடமிருந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு விளம்பரப்-படுத்தப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் களுகல – பிட்டவல வீதியில் இளைப்பாறும் இடம் திறக்கப்பட்டுள்ளது.

**நுவரெலியாக் களியாட்ட காலத்தின் போது கடைகளிலிருந்து கிடைத்த வருமானம்**

நுவரெலியாவின் வீதி ஒதுக்கிடங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் பெற்ற வருமானம் ரூபா 193,750.00 ஆகும்.

**அட்டவணை: 06 - வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2008 ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கான வருமானச் சேகரிப்பு விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன**

| | **உருப்படிகளின் விபரம்** | 2006 வருமானம் (ரூபா) | 2007 வருமானம் (ரூபா) | 2008 வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | விளம்பரப் பதாதைகள் மீதான வருமானம் | | 6,054,265.79 | 7,218,625.07 |
| 2 | கடைத் தொகுதி வாடகை | | 942,561.30 | 1,824,833.99 |
| 3 | பஸ் தரிப்பிடம் மீதான வருமானம் | --- | --- | 51,750.00 |
| 4 | தொலைக்காட்சி கம்பி மரம் மீதான வருமானம் | | --- | 629,473.20 |
| 5 | வீதிக்குக் குறுக்கான விளம்பரப் பலகை மீதான வருமானம் | 14,591,883.00 | 13,967,533.00 | 16,146,250.00 |
| 6 | விளம்பரப் பலகை மீதான வருமானம் | | 20,979,895.55 | 33,023,465.70 |
| 7 | வியாபார சீட்டிழுப்பு கடைகள் மீதான வருமானம் | | 2,317,066.61 | 629,533.98 |
| 8 | சுற்றுவட்ட வீதி பராமரிப்பு மீதான வருமானம் | --- | --- | 44,500.00 |
| 9 | அனுமதியளிக்கப்படாத விளம்பரப் பலகையை அகற்றுதல் தொடர்பான வருமானம் | --- | --- | 254,359.15 |
| 10 | நுவரெலியாவின் பருவகால கடைகளிலிருந்து பெற்ற வருமானம் | --- | 1,080,250.00 | 193,750.00 |
| | **மொத்தம்** | 14,591,883.00 | 45,341,572.25 | 60,016,541.09 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.4 எந்திரவியற் சேவைகள் பிரிவின் செயலாற்றுகை

2008ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு வேலைகள், சட்டக தகைப்பு முன் தகைப்புக் கொங்கிறீட்(PSC) வகை மேற்தளப் பாலம் 7.00 மீற்றர் நீளத்திலிருந்து 32.5 மீற்றர் நீளம் வரை எல்லாமாக 120 மீற்றர் நீளத்தினை அளவாகக் கொண்டு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக இந்த வருட காலப் பகுதியில் பல வகையான பாலங்கள் வடிவமைக்கப்பட்டன. முன்னைய வருடத்திலிருந்து தொடரப்பட்ட 03 பாலங்கள் மொத்தமாக 44 பாலங்கள் இந்த வருடகாலப் பகுதியில் கையாளப்பட்டன. இதில் 13 பாரிய பாலங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், 03 பாலங்கள் 2009 இல் மேற்கொள்ளப்படும். அகலமாக்குதல் மேம்படுத்தல் செயற்திட்டம், லண்டன் நிதியிடப்பட்ட செயற்திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிடப்பட்ட செயற்திட்டங்கள், பல்வகையான வெளிநாட்டு உதவி நிதிச் செயற்திட்டம், பொது முதலீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புனரமைப்புக்கு இனங்கப்பட்ட பாலங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் வேண்டுகோளின்படி அமைக்கப்பட்ட பாலங்கள் போன்ற செயற்திட்டங்கள் இப்பகுதியினால் கையாளப்பட்டன.

34 பாலங்களுக்குரிய வடிவமைப்பு, வரைபுகள், அளவைகளின் நிரல் மற்றும் எந்திரவியலாளர்களின் மதிப்பீடுகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி (CAARP) யின் சகல கட்டமைப்புக்களும் பால வடிவமைப்பு அலுவலகத்தால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுவீடனிடம் நிதியிட்ட 04 பாலங்கள் மற்றும் பெய்லி திட்ட 03 பாலங்கள் ஆகியவற்றிற்கான வரைபுகள், சாலைகளின் நிரல், எந்திரவியலாளர்களின் மதிப்பீடுகள் போன்றவற்றிற்கான தயாரிப்புக்களும், கட்டமைப்புக்கான வடிவமைப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டன. எல்லாமாக 41 பாலங்கள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், இச்செயற் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 3648.9 மில்லியன் ரூபா ஆகும்.

மேலே குறிக்கப்பட்ட வேலைகளுக்கு மேலதிகமாக கள நிலைமைகளின் மாற்றத்தின் காரணமாக இன்றியமையாததாக இருந்த ஏற்கனவே வடிவமைக்கப்பட்டதிற்குத் திருத்தங்கள் போன்றன தவிர்க்கப்பட்டன.

மீள்நிர்மாணத்திற்காக பொத்துவில் - பாணம வீதியில் அமைந்துள்ள 7/1 ஆம் இலக்க பாலத்திற்கான வடிவமைப்பு வரைபுகளும் திருத்தப்பட்டது. கடவத்தை சுரங்கப் பாதைக்கான வடிவமைப்பும் வரைபுகளும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை (NWS&DB) யின் வேண்டுகோளின்படி திருத்தம் செய்யப்பட்டது. ஒறுகொடவத்தை மேம்பாலத்திற்கான மாற்றுப் பிரேரணைக்கான வடிவமைப்பு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. செயற்திட்டப் பணிப்பாளர்களின் வேண்டுகோளின் பேரில் பாலங்கள் வடிவமைப்புக் காரியாலயத்தினால் செயற்திட்ட முகாமைத்துவ அலகுகளிற்கு, பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.

1. பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டப் பிரிவின் செயற்திட்ட பணிப்பாளர்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஐந்து அவுஸ்திரிய பாலங்களுக்கான MCE சத்தி அன்ட் மச்சினென்போவ ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட 07 வடிவமைப்பு அறிக்கைகளை பரிசீலனை செய்தல்.
2. பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டப் பிரிவின் செயற்திட்ட பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம் ஐந்து அவுஸ்திரிய பாலங்களுக்கான MCE சத்தி அன்ட் மச்சினென்போவ ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட 208 வரைபுகளை பரிசீலனை செய்தல்.
3. பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டப் பிரிவின் செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம் கொரிய எந்திரவியல் மதியுரைஞர் கூட்டுத்தாபனத்தால் சமர்பிக்கப்பட்ட பாதெனிய – அனுராதபுரம் வீதிச் செயற் திட்டத்திற்கான வரைபுகள் திருத்தம் செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டப் பிரிவின் செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம், கட்டுகஸ்தோட்டை பாலத்திற்காக SD&CC நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து வடிவமைப்பு அறிக்கைகளை பரிசீலனை செய்தல்.

5. பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டப் பிரிவின் செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பிரகாரம் கிண்ணியா பாலத்திற்கான ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்தளத்தினை ஆரம்பிப்பதற்கான 03 பிரேரணைகளை பரிசீலனை செய்தல்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கிச் செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் பேரதெனிய – பதுளை – செங்கலடி வீதியில் அமைந்துள்ள 04 பாலங்கள் (பால இல: 282/2, 282/3, 283/1 மற்றும் 284/4), யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதியில் அமைந்துள்ள 09 கட்டமைப்புக்கள் மற்றும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள 11 கட்டமைப்புக்கள் ஆகியவற்றிற்கான உரிய விபரமான வடிவமைப்புக்கள், வரைபுகள், சாலைகளின் நிரல்கள், எந்திரவியலாளர்களின் மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டன.

7. வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலைகள் செயற்திட்டப் பிரிவின் செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலைகளில் உள்ள (வட பிராந்தியப் பகுதி) உயர்மட்ட வீதிக்குக் குறுக்கே ஒரு இரட்டைப் பெட்டிப் பாலத்திற்கான விரிவான வடிவமைப்பு, வரைபுகள், சாலைகளின் நிரல், எந்திரவியலாளரின் மதிப்பீடுகளின் தயாரிப்புக்கள் போன்றன பூர்த்தி செய்யப்பட்டது.

8. தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கான செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிசளிப்பு அளவீடுகளுக்கான அறிக்கைகளை பரிசீலனை செய்வதும், தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்திலுள்ள அதிகமான பாலங்களில் ஏற்பட்ட வெடிப்புக்களுக்கான பரிசோதனை.

9. உலக வங்கிச் செயற்திட்டப் பிரிவின் செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் கொழும்பு – கண்டி வீதியிலுள்ள பக்கச் சுவருக்கான வரைபுகளைத் தயாரித்தலும் விரிவான வடிவமைப்பும்.

10. இங்கிலாந்து உருக்குப் பால செயற்திட்டப் பிரிவுக்கான செயற்திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமல்லாத வீதிகளில் உள்ள 03 இங்கிலாந்து உருக்குப் பாலத்திற்கான விலையிடப்பட்ட சாலைகளின் நிரலின் தயாரிப்பு, வடிவமைப்பு அறிக்கைகள், வரைபுகள் போன்றவற்றை பரிசீலனை செய்தல்.

இவ்வருட காலத்தில் 45 ஆரம்ப விசாரணைகள், 05 விபரமான எந்திரவியல் அளவீடுகள், நிர்மாணத்தின் போது ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக பால நிர்மாணப் பகுதிகளுக்கு 16 விஜயங்கள் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 09 எந்திரவியலாளர்களுக்கு தொழில் மீளாய்வுப் பரீட்சைக்கான வடிவமைப்புப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

மேலே கூறப்பட்டதற்கு மேலதிகமாக பணிப்பாளர் (எந்திரவியல் சேவை) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (பால வடிவமைப்பு) ஆகியோர் 07 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு தலைவராக செயற்பட்டனர். பால வடிவமைப்புப் பிரிவிலுள்ள ஏனைய உத்தியோகத்தர்கள் 17 தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு அங்கத்தினராகச் செயற்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.5 நெடுஞ்சாலைகள் வடிவமைப்புப் பிரிவின் செயலாற்றுகை

2008 ஆம் ஆண்டுக்கான நெடுஞ்சாலைகள் வடிவமைப்பின் பிரிவின் செயலாற்றுகை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் பிரிவின் வேலை முன்னேற்ற விபரங்கள் அட்டவணை – 07

| அ. வீதிகள் | | நீளம் (கி.மீ.) | 2008ம் ஆண்டின் குறிக்கோள் | பூர்த்தி யாக்கப்பட்ட வீதம் |
|---|---|---|---|---|
| 01 | கம்பஹா – யக்கலை வீதி | 4.0 | 100 | 100 |
| 02 | ஊரபொல – மீவித்திகம்மன வீதி | 2.0 | 100 | 100 |
| 03 | பாலாவி – கல்பிட்டிய வீதி – 3ம் கட்டம் (14 - 18 கி.மீ.) | 4.0 | 100 | 100 |
| 04 | களனிசிறி பாலத்தின் அணுகும் வீதி (கொஸ்வத்தைப் பக்கம்) | | | |
| | (i) கொழும்பு – ஹென்வெல்ல லோ லெவல் வீதியிலிருந்து நேரடியாக அணுகும் வீதி (A010) | 0.6 | 100 | 100 |
| 05 | நிலக்கரி மின்வலுத் திட்டம் மற்றும் நுரைச்- சோலைக்கு பாலாவி – கல்பிட்டிய வீதி- யிலிருந்து செல்லும் பிரதான அணுகல் வீதி(11) | 4.2 | 100 | 100 |
| 06 | தேசிய நெடுஞ்சாலைக்குச் செல்லும் வீதியும் இப்பலகம போர் வீரர் கிராம<br>பிரதான வீதியும் | | | |
| | (9.1) 7-820 கி.மீற்றர் வரை தலாவ – கெக்கிராவை வீதியிலிருந்து (B219) – வட பகுதிக்கு அணுகும் வீதி) இப்பலகம போர் வீரர் கிராமத்திற்குச் செல்லும் உரிய பாதை | 7.0 | 100 | 100 |
| | (9.2) தோணிக்கல் - கலாவேவ – கலேவல (B423) (தென் பிராந்திய அணுகு வீதி) வீதியிலிருந்து இப்பலகம போர் வீரர் கிராமத்திற்குச் செல்லும் வீதி | 7.0 | 100 | 100 |
| | (9.3) இப்பலோகமவில் பிரேரிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்திற்கான வீதி நிர்மாணம் | | | |
| | (9.3.1) பிரதான உள்ளூர் வீதிகள் - கட்டம் 1 (500 வீடுகள் வரை) | 5.4 | 100 | 100 |
| | (9.3.2) உள்ளூர் வழி வீதிகள் (வீடுகளுக்கு செல்லும் பாதை) கட்டம் 1 (500 வீடுகளுக்கு செல்லும் பாதை) | 5.7 | 100 | 100 |
| | (9.3.3) உள்ளூர் வழி வீதிகளுக்குச் செல்லும் பாதை (வீடுகளுக்குச் செல்லும் பாதை) கட்டம் 11 (ஏலவேயுள்ள வீடு-களுக்குச் செல்லும் வழி) | 7.0 | 100 | 100 |
| 07 | பேஸ்லைன் வீதி (பகுதி 2 திட்டங்களைத் தயாரிப்பதற்காக சுவீகரிப்பு எல்லைகளைக் குறிப்பிடுதல்) | 7.5 | 100 | 100 |
| 08 | அம்பாறை நகரத்திலுள்ள காரைதீவு – அம்பாறை வீதி (A031) அம்பாறை - இங்கிரியகல வீதி (AB001) மற்றும் அம்பாறை – உஹன – மகா ஓயா வீதி (AA027) ஆகிய வீதிச் சந்திகளை அலகமாக்கி மேம்படுத்தல் | 3.4 | 100 | 100 |
| 09 | கந்தளாய் 157-160 கி.மீற்றர் வரையான அம்பேபுஸ்ஸ– குருநாகல – திருகோணமலை (006) வீதிக்கான மாற்று வழி வடிவமைப்பு | 3.0 | 100 | 100 |
| 10 | மெல்லாவகெதரவிலுள்ள பாலங்களுக்குச் செல்லும் வடிவமைப்பு | 2.5 | 100 | 100 |
| 11 | இரத்தினபுரி நகரத்திலுள்ள வீதிகள் வலைப் பின்னலை மேம்படுத்தல் | 2.0 | 100 | 100 |
| 12 | பொறலுகொட பாலத்தின் அணுகும் வீதி | 1.0 | 100 | 100 |
| 13 | பாராளுமன்ற அரச கட்டிடத்தை மேம்படுத்தல் | 4.0 | 100 | 100 |
| 14 | மட்டக்குளிய பாலத்தின் வட இணைப்பு (கட்டம் 111) துடெல்லையில் இருந்து பமுனுகம வரை (0+000 – 6+500 கிலோ மீற்றர் வரை) | 6.5 | 100 | 100 |
| 15 | கொழும்பு - இரத்தினபுரி – வெள்ளவாய – மட்டக்களப்பு வீதிக்கான மேம்படுத்தல் (A004), (பிரிவு 420.60 கி.மீ. – 422.70 கி.மீ. வரை) | 2.0 | 100 | 100 |
| | **வீதியின் மொத்த நீளம்** | **78.8** | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை இல: 08 : கடந்த வருடத்திற்கான சந்திகள் வடிவமைப்புப் விபரங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

| ஆ | சந்திகள் | | |
|---|---|---|---|
| **(ஆ)-1 சமிஞ்ஞை விளக்குகள் அற்றவை** | | | |
| 01 | வெலிக்கடை – நாவல வீதியில் அமைந்துள்ள கொஸ்வத்தை சந்தி | 100 | 100 |
| 02 | கெக்கிராவைச் சந்தி | 100 | 100 |
| 03 | கேகாலையில் அமைந்துள்ள கேகாலை – புளத்கொகுப் பிட்டிய வீதியினதும் கேகாலை இணைப்பு வீதியினதும் மேம்படுத்துகை | 100 | 100 |
| **(ஆ) – 11 சமிஞ்ஞை விளக்குகள்** | | | |
| 04 | கடுவெலவில் உள்ள கடுவெல – மாலபே வீதியிலுள்ள சந்தி | 100 | 100 |
| 05 | பேலியகொடவில் அமைந்துள்ள கொழும்பு – கண்டி வீதியிலுள்ள சந்தி | 100 | 100 |
| 06 | அவரிவத்தை சந்தியிலுள்ள சந்தி (கட்டுநாயக்க) | 100 | 100 |
| 07 | பிட்டகோட்டையிலுள்ள சந்தி | 100 | 100 |
| 08 | அத்துள் கோட்டையில் அமைந்துள்ள சந்தி | 100 | 100 |
| 09 | பாமன்கடை சந்தியிலுள்ள சந்தி | 100 | 100 |
| 10 | பெப்பிலியான சந்திக்கும் சந்தி | 100 | 100 |
| 11 | பிலியந்தலைச் சந்தி | 100 | 100 |
| 12 | தொறன சந்தி | 100 | 100 |
| **(இ) சந்தி** | | | |
| 13 | யக்கலையிலுள்ள கொழும்பு – கண்டி வீதிச் சந்தி | 100 | 100 |
| 14 | தொட்டுப்பொலவில் உள்ள களனிய – முதுன்கொட வீதிச் சந்தி | 100 | 100 |
| 15 | கடுவலையில் அமைந்துள்ள கடுவல – மாலபே வீதிச் சந்தி | 100 | 100 |
| 16 | ஹன்வெல்ல சந்தி | 100 | 100 |
| 17 | மினுவாங்கொடவில் உள்ள எக்கல – கொட்டதெனிய வீதியில் அமைந்துள்ள சந்தி | 100 | 100 |
| 18 | வவுனியா பிரதான பஸ் நிலையத்தில் உள்ள கண்டி – யாழ்ப்பாணம் வீதியும் (A009) பசார் வீதியும் (B052) சந்திக்கும் சந்தி | 100 | 100 |
| 19 | வவுனியா பொது வைத்தியசாலைக்கு அருகில் உள்ள கண்டி – யாழ்ப்பாணம் வீதியும், வவுனியா – ஹொரவபத்தானை வீதியும் சந்திக்கும் சந்தி | 100 | 100 |
| 20 | வவுனியா பொது வைத்தியசாலைக்கு அருகில் உள்ள கண்டி – யாழ்ப்பாணம் வீதியும் (A009), வவுனியா – பறைய னாலம்குளம் வீதியும் (A030) சந்திக்கும் சந்தி | 100 | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | (ஆ) சந்திக்கின்ற சந்தி | | |
|---|---|---|---|
| 21 | கொகுவலை – அத்துல்கோட்டையும் (B120) பாகொட – நாவல இணைப்பு (B534) வீதியிலும் சந்திக்கின்ற சந்தி | 100 | 100 |
| 22 | CRWB வீதியிலுள்ள மொறகெட்டிய சந்தி | 100 | 100 |
| 23 | அம்பாந்தோட்டையிலுள்ள CGHW வீதியும் அம்பாந்-தோட்டை மாற்று வழி வீதியும் சந்திக்கின்ற சந்தி | 100 | 100 |
| 24 | பெலவத்தைச் சந்தி | 100 | 100 |
| 25 | பிலியந்தலைச் சந்தி | 100 | 100 |
| 26 | மிரிஹான சந்தி | 100 | 100 |
| 27 | யூபிலிபோஸ்ட் சந்தி | 100 | 100 |
| 28 | கொடகமவிலுள்ள CRWB வீதியும் (A004) கோட்டே – போப்பே வீதியும் (B240) சந்திக்கின்ற சந்தி | 100 | 100 |
| | மொத்த சந்திக்கின்ற சந்திகள் தொகை 28 | | |

**அட்டவணை 09: கடந்த வருடங்களில் முடிவடைந்த வடிகாலமைப்பு வடிவமைப்பு விபரங்கள்**

| (ஈ) | நகர வடிகாலமைப்பு வடிவமைப்பு | நீளம் (கிமீ) | 2008 ஆம் ஆண்டின் குறிக்கோள் | பூர்த்தியாக் கப்பட்ட வீதம் |
|---|---|---|---|---|
| 01 | கடவத்தை – வெலிசறை வீதியின் குறுக்கே உள்ள கடவத்தை நகர இணைப்பு வீதிக்கான சுரங்கப்பாதை | 0.2 | 100 | 100 |
| 02 | பழைய எகொட உயன வீதி | 6.0 | 100 | 100 |
| 03 | கடவத்தை பாலத்திற்கான அணுகும் வீதி | 0.7 | 100 | 100 |
| | **மொத்தம்** | **6.9** | | |

**அட்டவணை இல: 10 திட்ட முகாமைத்துவ அலகு வேலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் செயற்திட்டம்**

| (உ) | **திட்ட முகாமைத்துவ அலகு வேலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் - NHSP** | | | |
|---|---|---|---|---|
| 01 | ஹோமாகம – கொடகம வீதி, ஒழுங்கை 2 இலிருந்து ஒழுங்கை 4 வரை மாற்றம் செய்யப்பட்ட வடிவமைப்பு | 4.0 | 100 | 100 |
| 02 | நிலவல வீதியிலிருந்து வெதற சந்தி வரையான (18.5 கி.மீ.) பிரேரிக்கப்பட்ட கொழும்பு – ஹொறணை வீதி | | இந்த வேலை NHSP ஆல் கையாளப்படுகின்ற மையால் இது கைவிடப்படும் | |
| 03 | புத்தளம் - அனுராதபுரம் வீதியிலுள்ள சுற்றுவட்ட வீதியின் வடிவமைப்பு மீளாய்வு | 01 எண். | 100 | 100 |
| 04 | (விக்றி இராணுவ வைத்தியசாலை சந்தி முதல் யாழ்ப்பாணம் சந்தி வரையான பகுதி) அனுராதபுரத்திற்கான அனுராதபுர மாற்று வழி வீதி | 3.0 | 100 | 100 |
| 05 | அனுராதபுர நகருக்கான மாற்றுவழி வீதியின் (விக்றறி இராணுவ வைத்தியசாலை யிலிருந்து யாழ்ப்பாணச் சந்தி வரையான பகுதி) | (3.0) | 100 | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | சரணங்கர பாலம் வரையான W.A.சில்வா மாவத்தை வீதியிலிருந்து கொழும்பு-ஹொரணை வீதி வரைக்கு அகலமாக்குதலும் மேம்படுத்தலும் | 0.6 | 100 | 100 |
| | **வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலை செயற்திட்டங்கள்** | | | |
| 07 | கடுவலை தொடக்கம் கொட்டாவ வீதி வரையிலுள்ள (16+500-28+500) பகுதிக்கான OCH வீதியின் வடிவமைப்பை மாற்றுவதற்கு உதவும் | (12) | 100 | 100 |
| | **பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டம் (MFAP)** | | | |
| 08 | அனுராதபுரம் - பாதெனிய வீதி (சுவீகரிப்புத் திட்ட திருத்தங்கள்) | (80) | 100 | 100 |
| | **ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)** | | | |
| 09 | கட்டுகஸ்தோட்டை – குருநாகலை வீதி, பெரிய சந்தி சுற்றுவட்டம் | 01 எண் | 100 | 100 |
| | **மொத்தம்** | 102.6 | | |
| | **உலக வங்கி (பெறும் சொத்து)** | | | |
| 12 | புத்தளம் - திருகோணமலை வீதி (AA012) (80 கி.மீ. – 180 கி.மீ. வரை) இடம் பற்றிய அளவீடு, தொழில்நுட்ப மதிப்பீடு போன்ற வற்றிற்காக விலை கோரல் அழைப்பிற்கான ஏற்பாடுகள் | (100) | 100 | 100 |
| | **மொத்தம்** | 100 | | |

**அட்டவணை இல: 11 ஏனைய நிறுவனங்களினால் அளிக்கப்பட்ட வடிவமைப்பு வேலைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| | **ஏனைய நிறுவனங்களினால் அளிக்கப்பட்ட வடிவமைப்பு வேலைகள்** | | | |
| | **நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA)** | | | |
| 01 | மஹரகமவில் உள்ள வித்தியாகர மாவத்தை-அத்ஹேன வீதியை அகலமாக்குதல் | 0.8 | 100 | 100 |
| 02 | மஹரகம சனசவுக்கு குறுக்கான மஹமேக வத்தை வீதியை அகலமாக்குதல் | 1.0 | 100 | 100 |
| 03 | ஹன்வெல்ல இணைப்பு வீதி | 1.0 | 100 | 100 |
| 04 | ஜானகல கென்றய வீதிக்கு அருகிலான காணி அபிவிருத்தி – வீதி வழி நிர்மாணம் | 0.22 | 100 | 100 |
| | **மொத்தம்** 3.2 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | **வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதி – பொதி 1** | | | |
| 01 | பண்டாரவளை – ஊவா ஹைலன்ட் - எட்டம்பிடிட்டிய வீதி (B043) | 6.25 | 100 | 100 |
| 02 | பாலுகம – பொறலந்த - ஹப்புத்தளை வீதி (B353) | 27.09 | 100 | 100 |
| 03 | றேஹம்பிட்டன் - தியத்தலாவ - பண்டாரவளை வீதி (B396) | 6.67 | 100 | 100 |
| | **மொத்தம்** | 50.1 | | |

## பூர்த்தி செய்யப்பட்ட வடிவமைப்புக்கான தொகுப்பு

2008 ஆம் ஆண்டு காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வீதியின் நீளமும் சந்திகளும்

| | |
|---|---|
| வீதிகளின் மொத்த நீளம் | 241.6 கி.மீற்றர் |
| சந்திகளின் எண்ணிக்கை | 30 |
| நில அளவீடுகளுக்கான பெறுகை செயன்முறை | 100 கி.மீற்றர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்திற்கான தடைகள்

*நில அளவையாளர்களின் பற்றாக்குறை*

நெடுஞ்சாலை வடிவமைப்புக்கள் பகுதிக்கான நில அளவையாளர்கள் 06 பேராக உள்ளதுடன் 05 பேர் இப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் 2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 04 சேவையாளர்கள் தங்களது பதவியிலிருந்து விலகியுள்ளார்கள். தற்போது நில அளவையாளர்கள் ஒருவரே சேவையாற்று-வதுடன், அவருடைய ஒப்பந்த நியமனக் காலம் 06 மாதங்களுக்கு மட்டுமே நீடிக்கப்பட்டுள்ளது. (02.01.2009 – 01.08.2009 வரை) இதனால் தேவையான எல்லா அளவை வேலைகளை சீராக மேற்கொள்வதற்கு மிகவும் கஷ்டமாக உள்ளது.

சீர்படுத்தும் நடவடிக்கைகளும் பிரேரணைகளும்

நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டது. அவர்களுள் தகமை பெற்ற சில நில அளவையாளர்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு, அவர்களுள் ஒருவருமே கடமைக்கு சமூகமளிக்கவில்லை. இதன் விளைவாக நில அளவை வேலைகளைக் கையாளுவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதுவும் வெற்றி பெறவில்லை.

## 3.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் தொழிற்படுகை

*வீதி மற்றும் பால வேலைகள் தொடர்பான தரக்கட்டுப்பாடு*

வீதிகளின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு போன்ற வேலைகளின் போது தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தேவைப்படும் அறிவுரை, உதவி ஆகியன பாரிய நிர்மாண இடங்களில் நிறுவப்பட்ட 09 மாகாண கள ஆய்வு கூட்டங்கள் மற்றும் 03 விசேட கள ஆய்வுக்கூடங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன.

*அளவைகள், விசாரணைகள், சாத்திய ஆய்வுகள், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்:*

இந்த வருட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலச் சரிவுகளை சீர்படுத்தும் அளவீடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஊவா மாகாணத்திலுள்ள கொழும்பு - இரத்தினபுரி – வெள்ளவாயா – மட்டக்களப்பு வீதி, பேராதனை – பதுளை – செங்கலடி வீதி மற்றும் பெரகலை – ஹாலிஎல வீதி ஆகியவற்றில் ஏற்பட்ட மண்சரிவுகள்.
- மத்திய மாகாணத்தில் உள்ள புசல்லாவை மற்றும் நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் ஏற்பட்ட மண்சரிவுகள்.

இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கள ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பற்றிய வேலைகள் கீழே தரப்பட்டுள்ளது.

- மூலப் பொருள் சீமேந்துக்கள் சிறு துண்டுகளாக்கிய இறப்பர்களின் கூட்டிணைப்பு.
- வடமேல் மாகாணத்திலுள்ள மகுலான கோவிலின் அணுகு பாதைக்கு சீமேந்துக் கல் பதித்தல்.
- இலங்கையில் பாரிய வீதி புனரமைப்பு செயற்திட்டங்களுக்கான செயலாற்றுகை பற்றிய ஆய்வு
- இலங்கையில் HDM 4 மாதிரிகளை தெரிவுசெய்து பரிசீலிப்பதற்கு வீதிகளின் செயலாற்றுகை பற்றிய ஆய்வு.

முன்னைய வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல ஆராய்ச்சி நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு தேவையான இடத்தில் திருத்த வேலைகளும் செய்து முடிக்கப்பட்டன. மொத்த ஒதுக்கீடான 23.80 மில்லியன் ரூபாவில் 90% மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அத்திவார விசாரணைகள்:*

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஆழ்துளையிடும் கருவிகளைப் பயன்படுத்தி இவ்வருடம் 37 பாலங்களுக்கான அத்திவார விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.
- இந்த வருட காலப் பகுதியில் 02 இடங்களுக்கான அத்திவார விசாரணைகள், ஆழ்துளையிடும் கருவிகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் செயற்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

***வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டங்களிற்கான ஆலோசனை***

ஆலோசனைகளும் உதவிகளும் வீதிகளை அகலமாக்கி மேம்படுத்துகைச் செயற் திட்டத்திற்கும் மற்றும் வீதி நிர்மாண, புனரமைப்பு, பராமரிப்பு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் வெளிக்கள ஆளணியினருக்கும் வழங்கப்பட்டன.

***பொருட்களின் வழமையான பரிசோதனை***

மத்திய ஆய்வுகூடத்தால் மண் மாதிரிகள், கருங்கற்கள், ஆற்று மணல், வீதியமைப்பதற்கான மூலப் பொருட்கள், சீமேந்து கொங்கிறீட் கன சதுரங்கள், பாதையோரக் கற்கள், ஒழுங்குபடுத்திய மாதிரிகள், வீதி மூலப்பொருள் உள்ளீட்டு மாதிரிகள், உருக்குகள் போன்றவற்றின் 5000 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் 6 சீமேந்துக் கொன்கிறீட் மற்றும் 19 அஸ்பால்ற் கொங்கிறீட் கலவை வடிவமைப்புக்கள் நடைபெறும் செயற் திட்டங்களுக்காகவும் வெளி நிறுவனங்களுக்காகவும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

ரூபா 3,704,647.57 மொத்த வருமானமானது, தனியார் நிறுவனங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்திட்ட வேலைகளிலிருந்தும் பெறப்பட்ட மாதிரிகளின் ஆய்வுக்கூடப் பரிசோதனை மூலமும், புவித்தொழில்நுட்ப விசாரணைகள் மூலமும் உழைக்கப்பட்டது.

***வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேலைகளினதும், ஏனைய நிறுவனங்களினதுமான நடைபாதை விசாரணைகளும் மேற்பரப்பு வடிவமைப்பும்***

பென்கினமன் தூண் விலகல் (BBD) பரிசோதனைகள், இயக்காற்றல் கூம்பு ஊடுருவல் (DCP) பரிசோதனைகள், மண்ணின் பரிசோதனைக்குழி நுண் ஆய்வுகள் மற்றும் ஆய்வுகூட பரிசோதனைகளைக் கொண்ட நடைபாதை விசாரணைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்தள வடிவமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

*(i)* ***<u>2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான நடை பாதை நுண்ணாய்வு</u>***

கந்தளாய் - திருகோணமலை பிரிவினால் 157 கி.மீற்றரில் இருந்து 160 கி.மீற்றர் வரையான AKT வீதிக்கு பிரேரிக்கப்பட்ட விலகல், ஜனகல மத்தி, பண்டாரவளை – ஊவா ஹைலண்ட் எட்டப்பிட்டிய வீதி, பளுகம – பொறலந்த - ஹப்புத்தளை வீதி ஆகியவற்றிற்கு அருகேயான காணி அபிவிருத்திக்கு அணுகும் வீதி.

(ii) ***<u>மெகா CDIG கம்பனி – A004 – சியம்பலாந்துவ – பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியின் புனரமைப்பு</u>***

சியம்பலாந்துவ – பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியின் பென்கிளமன் தூண் விலகல் (BBD) ஆய்வு - ரூபா 1,735,378.36 தொகையான 78 கிலோ மீற்றர்.

(iii) ***<u>வரையறுக்கப்பட்ட மதியுரைஞர் எந்திரவியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் (தனி) கம்பனி</u>*** – 396,022.25 ரூபா பெறுமதியில் 17.8 கி.மீற்றர் வரையிலான பொத்துவில் - பாணம வீதி பற்றிய BBD அளவீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) ***வரையறுக்கப்பட்ட SMEC சர்வதேச (தனி) கம்பனி, வரையறுக்கப்பட்ட எந்திரவியல் மதியுரைஞர் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட MG மதியுரைஞர்கள் (தனி) கம்பனி ஆகியவை இணைந்து சோதனை மேற்கொள்ளல்***

அட்டவணை-12 : மாகாண வீதிகளின் சாத்திய ஆய்வு, விரிவான வடிவமைப்பு போன்றவற்றிற்கான DCP பரிசோதனைகள் (இயக்காற்றல் கூம்பு ஊடுருவல் பரிசோதனை)

| மாகாணம் | DCP பரிசோதனைகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| வடமேல் மாகாணம் | 460 | ரூ. 1,365,740.00 |
| மேல் மாகாணம் | 464 | ரூ. 2,571,147.00 |
| தென் மாகாணம் | 394 | |
| ஊவா மாகாணம் | 533 | ரூ. 1,700,763.75 |
| கிழக்கு மாகாணம் | 358 | ரூ. 1,391,914.00 |

(v) ***வரையறுக்கப்பட்ட மகநகும வீதி நிர்மாண உபகரண (தனி) கம்பனி***

ரூபா 41,768.00 கிரயத்திற்கான 10 எண்ணிக்கையான பரிசோதனைகள்

***(vi) VV கருணாரட்ன அன்ட் கம்பனி***

திறந்த பல்கலைக்கழகத்தில் பிரேரிக்கப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப கட்டிடத்திற்கு ரூபா 49,852.00 கிரயத்தில் நிலப் பரிசோதனை.

**(vii)** ***உலக வங்கி நிதியிட்ட வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட சகல RSAP பொதிகளுக்கான விசாரணை***

கனமான பாலத்தை இடுவதற்கான முக்கிய மாதிரிகளின் ஆய்வுகூட பரிசோதனைகள் வீதி நடைபாதை வீதிக்கான முக்கிய பகுதிகளை வெட்டும் பரிசோதனை

(அ) நித்தம்புவ – கண்டி வீதி பற்றிய விசாரணை வேலைகள்-311 பகுதிகள்

(ஆ) களுத்துறை – அம்பலாங்கொடை வீதியில் விசாரணை வேலை – 181 பகுதிகள்

(இ) ஹக்மன – தலஹந்துவ வீதியில் விசாரணை வேலை – 118 பகுதிகள்

(ஈ) தெனகம – முலதியன வீதியில் விசாரணை வேலை – 118 பகுதிகள்

**(viii)** ரூபா 162,092.50 தொகைக்கான 59 பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு RNIP/ TRAAP-PMU மின் செயற்திட்டப் பணிபாளரினால் வழங்கப்பட்ட மாத்தறை – வெள்ளவாய வீதியில் DCP ஆய்வுகள்.

***வீதி மற்றும் பால வேலைகளின் தரக்கட்டுப்பாடு***

மூன்று விசேட கள ஆய்வுக்கூடங்கள், தரக் கட்டுப்பாட்டு வசதிகளை மேற் கொள்ளும் பொருட்டு வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்களின் கீழ் தாபிக்கப்பட்டது.

***தொழிநுட்ப ஊழியர்களிற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்***

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (TOO), ஆராய்ச்சி உதவியாளர்கள் (RAA) மற்றும் வேலை மேற்பார்வையாளர்கள் (WSS) ஆகியோருக்கு நிர்மாண மூலப் பொருட்களின் ஆய்வுகூடப் பரிசோதனை தொடர்பில் விரிவுரைகளும் செய்முறைகளும் வழங்கப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு நிர்மாணம், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நுணுக்கங்களைப் பற்றிய களச் செய்முறைகள் அளிக்கப்பட்டன. இந்த வருட காலத்தில் எந்திரவியலாளர்களுக்கு பொருட்கள் மற்றும் நடைபாதை எந்திரவியல் பற்றி ஒரு வருட கிரகித்தல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஆய்வுகூட ஆராய்ச்சி செயற்திட்டங்கள்***

2008 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்திட்டங்கள் பற்றிய வேலைகள் இப் பகுதியால் கையாளப்பட்டன.

- அஸ்பால்ட் கொன்கிறீட் கலவைக்குள் பிற்மன் இடுதல் VMA ஆகிய-வற்றுக்கிடையிலான தொடர்பை முடிவு செய்தல்.
- சிறந்த முறையில் நடைபாதையை வடிவமைப்பதற்கு அபாய பகுப்பாய்வு-களைப் பயன்படுத்தல்.
- வீதியின் தரத்தை மதிப்பிடுவதற்கான இயக்காற்றல் கூம்பு ஊடுருவல் பரிசோதனைகளைப் பயன்படுத்துவதில் சாத்தியத் தன்மை.
- அஸ்பால்ட் கொன்கிறீட்டுக்குள் பிற்றுமன் பயன்படுத்துதல்.
- தென் மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டங்களில் பாரம் அமுக்கம் முறையை பயன்படுத்துவதன் மூலம் மண் மேம்பாட்டின் பகுப்பாய்வு.
- இலங்கையில் திரட்டப்பட்ட இடங்களை சரி செய்வதற்கு தீர்மானித்தல்.
- இந்தியா HSR உடன் இலங்கை HSR ஐ ஒப்பீடு செய்தல்.
- அஸ்பால்ட் கொன்கிறீட் இடும் இடங்கள் மீது அஸ்பால்ட் கூழ் இடுதல்.
- நெல் அவிக்கும் போது அரிசி உமி சாம்பல் சக்தியை பயன்படுத்தி மண், சீமேந்தின் உறுதியை மேம்படுத்தல்.
- வீதி மேற்பரப்பில் இடும் முறைகளை தீர்மானித்தல்.
- அஸ்பால்ட் கொங்கிறீட் கலவையில் VIM இடையிலான இடும் முறையை தீர்மானித்தல்.
- நடைபாதை நிறைவேற்றுகை தொடர்பில் அஸ்போல்ட் கொன்கிறீற்குள் இணைப்பை தீர்மானித்தல்.
- கொன்கிறீட் கற்களை நிலத்தில் பரவுதல்.
- நாகேட்டியா மண் சரிவுகளில் விடய ஆய்வுகளும் இலங்கையிலுள்ள மண் சரிவினை கண்காணிக்கும் முறைமையினை முடிவு செய்தல்.

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

**நடைபாதை விசாரணையும் வடிவமைப்பும்**

- இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ள சில வீதிகளின் நடைபாதை வடிவமைப்புக்களானது போக்குவரத்துத் தரவு கிடைக்காமையினால் மேற் கொள்ளப்படவில்லை. திட்டமிடல் பகுதியிடமிருந்து இத்தகைய போக்குவரத்துத் தரவுகள் கோரப்பட்டுள்ளன.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பகுதிகளில் நடைபாதை வடிவமைப்பினை மேற்கொள்வதற்கான பயிற்சி பெற்ற எந்திரவிய-லாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆழ்துளையிடும் விசாரணை வேலை**

பிரேரிக்கப்பட்ட இடங்கள், மென்மையான நீர் நிலப் பகுதிகள் ஆகியவற்றில் ஆள்துளையிடும் விசாரணைகளை மேற்கொள்வதில் ஆள்துளையிடும் கருவி தேவைப்படுகிறது. தற்போது இப்பிரிவுக்கு நீர் எடுத்துச் செல்வது லொறி மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. (லொறி இல: 68-7686) இந்த லொறியால் ஒரு நேரத்தில் 01 இடங்களுக்கான தண்ணீர் விநியோகம் வழங்கப்படுகிறது. 03 துளையிடும் கருவிகள் தற்போது செயற்படுவதால் மேலதிகமாக ஒரு லொறி/தண்ணீர் பவுசர் தண்ணீர் விநியோகத்திற்காக தேவைப்படுகிறது.

**சீர்படுத்தும் நடவடிக்கைகளும் பிரேரணைகளும்**

- ***நடைபாதை விசாரணைகளும் வடிவமைப்பும்***
  **போக்குவரத்து தரவுகள் கிடைக்காமை**

நடைபாதை விசாரணைகளும் வடிவமைப்புக்களுக்கான முன்னுரிமைகள், (நெடுஞ்சாலை வடிவமைப்பு) பணிப்பாளரினால் ஆராய்ச்சி அபிவிருத்தி பகுதிக்கு அனுப்பப்பட்டது. எனவே திட்டமிடல் பகுதியானது இந்த வீதிகளுக்கு முன்னுரிமையை அளிப்பதுடன் ஆராய்ச்சி அபிவிருத்திப் பகுதிக்கு தேவையான போக்குவரத்துத் தரவுகளை வழங்குகிறது.

நடைபாதை வடிவமைப்பினை மேற்கொள்வதற்கு ஆராய்ச்சி அபிவிருத்திப் பகுதிகளில் பயிற்றப்பட்ட எந்திரவியலாளர்களின் பற்றாக்குறை இந்த வடிவமைப்பு அலுவலகப் பயிற்சி பூர்த்தியானதின் பின்னர் ஆராய்ச்சி அபிவிருத்திப் பகுதியில் சில எந்திரவியலாளர்களை சேவையாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ***ஆழ்துளையிடும் விசாரணை வேலை***

ஆராச்சி அபிவிருத்தி பகுதிகளுக்கு மேலதிகமாக ஒரு லொறி/தண்ணீர் பவுசர் அவசியமாகும்.

ஆழ் துளையிடும் விசாரணை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CRWB வீதியில் பெங்களமன் தூண் விலகல் அளவீடு



இயக்காற்றல் கூம்பு ஊடுருவல் பரிசோதனை



நித்தம்புவ – கண்டி வீதியில் கூம்பு வெட்டும் வேலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கும் பரிசோதனை



அளவிடப்பட்ட நுண் பரம்பல்



அளவிடப்பட்ட பரல்



பரல்களைச் சேர்த்தல்



சீமெந்து மற்றும் பரலைக் கலவை செய்தல்



நீர் சேகரித்தல்



பரல், சிமெந்து மற்றும் நீரைக் கலவை செய்தல்

பிற்றுமன் ஆய்வுகூடப் பரிசோதனை





நிலக்கீழ் கொங்கிறீட் கலவை வரைபின் மாதிரித் தயாரிப்பு

உறுதிப்பாடு மற்றும் பாய்ச்சல் சோதனைல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.7 காணி சுவீகரிப்பு மீளக்குடியமர்த்தற் பிரிவின் செயலாற்றுகை

**அட்டவணை-13 : இச்செயற்திட்டங்களுக்கான காணி சுவீகரிப்பும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவும்**

| கருத்திட்டம் | மொத்த துண்டுகளின் எண்ணிக்கை | 2ஆம் பிரிவு வெளியீட்டு அறிவித்தல்கள் (துண்டுகள்) | 38(அ) பிரிவு வெளியீட்டு அறிவித்தல்கள் (துண்டுகள்) | முடிவடைந்த துண்டுகளின் எண்ணிக்கை (2007) | நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் ரூபா |
|---|---|---|---|---|---|
| பேஸ்லைன் வீதி கட்டம் 1, 11 | 731 | 731 | 731 | 6 | 2,274,000.00 |
| ஒறுகொடவத்தை மேம் பாலம் | 196 | 196 | 196 | 53 | 68,113,037.43 |
| கடற்கரை வீதி | 250 | 250 | 250 | 3 | 5,000,000.00 |
| டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தை | 117 | 117 | 117 | 2 | 4,255,500.00 |
| என்.எம்.பெரேரா மாவத்தை | 184 | 184 | 184 | 8 | 10,274,394.02 |
| டுப்பிளிக்கேசன் வீதி | 19 | 19 | 19 | - | - |
| பாலாவி — கல்பிட்டி வீதி | 201 | - | - | - | 795,750.00 |
| திம்பிரிகஸ்யாய வீதி | 225 | 225 | 225 | 8 | 52,350,019.52 |
| மாலபே - கடுவெல | 640 | 640 | 640 | 535 | 2,167,975.49 |
| களனிய மேம்பாலம் | 21 | தொடர்பற்றவை | தொடர்பற்றவை | தொடர்பற்றவை | 780,000.00 |
| ரத்தனபிட்டிய 6/1 கி.மீற்றர் பாலம் | 29 | 29 | 29 | 360,000.00 முற்பண கொடுப்பனவு | - |
| ஏனைய கருத்திட்டங்கள் (நாடு முழுவதும்) | - | - | - | | 264,537,819.20 |
| மட்டக்குளிய பாலம் | 202 | 202 | 202 | 11 | 106,810,953.00 |
| களனிசிறி பாலம் | 17 | 17 | 17 | - | 900,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.8 சுற்றாடல் மற்றும் சமூகப் பிரிவின் செயலாற்றுகை

*அ. சமூகப் பரிமாணம்*

பல்வேறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரிவுகளுக்கு சமூகப் பரிமானங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட உதவிகள் :

i. ஆசிய அபிவிருத்தி வங்கியின் TA 4736 இன் கீழ் தயாரிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு இசைதல் கைநூலின் (SSCM) பிரதியானது, பல்வேறு பகுதிகள், செயற்திட்டங்கள் மற்றும் வெளி நிறுவனங்களான மத்திய சுற்றாடல் அதிகாரசபை, காணிகள், காணி அபிவிருத்தி அமைச்சு, அரசாங்க அச்சகத் திணைக்களம் மற்றும் அளவைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள், அபிப்பிராயங்கள் அடிப்படையில் 2008 வைகாசி மாதம் 15 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சபைப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டது.

ii. வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதிகள் பொதி 111 இன் கீழ் ‘அ’ வகுப்பு, ‘ஆ’ வகுப்பு வீதிகளின் 200 கி.மீற்றர் நீள வீதிக்கான ஆரம்ப சமூக மதிப்பீடுகள், தன்னிச்சையான மீளக்குடியமர்த்தல் சரிபார்க்க வேண்டிய பட்டியல்கள் உள்நாட்டு மக்கள் சரிபார்க்க வேண்டிய பட்டியல்கள், சூழல் சமூக கிரய பகுப்பாய்வு ஆகியவற்றிற்கான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு சுற்றாடல் சமூக பிரிவு செயற்படுகின்றது. A005, A013, A026, A027, B527, B212, B003 மற்றும் B019 வீதிப் பிரிவுகளுக்கான அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, B457, B176 வீதிப் பிரிவுகளுக்கான வரைபு அறிக்கைகள் 2008 இல் பூர்த்தி செய்யப்-பட்டவேளை திட்டமிடல் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

iii. வீதிச் செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதிகள் 2080 இன் கீழ் சார்டோ சர்வதேச நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட சமூக மதிப்பீடுகள் தொடர்பான வரைபு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

iv. ஆசிய அபிவிருத்தி வங்கியின் TA யின் கீழான செயற்திட்ட நிறைவேற்றுகை முகாமைத்துவ முறைமையை (PPMS) நாளது வரைப்படுத்தி சுற்றாடல் சமூகப் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2007 ஆனி முதல் ஐப்பசி மாதம் வரையிலான காலப் பகுதிக்கான முதலாவது காலாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, 2008 ஐப்பசி மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் SLRM க்கு சமர்ப்பிக்கப்பட்டது.

v. கொழும்பு – கண்டி மாற்று நெடுஞ்சாலையின் (CKAH) முதல் பத்து கிலோ மீற்றருக்கான மீளக்குடியேற்ற செயல்த்திட்ட (RAP) தயாரிப்பு வேலைகள் சுற்றாடல் சமூகப் பகுதிக்கு 2008 கார்த்திகை மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தரவு சேகரிப்பும், பங்குதாரர் மதியுரைகளும் 2008 மார்கழி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இறுதி மீள்குடியமர்த்தல் செயல்த் திட்டம் 2009 பங்குனி மாதத்தில் செயற்திட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

vi. வேலைகள் பகுதியின் கீழான B346, B540, B093, B110, B339, B329, B014 மற்றும் B363 ஆகிய வீதிகளுக்காகத் தயாரிக்கப்பட்ட சாத்திய ஆய்வு அறிக்கைகள் சுற்றாடல் சமூகப் பகுதியால் மீளாய்வு செய்யப்பட்டது.

**ஆ. சுற்றாடல் பரிமாணங்கள்**

பல்வேறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரிவுகளிற்கு சுற்றாடல் பரிமாணத்தில் வழங்கப்பட்ட உதவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. சுற்றாடல் சமூகப் பிரிவானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் சுற்றாடல் கொள்கை மற்றும் தேசிய சுற்றாடல் சட்டம் ஆகியவற்றின் கீழ் கோரப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு இசைவுச் சட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை துறை செயற் திட்டத்திற்கு உதவுகின்றது.

ii. வீதிச் செயற்திட்ட முன்னேற்பாட்டு வசதி – பொதி 111 இன் கீழ் 'அ' வகுப்பு, 'ஆ' வகுப்பு வீதிகளின் 200 கி.மீற்றர் நீளத்திற்கான அடிப்படைத் தகவல் கேள்விக் கொத்து, REA சமர்ப்பிக்க வேண்டிய பட்டியல்கள், IEER ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு சுற்றாடல் சமூகப் பிரிவு செயற்படுகின்றது. A005, A013, A026, A027, B527, B212, B003 மற்றும் B019 வீதிப் பிரிவுகளுக்கான அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, B457, B127 வீதிப் பிரிவுகளுக்கான வரைபு அறிக்கைகள் 2008 இல் பூர்த்தி செய்யப்பட்டவேளை திட்டமிடல் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

iii. வீதிச் செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதிகள் 2080 இன் கீழ் சார்டோ சர்வதேச நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட சமூக மதிப்பீடுகள் தொடர்பான வரைபு அறிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

iv. A005 மற்றும் A015 வீதியில் உள்ள 05 பாலங்களுக்கான மீள்நிர்மாணத்திற்கான சூழல் மதிப்பீடுகளை நடாத்துவது தொடர்பில் JICA க்கு உதவுதல். இச் செயற்திட்டத்திற்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அங்கீகாரம் 2008 இல் பெறப்பட்டிருந்தது.

v. வெளிச்சுற்று வட்ட நெடுஞ்சாலைக்கான தெரிவு செய்யப்பட்ட சுற்றாடல் வரையறைகளின் ஒரு நிலைப்படுத்தப்பட்ட வேலைகளை கண்காணிக்கும் இடங்களின் தெரிவு 2008 பெப்ரவரியில் பூர்த்தி செய்யப்பட்டது.

vi சுற்றாடல் சமூகப் பிரிவானது கள விசாரணைகளை மேற்கொள்ளாத போதிலும், மேற்பார்வை மதியுரைஞர்களினால் தயாரிக்கப்பட்ட மாதாந்த மற்றும் அரையாண்டு முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்வதில் தென்பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு உதவியது.

**இ. முகாமைத்துவ தகவல் முறைமை (MIS)**

முகாமைத்துவ தகவல் முறைமையானது, வீதியின் நில ஆய்வுகள் சமூக தகவல் தொடர்பில் பல்வேறு வகையான செயற்திட்டங்களின் கீழ் சுற்றாடல் அறிக்கையினை தயாரித்தல்/மீளாய்வு செய்தல் ஆகியவற்றிற்காக பரிசோதனை செய்து தரவுகளை வழங்குகிறது. சுற்றாடல் சமூகப் பகுதியானது, இறுதியான வெளியீடான 1:50000 விளக்கப் படங்களையும், 1:63360 S/D வரை படங்களையும் செய்வதற்கு நடிவடிக்கை மேற்கொண்டது. மண் சரிவுகளை தடுப்பதற்கான வரைபடங்கள் உள்ளடக்கப்பட்டது. இந்தத் தகவல்கள் வீதி செயற்திட்ட முன்னேற்பாட்டு வசதி பொதி 111 இன் கீழான ஆரம்ப சூழல் சமூக பாதுகாப்பு ஆவண ங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது.

தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் சுற்றாடல் சமூகப் பகுதியின் முகாமைத்துவ தகவல் முறைமையும் இணைந்து, எதிர் காலத்திற்கான காணி சுவீகரிப்பு தரவினை பெறுவதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. சுற்றாடல் சமூகப் பகுதியின் முகாமைத்துவ தகவல் முறைமையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தகவல்களுக்கான முக்கிய மையமாக இருப்பதால், மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் செயற்திட்டப் பணிப்பாளர்கள் ஆகியோர், சுற்றாடல் சமூகப் பகுதியின் முகாமைத்துவ தகவல் முறைமைக்கு காணி சுவீகரிப்பு தகவல்களை சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கியிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.9 திட்டமிடல் பிரிவின் செயலாற்றுகை

திட்டமிடல்ப் பகுதியின் 2008 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகையின் விரிவான விபரம் கீழே தரப்படுகின்றது.

**திட்டமிடல், வகுத்தமைத்தல், நிகழ்ச்சித் திட்டமிடல், முன்னேற்றத்தைக் கண்காணித்தல் அலகு**

- திட்ட அமுலாக்கல் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட படிவத்திற்கமைய இவ் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் இந்த அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.
- சகல காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு இந்த அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான 2007 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.
- 2007 ஆம் ஆண்டிற்குரிய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்படுத்துகை அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- நடைபெற்றுக் கொண்டிருக்கும் மற்றும் ஆரம்பிக்கவிருக்கும் செயற்திட்டங்களின் நிரல் தயாரிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
- நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்திட்டங்கள் மற்றும் ஆரம்பிக்கவிருக்கும் செயற்திட்டங்கள் பற்றி தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் திட்டமும் (PIP) சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வருடத்திற்கான மொத்த வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் உச்ச பயன்பாட்டை உறுதி செய்யும் பொருட்டு நிதிப் பிரமாணங்கள் (FR) 66 இன் கீழ் மாற்றுவதற்குத் தேவையான அங்கீகாரம் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டது.

**சூழல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்**

திட்டமிடல் பிரிவானது 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விரிவான வடிவமைப்பு, மேம்படுத்துகை, மீள்நிர்மாணம் அல்லது நிர்மாணம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பின்வரும் நன்கொடை நிதியளிக்கப்பட்ட, உள்ளூர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் ஒருங்கிணைப்புடன் சம்பந்தப்படுகிறது.

- மன்னார் பால அங்கீகாரத்தினை புதிப்பித்தல்.

**சாத்தியக் கூற்று ஆய்வுகள்**

- வீதி செயற்திட்ட முன்னேற்பாட்டு வசதி (RPPF) 3ம் கட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு இவ்வாண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

  நிலைமை பரிசோதனை - 18 கி.மீ.

  (கேகாலை புளத்கொகுப்பிட்டிய – கரவனெல்ல [A02] வீதி (0-17 வரை)

  போக்குவரத்து எதிவுகூறல் மற்றும்

  சுற்றாடல் தாக்க ஆய்வு - இல்லை

  கிரய மதிப்பீடு - 124.01 கி.மீ.

  பொருளாதார பகுப்பாய்வு - 191.43 கி.மீ.

  இறுதி அறிக்கை - பின்வரும் 15 வீதிகள் பூர்த்தி செய்யப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாதை இலக்கம் | வீதி | பிரிவு |
|---|---|---|---|
| 01 | A004 | கொழும்பு - இரத்தினபுரி – வெள்ளவாய – மட்டக்களப்பு | பேரகலவில் இருந்து வெள்ளவாய வரை |
| 02 | A013 | கல்குளம் - அநுராதபுரம் | கல்குளம் சந்தியிருந்து வஜிரராம வீதி வரை |
| 03 | A024 | மாத்தறை – அக்குரஸ்ஸ | 4வது கி.மீற்றரிலிருந்து அமலகொட சந்தி வரை |
| 04 | AB005 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய-சாலையை அணுகும் வீதி | கிம்புலவல சந்தியிலிருந்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை முடிவு வரை |
| 05 | B003 | அக்குரஸ்ஸ – கும்புறுப்பிட்டிய | அக்குரஸ்ஸவில் இருந்து கும்புறுப்- பிட்டிய வரை |
| 06 | B019 | ஆனமடுவ – உஸ்வெவ – கல்கமுவ | ஆனமடுவவில் இருந்து கல்கமுவ – ஆனமடுவ வீதிச் சந்தி வரை |
| 07 | B045 | பங்கதெனிய–ஆண்டிகம-ஆனமடுவ | 12 கி.மீற்றரிலிருந்து ஆனமடுவ வரை |
| 08 | B212 | கெக்கிராவை - கனேவெல்பொல | கெக்கிராவையிலிருந்து கனேவெல்- பொல வரை |
| 09 | B240 | கோட்டே – போப்பே | கொடகமவில் இருந்து போப்பே வரை |
| 10 | B445 | வெயாங்கொடை -ருவன்வெல்ல | வேயாங்கொடை முதல் நித்தம்புவ வரை |
| 11 | B445 | வெயாங்கொடை -ருவன்வெல்ல | ஊறப்பொல முதல் ரூவன்வெல்ல வரை |
| 12 | B504 | மஹரகம–பமுனுவ-தலபத்பிட்டிய | மஹரகம முதல் தலபத்பிட்டிய வரை |
| 13 | B510 | கெஸ்பேவ– கொஸ்கஸ்ஹந்திய | கெஸ்பேவ முதல் கொஸ்கஸ்ஹந்திய வரை |
| 14 | A005 | பேராதெனிய – பதுளை – செங்கலடி | பேராதெனிய – பதுளை (ஊவா கிழக்கு) முதல் செங்கலடி வரை |
| 15 | A026 | கண்டி – மஹியங்கனை – பதியத்தலாவ | மஹியங்கனை முதல் பதியத்தலாவ வரை |

### புதிய செயற்திட்டங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆய்வுகள்

- கடன் உடன்படிக்கையை கைச்சாடுவதற்காக சீனாவின் EXIM வங்கியின் வேண்டுகோளின் பேரில் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேகப் பாதை செயற் திட்டங்களின் சாத்திய ஆய்வுகளைத் தயாரித்தல்.
- சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவுபடுத்துவதன் கீழ் இருக்கின்ற சம்புகஸ்கந்தை – மாபிம வீதிக்கு மாற்றுவழிப் பாதையை இனங் காணுதல்.
- ஹம்பாந்தோட்டை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் உடலமத்தை வீதியிலிருந்து தனமல்வில வீதி வரையான உகந்த பாதை வழியை இனங் காணுதல்.

### செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்

பின்வரும் செயற்திட்டங்கள் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வேண்டுகோளின்படி நன்கொடை நிதியளிப்புக்கான செயற்திட்ட முன்மொழிவுகளையும் விண்ணப்பங்களையும் தயாரித்தல்.

### கொரிய நிதியளிப்புக்காக

- ***கொரிய நிதியளிப்புக்கான முன்மொழிவுகளைத் தயாரித்தல்***
    - வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக 3 தொன் நிறையையுடைய 52 டிப்பர் வாகனங்கள், 02 அல்போஸ்ட் இயந்திரங்கள், வீதியைத் துப்பரவு செய்யும் கருவிகள் ஆகியவற்றை வழங்குதல்.
    - புத்தளம் - திருகோணமலை வீதியின் அனுராதபுரம் - திருகோணமலைப் பிரிவின் புனரமைப்பும் மேம்படுத்துகையும்.
    - பெந்தோட்டையிலுள்ள புதிய 2 வழிப் பாலத்தின் நிர்மாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அபிவிருத்தி ஆய்வுகள் - வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில் நுட்ப அறிவுகளை வளர்ப்பதற்கு.
- தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பாலத் தரவுகளைத் தயாரித்தல்.

***ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனம் மற்றும் ஜப்பானிய ஒத்துழைப்பிற்கான சர்வதேச வங்கியின் நிதியளிப்பு***

- ஜப்பானிய அரசின் மானிய உதவி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான 2008 இல் செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.

**மானிய உதவித் திட்டம் :**

- கிழக்கு மாகாணத்தில் மட்டகளப்பு ஆற்றுக்குக் குறுக்கேயான பாலத்தின் நிர்மாணம்
- கொழும்பு பெரும் நகரத்தில் இடப் போக்கு வரத்துக் கட்டுப்பாட்டு முறைமை (ATC) யின் விரிவான எந்திரவியல் வடிவமைப்பு
- பேஸ்லைன் வீதியின் தென்பிராந்தியம் வரை நீடிப்புத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக முன்மொழியப்- பட்ட வீடமைப்புத் திட்டம்
- கிழக்கு மாகாணத்தில் தேசிய நெடுஞ்-சாலையின் 182.15 கி.மீற்றர் நீளத்திற்கான புனரமைப்பும் மேம்படுத்தலும்.

**அபிவிருத்தி ஆய்வு :**

- அதிவேக நெடுஞ்சாலை நிர்வாகத்திற்கான தொழில்நுட்ப உதவி
- நீண்ட கால மற்றும் குறுகிய கால நிபுணர்கள் வீதித்துறை அபிவிருத்தி ஆலோசகர் (நீண்ட காலம்) வாகனப் போக்குவரத்து வலையமைப்பு திட்டமிடலாளர் (குறுகிய காலம்)

***ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவிக்காக***

- தேசிய நெடுஞ்சாலைத் துறை செயற்திட்டம் - 2 இன் கீழ் 272.89 கி.மீ. நீளமான தேசிய நெடுஞ்சாலையினை புனரமைத்து மேம்படுத்துவதற்காக முன்மொழிவு- களின் தயாரிப்பு.

***ஈரான் நிதி உதவிக்காக***

- கிழக்கு, ஊவா, தென் மாகாணங்களை இணைத்து 285 கி.மீ. நீளமான தேசிய நெடுஞ்சாலையினை புனரமைத்து மேம்படுத்துவதற்கான முன்மொழிவினைத் தயாரித்தல்.
- நான்கு பாலங்களின் மீள்நிர்மாணம் (மேல் மாகாணத்தில் 03, தென் மாகாணத்தில் 01)

***சவுதி நிதி உதவிக்காக***

- கிழக்கு மாகாணத்தில் தம்பலகாமம் - கிண்ணியா வீதியின் மீதிப் பகுதியை மேம்படுத்துவதற்கான பிரேரணையைத் தயாரித்தல்.
- கிழக்கு மாகாணத்தை இணைக்கும் 141 கி.மீற்றர் நீளமான தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தல்.

***சீன நிதி உதவிக்காக***

- கல்குலாம முதல் றம்பேவ வரையான கண்டி – யாழ்ப்பாணம் வீதியை மேம்படுத்தும் உதவிக்கான வேண்டுகோளின் பேரில் பிரேரணை தயாரிப்பு.
- கொழும்பு நகரப் பகுதிகளில் 22.52 கி.மீ. நீளமான தேசிய நெடுஞ்சாலையின் புனரமைப்பும் மேம்படுத்துகையும்.
- கொழும்பு நகரப் பகுதிகளில் 10.4 கி.மீற்றர் நீளமான தேசிய நெடுஞ்சாலையின் புனரமைப்பும் மேம்படுத்துகையும்.
- உடவளவ – தனமல்வில வீதியின் புனரமைப்பும் மேம்படுத்துகையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் 29.3 கி.மீ. நீளமான தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பும் மேம்படுத்துகையும்.
- மாகோ புகையிரத நிலைய கடவையில் மேம்பால நிர்மாணம்.

**நன்கொடை நிதியளிப்பு செயற்திட்டங்களின் ஒருங்கிணைப்பு**

திட்டமிடல் பிரிவானது 2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்கனவே வடிவமைக்கப்- பட்ட நிர்மாண நிலையில் உள்ள பின்வரும் நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற் திட்டங்களின் ஒருங்கிணைப்பில் ஈடுபடுகிறது.

- கொழும்பு – கண்டி வீதியின் (கிரிபத்கொடையிலிருந்து கடவத்தை வரை) பிரிவொன்றின் விரிவான வடிவமைப்பும் மீள்நிர்மாணிப்பும், வெலிக்கடைச் சந்தியில் உள்ள போக்குவரத்து விளக்கு சமிஞ்ஞைகளை நிறுவுதல் ஆகியவற்றை சீனர்களிடம் கையளிப்பு.
- வாகனப் போக்குவரத்து அளவைகள் சம்பந்தமான வீதி செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதியின் சாத்தியக்கூற்று ஆய்வுக்குழு.

**செயற்திட்டங்களுக்கான எண்ணக்கருப் பத்திரம் (வெளிநாட்டு நிதியளிப்பு)**

திட்டமிடல் பிரிவு பின்வரும் செயற்திட்டங்களுக்கான எண்ணக்கருப் பத்திரங்களை தயாரித்துள்ளது.

- பேஸ்லைன் வீதியின் தென் பிராந்திய நீடிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக முன்மொழியப்பட்ட வீடமைப்புச் செயற் திட்டத்திற்கான எண்ணகருப் பத்திரம்.

**நெடுஞ்சாலை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் -4 (HDM-4) மற்றும் வீதித் தகவல் முறைமை (RIS)**

- மாகாணக் காரியாலங்களின் நிறைவேற்றுப் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வேலை மேற்பார்வையாளர்கள் மற்றும் தரவுப் பதிவாளர்கள் ஆகியோருக்கான குறைந்த போக்குவரத்துள்ள வீதிகளில் உபகரணங்களின் உதவியில்லாமல் வீதி நிலைமைகளைக் கண்டறியும் வருடாந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல்.
- சகல தரவுகளையும் தலைமையகத்தில் சேகரித்து அவற்றை தரவுத் தளத்தில் பதிவதற்கான ஆயத்தங்களைச் செய்தல்.
- தரவுகளை வீதித் தகவல் முறைமையில் பதிதல் (கட்புல வீதி நிலைமைத் தரவு, கரடுமுரடுத் தன்மைத் தரவு மற்றும் வாகனப் போக்குவரத்து மற்றும் திட்ட பூர்த்தித் தரவு)
- வீதித் தகவல் முறைமையை செயற்படுத்தலும் பகுப்பாய்வும்.
- நிகழ்ச்சித் திட்ட பகுப்பாய்விற்கான HDM-4 உள்ளீட்டு கோப்புகளைத் தயாரித்தல்.
- HDM-4 நிகழ்ச்சித் திட்ட பகுப்பாய்வு
- 2008 ற்கான பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை HDM-4 வெளியீட்டின் அடிப்படையில் தயாரித்தல்.
- 2008 ற்கான வருடத்தில் வாகனத் தொகுதிகளின் கணக்கெடுப்புக்காக வாகன கிரய தகவலை சேகரித்தல்.
- தரவு சேகரிப்பு, கண்காணிப்பு மற்றும் ஆய்வு வெளிப்பாடுகள் அறிக்கையை உலக வங்கிக்குச் சமர்ப்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூகோளத் தகவல் அலகு**

- மேல் மாகாணத்தின் பிரதான வீதி மேம்படுத்துகை செயற்திட்டங்கள் பற்றி பூகோள தகவல் முறைமை வரை படத்தைத் தயாரித்தல்.
- ஆரம்பிக்கப்படவிருக்கும் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வீதி செயற் திட்டங்கள் பற்றிய வரை படத்தைத் தயாரித்தல்.
- மலேசியன் குழுவிற்கான கொழும்பு – மாலபே அதிவேக நெடுஞ்சாலை வரைப் படத்தைத் தயாரித்தல்.
- கொரியன் நிதி பிரேரணைக்கான அநுராதபுரம் - திருகோணமலை வீதியின் வரை படத்தினைத் தயாரித்தல்.
- வீதிச் செயற்திட்ட முன்னேற்பாடுகள் வசதி செயற்திட்ட வீதிகளுக்கான வரை படத்தைத் தயாரித்தல்.
- தேசிய வீதி வலையமைப்பு மற்றும் கொழும்பு நகர மேம்பால செயற்திட்டங்களுக்கான வரை படத்தினைத் தயாரித்தல்.
- ஆசிய அபிவிருத்தி வங்கி, உகல வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி, சீன உதவி ஆகியவற்றின் கீழ் வீதிகளையும் பாலங்களையும் மேம்படுத்துவதற்குரிய செயற்திட்டப் பிரேரணைகளுக்கான வரை படத்தைத் தயாரித்தல்.
- கிழக்கு மாகாண வீதிகள் பாலங்களுக்கான வரை படத்தைத் தயாரித்தல்.
- இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள அதிவேக நெடுஞ்சாலைகளைக் காட்டும் வரைபடத்தினைத் தயாரித்தல்.
- வீதி செயற்திட்ட முன்னேற்பாட்டு வசதியின் கீழ் இனங் காணப்பட்ட 1500 கி.மீ. வீதிகளையும், பல்வேறு செயற்திட்டங்கள் போன்றவற்றிற்கான பூகோளத் தகவல் முறைமையின் வரை படத்தைத் தயாரித்தல்.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டங்களின் வரைபடத்தைத் தயாரித்தல்.
- 10 வருட பாரிய திட்ட வரை படங்கள் தயாரித்தல்.
- மாவட்ட, மாகாண வரை படங்களைத் தயாரித்தல்.

**அளவில் பெரிய/நிறையில் கூடிய வாகனங்களுக்கான விசேட அனுமதிப் பத்திரம்**

இந்த வருட காலப் பகுதியில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விதந்துரைக்கப்பட்ட விசேட அனுமதிப் பத்திரத்தின் கீழ் பதிவுக்காக 07 அளவில் பெரிய/நிறையில் கூடிய வாகனங்கள் தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டன.

**நானாவிதமான வேலைகள்**

- பரிசோதனை அறிக்கைகளைத் தயாரித்தலும், வீதி, பால தரவுப் பதிவுகளை நாளது வரைப்படுத்தலும்.
- தரவு சேகரிப்பு மற்றும் முகாமைத்துவக் கையேட்டில் சில திருத்தங்களை மேற்கொள்ளல்.
- வீதித்துறை சம்பந்தமான பலவகையான அபிவிருத்திச் செயற்திட்டங்களின் தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றுதல்.
- வெளிநாட்டு நிதிகளின் கோரிக்கைக்கான பலவீனமான பாலங்களுக்கான நிலைமை அறிக்கைகளைத் தயாரித்தல்.
- தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம், தேசிய நெடுஞ்சாலை துறைச் செயற்திட்டம், வீதி செயற்திட்ட முன்னேற்பாட்டு வசதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கி, பல்வகை வெளிநாட்டு உதவி செயற்திட்டம் ஆகியவற்றுக்கான PCC செயற்படும் குழுக்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றல்.

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

- சிரேஷ்ட பொறியியலாளர்களுக்கான பற்றாக் குறையும், பொறியியலாளர்களின் இடமாற்றத்தினால் தொடர்ச்சியான வேலைகளில் பாதிப்பும்.
- வாகன வசதிகளின் பற்றாக்குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டமிடல் பகுதியின் கீழான தரவு சேகரிப்பும் மதிப்பீட்டு அலகும்

2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திட்டமிடல் பிரிவின் கீழ் பின்வரும் வேலைகளானது, தரவினை சேரித்து மதிப்பிடுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

### வாகனப் போக்குவரத்து அளவைகள்

(அ) காலத்துக்குக் காலம் நடைபெறும் போக்குவரத்தை கணிப்பிடும் நிகழ்சித்திட்டம்

- 153 இடங்களில் அளவுக் கணிப்பீடு (சாராசரி தினசரிப் போக்குவரத்து)
- 107 இடங்களில் நேரடியாக வகைப்படுத்தல் கணிப்பீடு செய்தல்
- களுஅக்கலையில் உள்ள கொழும்பு - இரத்தினபுரி – வெள்ளவாயா – மட்டக்களப்பு வீதியில் 10 இடங்களில் சராசரி ஆண்டுத் தினசரி போக்குவரத்து (AADT) அளவீடு கடந்த 12 மாதங்களாக நடாத்தப்பட்டு ஒவ்வொரு மாதமும் போக்குவரத்து வேறுபாடுகள் கண்காணிக்கப்பட்டது.

(ஆ) திரும்பும் அசைவு அளவீடு

- மேல் மாகாணங்களில் போக்குவரத்துத் திட்டத்தினை ஆய்வு செய்வதற்கு வீதிகளின் 20 சந்திகளில் திரும்பும் அசைவு அளவீடு மேற்கொள்ளப்பட்டன.

### அச்சுச் சுமை அளவைகள்

வீதியின் கட்டமைப்பை வடிவமைப்பதற்கும், தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் நிறை கூடிய வாகனங்களை மதிப்பீடு செய்வதற்கும் அச்சுச் சுமை அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டது. பின்வரும் இடங்களில் இவ்வருடத்தில் 19 அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை-14 : அச்சு சுமை அளவீட்டு இடங்கள்**

| வீதியின் பெயர் | அமைவிடம் | காலம் |
|---|---|---|
| கொழும்பு-காலி-ஹம்பாந்தோட்டை-வெள்ளவாயா வீதி | ஒபன்நாயக்க 128 கி.மீ. | 12 மணி. |
| பெல்மடுல்ல – எம்பிலிப்பிட்டிய- நோனாகம வீதி | எம்பிலிபிட்டிய | 12 மணி. |
| வீரவில – திஸ்ஸ – கதிர்மாமம் வீதி | தெபரவேவா | 12 மணி. |
| சூரியவேவா – பதலங்கல வீதி | சூரியவேவா | 12 மணி. |
| பெலகன்வேவா - ஹபரவ வீதி | பெலகன்வேவா | 12 மணி. |
| மஹியங்கனை – திம்புலகல – தலுக்கனே வீதி | தெகியந்தகந்திய | 12 மணி. |
| பதுளை – கரமெட்டிய – அந்துள்பொத்த வீதி | ராஜமாவத்தை 35 கி.மீ. | 12 மணி. |
| கொழும்பு-காலி-ஹம்பாந்தோட்டை-வெள்ளவாயா வீதி | திக்வெல்ல/ பதீகம 180 கி.மீ. | 12 மணி. |
| காலி – தெனியாய – மாதம்பே வீதி | மொறவக்க – 62 கி.மீ. | 12 மணி. |
| கண்டி – மஹியங்கனை – பதியத்தலாவ வீதி | வீரகந்தோட்டை | 24 மணி. |
| அல்லை – கந்தளாய் வீதி | 9 கி.மீ. | 12 மணி. |
| கொழும்பு-காலி-ஹம்பாந்தோட்டை-வெள்ளவாயா வீதி | களுத்துறை | 12 மணி. |
| அநுராதபுரம் - பாதெனிய வீதி | தலதாகம | 12 மணி. |
| மஹியங்கனை – பரகம்மன வீதி | மஹியங்கனை 5வது கி.மீ. | 12 மணி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வஸ்கடுவ – பண்டாரகம வீதி | வஸ்கடுவ | 12 மணி. |
| மாலபே – கடுவெல வீதி | பிட்டுகல | 24 மணி. |
| வெயாங்கொடை - ரூவான்வெல்ல வீதி | கோணகல்தெனிய | 12 மணி. |
| கண்டி – மஹியங்கனை – பதியத்தலாவ வீதி | பதியத்தலாவ | 12 மணி. |
| பேராதெனிய – பதுளை – செங்கலடி வீதி | பிபிலை | 12 மணி. |

**கரடுமுரட்டுத் தன்மை அளவீடுகள்**

- 11,902 கி.மீ. நீளமான தேசிய நெடுஞ்சாலைகளில் 3,994 கி.மீற்றர் வரை வீதி கரடுமுரட்டுத் தன்மை அவளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- 6 இடங்களில் இருதடவை மேளின் அளவீட்டுச் சோதனைகள் செய்யப்பட்டன.

**தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பிற்கு வீதிகளை பொறுப்பெடுத்தல்**

2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் பின்வரும் வீதிகளை 'பி' வகுப்புக்கு தரம் உயர்த்தப்பட்டதுடன், தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்டன.

**அட்டவணை-15 : தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பிற்கு வீதிகளை பொறுப்பெடுத்தல்**

| பாதை இல: | வீதியின் பெயர் | நீளம் (கி.மீ.) | மாகாணம் |
|---|---|---|---|
| B608 | வீர மட்டுபந்தர மாவத்தை வீதி | 0.14 | மத்திய |
| B609 | ஹிரிபிட்டிய – கல்டெம்வேவா வீதி | 14.9 | வடமேல் |
| B610 | மெல்சிறிபுர – றம்பே வீதி | 12.7 | வடமேல் |
| B611 | தித்தவெல்ல - கோணாகம வீதி | 15.27 | வடமேல் |
| B612 | றம்பொடை – புசல்பிட்டிய வீதி | 2.38 | மத்திய |
| B613 | கொத்மலை புதிய நகர வீதி | 1.05 | மத்திய |
| | | **46.44** | |

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

- பெரு மழை போன்ற எதிர்பாராத காலநிலை மாற்றம்
- திடீரென வாகனம் பழுதடைதல்
- போக்குவரத்து கணக்கெடுக்கும் உபகரணத்தில் ஏற்பட்ட எதிர்பாராத பிழையான தொழிற்பாடு
- சாதாரணமாக அட்டவணையிடப்பட்ட அளவீடுகளுக்கு மேலதிகமாக அவசர தரவு சேகரிப்பினை நடாத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீர்படுத்தும் நடவடிக்கையும் முன்னேற்றங்களும்**

திரும்புதல் அசைவு அளவீடுகள், அச்சுப்பார அளவீடுகள் போன்ற சில போக்குவரத்து அளவீடுகளை மேற்கொள்வதற்காக அவசர அளவீடுகள் நடாத்தப்படும் பொழுது தேவையான மேலதிக தற்காலிக ஊழியர்கள் பெறப்பட்டனர். அதே நடைமுறைகள் எதிர்காலத்திலும் கடைபிடிக்கப்படும்.

இப்பிரிவில் அநேகமான வாகனங்கள் மிகவும் பழைமையானவையாக இருப்பதால், தரவு சேகரிப்பை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு வேறு வாகனங்கள் தேவைப்படுகின்றது.

**திட்டமிடற் பகுதியின் கீழ் போக்குவரத்து முகாமைத்துவ பாதுகாப்பு அலகு**

**போக்குவரத்துக் குறீயீடுகளையும், வீதிக் குறியீடுகளையும் வடிவமைத்தல்**

2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் வீதிச் செயற்திட்டங்கள் தொடர்பில் வரைபு மீளாய்வு வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்-பட்டது.

| செயற்திட்டம் | நிதி | முன்னேற்றம் |
|---|---|---|
| நித்தம்புவ வீதியிலிருந்து கண்டி வீதி வரையிலான கொழும்பு – கண்டி வீதி | வெளிநாடு | பூர்த்தி |
| ஹக்மன – தலஹந்தூவ வீதி | வெளிநாடு | பூர்த்தி |
| பாதெனிய – புத்தளம் வீதி | வெளிநாடு | பூர்த்தி |
| தம்பலகாமம் - கிண்ணியா வீதி | வெளிநாடு | பூர்த்தி |
| தெனியாய – மாதம்பே வீதி | வெளிநாடு | நடைபெறுகிறது |
| ஹபரணை – ஜயந்திபுர வீதி | வெளிநாடு | நடைபெறுகிறது |
| வெள்ளவாய – மொனராகலை வீதி | வெளிநாடு | நடைபெறுகிறது |

2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் வீதிகளின் வடிவமைப்புக்கான அடையாளங்களும், குறியீடுகளும் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | முன்னேற்றம் |
|---|---|
| அம்பாந்தோட்டையிலுள்ள கொழும்பு – காலி – அம்பாந்தோட்டை – வெள்ளவாய வீதி (A002) பக்க வழி வீதி | பூர்த்தி |
| நுரைச்சோலை வலுப் பொறி செயற்திட்டத்தின் கீழ் பாலாவி – கற்பிட்டிய வீதியின் மேம்பாடு | பூர்த்தி |
| மட்டக்குளிய பால இணைப்பு வீதி (0+000 கி.மீ. முதல் 5+140 கி.மீ. வரை) | பூர்த்தி |
| மாத்தறை – அக்குரஸ்ஸ வீதி | பூர்த்தி |
| வாரவலயில் கலிகமுவ - ரூவான்வெல்ல வீதி (B127) மற்றும் கேகாலை புளத்கொகுப்பிட்டிய – கரவனெல்லை வீதி (A21) யில் உள்ள சந்தியின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| களனிசிறி பாலத்திற்குச் செல்லும் வீதி | பூர்த்தி |
| விமான நிலையத்திற்குச் செல்லும் வீதியின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| அம்பாந்தோட்டையில் மஹலேவய – கொன்னொறுவ வீதி (பேஸ்லைன் வீதி) மற்றும் A002 நெடுஞ்சாலை 230 கி.மீ. – 243 கி.மீ. வரையில் விலகல் சந்தியின் மேம்படுத்துகை | பூர்த்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செயற்திட்டம் | முன்னேற்றம் |
|---|---|
| அம்பாந்தோட்டையில் A002 வீதி மற்றும் 230 கி.மீ. – 243 கி.மீ. வரையான A002 நெடுஞ்சாலையின் விலகல் சந்தியின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| கண்டி – யாழ்ப்பாணம் வீதியின் (A009) கெக்கிரவை நகரத்தின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| களனிசிறி பாலம் - களனிமுல்லை வீதிப் பக்கத்தால் செல்லும் வழியான களனிமுல்லை – முல்லேரியாவ – கொஸ்வத்தை வீதியை அகலமாக்குதலும் மேம்படுத்தலும் | பூர்த்தி |
| கடவத்தை வீதியிலுள்ள கடவத்தை – ராகம – வெலிசறை (B168) வீதியின் சுரங்கப் பாதையால் கடவத்தையை இணைக்கும் வீதி | பூர்த்தி |
| அத்துள்கோட்டே – மிரிஹான – கொகுவல வீதி (B120) நாரஹேன்-பிட்டி – நாவலை – நுகெகொடை வீதி (B307) மற்றும் சுப்பர் மார்கெட் அருகாமையிலுள்ள பழைய கெஸ்பேவ வீதி (B553) ஆகியவற்றின் சந்தியை மேம்படுத்தல் | பூர்த்தி |
| கொழும்பு – காலி அம்பாந்தோட்டை – வெள்ளவாய வீதி (A002) பால இல: 62/1 மற்றும் 62/2 கி.மீ. (பெந்தோட்டைப் பாலம்) ஆகியவற்றின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| தோணிகல – கலாவெவ வீதியிலிருந்து (B423) போர் வீரர் கிராமத்திற்கு செல்லும் வழி | பூர்த்தி |
| இப்போலகம போர் வீரர் கிராமத்திற்குச் செல்லும் வழி மற்றும் தோணிகல – கலவேவா – கலவல வீதிச் சந்தியின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| கெக்கிராவை – மரதன்கடவல வீதியிலிருந்து (B213) போர் வீரர் கிராமத்திற்குச் செல்லும் வழி | பூர்த்தி |
| கெக்கிராவை – மரதன்கடவல வீதியிலிருந்து (B213) மற்றும் இப்பாலோகம போர் வீரர் கிராமத்திற்குச் செல்லும் வழிச் சந்தியின் மேம்படுத்துகை | பூர்த்தி |
| இப்பாலோகம போர் வீரர் கிராமத்திலுள்ள முன்மொழியப்பட்ட வீடமைப்பு திட்டத்தின் வீதி நிர்மாணம் | பூர்த்தி |
| கெட்டம்பே – கன்னொறுவ வீதி | பூர்த்தி |

**வீதிப் பாதுகாப்பு முன்னேற்றங்கள்**

**வேகத்தடை பற்றிய வர்த்தமானியை நாளதுவரைப்படுத்தல் (வேகத்தடை பற்றிய வர்த்தமானியைத் திருத்துததல்)**

வேலை நடைபெறுகிறது, வரவுப் பிரதிகள் மாகாணப் பணிப்பாளர்களுக்கு அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**நானாவித வேலைகள் (பூர்த்தியாக்கப்பட்டது)**

- எதிர்கால அபிவிருத்திக்காக பகுப்பாய்வு மற்றும் தேசிய வீதி வலையமைப்-பிலுள்ள சந்திகள் பற்றிய விபரங்களைத் தயாரித்தல்.
- பொருட்காட்சி வேலைகளுக்கு உதவுதல் (டயத்த கிருள்ள)
- கொழும்பு - கண்டி வீதியில் உள்ள வீதிப் பாதுகாப்பு ஆய்வு

**வாகனப் போக்குவரத்து முகாமைத்துவம்**

நகரங்களுக்கான போக்குவரத்து முகாமைத்துவ திட்டங்களின் தயாரிப்பு

| | |
|---|---|
| வராக்கபொல பக்கவழி | நடைபெறுகின்றது |
| இரத்தினபுரி பக்கவழி | நடைபெறுகின்றது |
| தங்காலை போக்குவரத்து வேறு வழித் திட்ட தயாரிப்பு | பூர்த்தி |
| பாணந்துறை நகர மேம்படுத்துகைகள் | பூர்த்தி |
| பதுளை நகர மேம்படுத்துகைகள் | பூர்த்தி |
| பண்டாரவளை நகர மேம்படுத்துகைகள் | பூர்த்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சந்திகளின் சமிஞ்ஞை விளக்குகள்**

போக்குவரத்து சமிஞ்ஞை விளக்குளை புதிதாகப் பொருத்துதல்

- வடிவமைப்பும் நேரக் கணக்கீடும்

| | | |
|---|---|---|
| i.) | மாலபே சந்தி | பூர்த்தி |
| ii.) | நுகேகொட உயர் சந்தைச் சந்தி | பூர்த்தி |
| iii.) | கொலுமாதம்ப சந்தி | நடைபெறுகின்றது |
| iv.) | நாவலச் சந்தி | நடைபெறுகின்றது |
| v.) | வெலிக்கடைச் சந்தி | பூர்த்தி |

- நிறுவுகை

| | | |
|---|---|---|
| i.) | மாலபே சந்தி | பூர்த்தி |
| ii.) | நுகேகொட உயர்சந்தைச் சந்தி | பூர்த்தி |
| iii.) | கொலுமாதம்ப சந்தி | நடைபெறுகின்றது |
| iv.) | வெலிக்கடைச் சந்தி | நடைபெறுகின்றது |

நடைமுறையிலுள்ள முறைமையின் மாற்றம்

நுகேகொடை – ஹைலெவல் வீதி சந்தியிலுள்ள கட்ட ஒழுங்கு முறையை மாற்றுதல் தொழில்நுட்ப சந்தி ஒல்கொட் மாவத்தையிலுள்ள கட்ட ஒழுங்கு முறையை மாற்றுதல்.

- **போக்குவரத்து அடையாளங்கள் பராமரித்தலும் புதிய பொருந்துகையும்**

பேணுகையும், விபத்துக்கள் காரணமான திருத்தமும்

- போக்குவரத்து ஒளி சமிஞ்ஞை முறைமையின் திருத்தம்

| | |
|---|---|
| களனி நடைபாதைக் கடவை | பூர்த்தி |
| தொட்டலங்கா சந்தி | பூர்த்தி |
| தெகிவளை சந்தி | பூர்த்தி |
| பியகம சந்தி | பூர்த்தி |
| கிரிபத்கொட சந்தி | பூர்த்தி |
| கன்சபா சந்தி | பூர்த்தி |
| போதிராஜ சந்தி | பூர்த்தி |
| 2வது குறுக்குத் தெரு | பூர்த்தி |
| தொட்டலங்கா சந்தி – சுரங்கப் பாதை நிலக் கம்பியில் ஏற்பட்ட சேதங்கள் | பூர்த்தி |
| ஒறுகொடவத்தை சந்தி | பூர்த்தி |
| கனத்தை சந்தி – சுரங்கப் பாதை நிலக் கம்பியில் ஏற்பட்ட தேசதங்கள் | பூர்த்தி |
| தெஹிவளை சந்தி - 2வது லிருந்து | பூர்த்தி |
| கட்டுப்பத்தை சந்தி | பூர்த்தி |
| ஒறுகொடவத்தை சந்தி – 2வது லிருந்து | பூர்த்தி |
| கனத்தை சந்தி – கட்டுப்பாட்டு கதவில் சேதம் | பூர்த்தி |
| நீர்கொழும்பு தெல்வத்தை சந்தி | பூர்த்தி |
| கிரிலப்பனை சந்தி – கட்டுப்பாட்டு கதவில் சேதம் | பூர்த்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சந்திகளை
    1. கொட்டாவ சந்தி — நடைபெறுகின்றது
    2. தெல்கந்தை சந்தி — நடைபெறுகின்றது

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

- காவல் துறையிடமிருந்து விபத்து தரவுகளைப் பெறுவதில் சிரமம்
- சிரேஷ்ட பொறியியலாளர்கள் பற்றாக்குறை
- பயன்படுத்தும் கணனி பொருத்தமானதாக இல்லை

**சீர்படுத்தும் நடவடிக்கையும் முன்மொழிவுகளும்**

- காவல் துறையிடமிருந்து விபத்து தரவுகளைப் பெறுவதற்கு ஒரு முறைமை உருவாக்கப்பட வேண்டும்.

**திட்டமிடற் பகுதியின் கீழ் முகாமைத்துவ தகவல் முறைமை அலகு:**

2008 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் பின்வரும் வேலைகள் முகாமைத்துவ தகவல் முறைமை அலகினால் மேற்கொள்ளப்பட்டன.

- **வலையமைப்பு நிர்வாகம்**

  வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தனது செத்சிறிபாய வளவில் 170 கணனிகளைக் கொண்ட ஒரு கணனி வலையமைப்பையும் கோப்பு (பைல்) சேவகர், அஞ்சல் சேவகர், பதிவால் சேவகர் (proxy server) ஆகியோரையும் கொண்டுள்ளது. இந்த 170 கணனிகளில் 55 கணனிகளுக்கு இலத்திரனியல், மின்அஞ்சல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த சகல கணனிகளும் கம்பியில்லா உள்ளக வலையமைப்பால் இணைக்கப்பட்டுள்ளது. காலத்திற்குக் காலம் கணனியில் ஏற்படுகின்ற மாற்றங்களின் அடிப்படையில் புதிய கணனிகளையும் பெறுகின்றது. எல்லா பகுதிகளும் பிரதான கோப்பு சேவகர்களில் ஒரு பொதுவான தகவலைக் கொண்டுள்ளது. காலத்திற்கு காலம் முகாமைத்துவ தகவல் முறைமை அலகு, வலைப்பின்னலில் பயன்படுத்துவோர் மாற்றங்கள் அதன் முன்னுரிமையை கண்காணிக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் தங்களது பகுதிகளுக்குள் பயன்படுத்தப்படும் வலையமைப்பு செய்யப்பட்ட அச்சு பதிக்கும் இயந்திரங்களைக் கொண்டுள்ளது.
  தலைமை அலுவலகத்தினுள் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு சர்வதேச வலையமைப்பு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஈமெயில் (மின்னஞ்சல்) வசதி மற்றும் அஞ்சல் சேவகர்**
  தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஈமெயில் சேவகர், தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய ஊழியர்களுக்காக 230 ஈமெயில் கணக்குகளை பேணுகின்றது.
- **பிராந்திய ஊழியர்களுக்கு ஈமெயில் வசதிகளை வழங்குதல்**
  வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஈமெயில் சேவகர் எல்லா மாகாணங்களிலு- முள்ள பிராந்திய ஊழியர்களுக்கான வெவ்வேறான ஈமெயில் கணக்குகளை பேணுகின்றது.
- **வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வெப்சைட் (இணையதளம்) பேணுகை**
  வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வெப்சைட் புதிய வடிவமைப்பினை ஏற்படுத்துவதுடன், காலத்திற்குக்காலம் முகாமைத்துவ தகவல்முறைமை அலகு வெப்சைட்டை நாளது வரைப்படுத்துகின்றது. செயற்திட்டங்களின் பெறுகை விபரங்கள், உரிய சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரதான தகவல்கள் இடம்பெறும்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வலையமைப்பை விருத்தி செய்தல், மேம்படுத்தல், நாளது வரைப்படுத்தல்.
- செயற்திட்ட கண்காணிப்பு முறைமை தரவுகளை பேணுதல், நாளது வரைப்படுத்தல்.
- முக்கியமான தரவுகளை சேகரித்து வைத்தல்.
- கணனி வைரஸ் தாக்கத்தைத் தடுக்கும் இயந்திர முறைமை
  கணனி வலையமைப்பிற்குள் வைரஸ் தாக்கங்கள் ஏற்பட்டால் முகாமைத்துவ தகவல் அலகானது, வலையமைப்பிற்குள் தெரிவு செய்யப்பட்ட கணனிகளிலுள்ள வைரசை அழிக்கும் அனுமதி பெற்ற வாடிக்கையாளன் சேவகரை வழங்குகின்றது. ஈமெயில், சர்வதேச வசதிகளைக் கொண்டவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- IT (தகவல் தொழில்நுட்பம்) மேம்பாட்டிற்கான திட்டமிடல் பகுதியின் உள்பயிற்சிக்கு உதவுதல்.
- IT மேம்பாட்டிற்கான திட்டமிடல் பகுதியின் வெளியே உதவுதல்.
- கேள்வி ஆவணங்கள்/கொள்வனவு முறைகள் ஆகியவற்றை தயாரித்தலும் மதிப்பிடலும்.
- செயற்திட்ட வரைபடங்களை சேரித்தலும், பாதுகாத்தலும்
- நிதிப் பகுதிகளில் நிதியியல் விண்ணப்பங்கள் பொதிகளுக்கான தேவையான ஆதரவினை வழங்குதல்
  வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பகுதியின் கணனி வலையமைப்பு தற்போது 40 கணனிகளைப் பயன்படுத்துவோருடன் ஒரு தனியான சேவகருடன் இயங்குகிறது. தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப்பகுதி நிதிச் செயன் முறைக்காக நாளாந்தம் இரண்டு பிரதான கணனிப் பொதிகளைப் பயன்படுத்துகின்றது. இதில் பிரதான பொதியான சம்பளப்பொதி தொடர்ந்து செயற்படுகிறது. மற்றைய பொதியான இறுதிக்கணக்குகள் பொதியும் விரைவில் செயற்படும்.
- வன்பொருள் மற்றும் மென்பொருளில் ஏற்படுகின்ற பிழைகளை திருத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல்.

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

- வன்பொருள் கருவிகளை (Ex. Wireless Access Points, A dapters etc.) அல்லது கணனி வன்பொருள் வகைகளான (வயர் இல்லாத வலையமைப்பு, வன்பொருள் தட்டுக்கள்) ஆகிய வலையமைப்பை இடம் மாற்றுவதில் கஷ்ட நிலை. இது கணனி வலையமைப்புக்கான வன்பொருள் பாகங்களான பயன்படுத்துவது குறைவாகும்.

## 3.10 பொறிமுறைப் பிரிவின் செயலாற்றுகை

**2008 ஆம் ஆண்டு காலத்தில் முன்னேற்றமும் செயலாற்றுகையும்**

பிரதான பொறியியலாளர்களின் பிராந்தியங்களில் அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக 24 இரட்டைச் சில்லு உருளும் உருளைகளை கொள்வனவு செய்வதற்காக தயாரிக்கப்- பட்ட மாதிரிகளும், கேள்விப் பத்திரங்களும் சபையின் அங்கிகாரத்திற்காக சமர்ப்பிக்கப்-பட்டது. இச்சபையானது கொள்வனவுகளை அங்கீகரித்ததுடன், கேள்விப் பத்திரமிடும் செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டது.

பின்வரும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக தயார்செய்யப்பட்ட மாதிரிகளும், கேள்விப் பத்திர ஆவணங்களும் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

03 இயந்திரம் செலுத்தும் ஓட்டும் பொறி வாகனம்
01 நடமாடும் பாரம் தூக்கும் கருவி வாகனம்
01 மின்சார அதிர்வால் இறுக்கும் வாகனம்
01 மோட்டார் கிரேடர் வாகனம்

வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு சபை அங்கீகாரம் வழங்கியதுடன், கேள்விப் பத்திரங்களை கோரும் செயன்முறையும் ஆரம்பிக்கப்பட்டது.

- அம்பாறை பிரதான பொறியியலாளர்கள் அலுவலகத்தினுள் அகற்றுவதற்குரிய 06 வாகனங்கள் (இயந்திரங்கள், உபகரணம், வாகனங்கள், பழைய உலோகங்கள் போன்றவை) அகற்றுவதற்காக 2007 இல் இனங்காணப்பட்டு, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக (VAT) 2,350,000 ரூபா வருமானமாகப் பெறப்பட்டது.
- அநுராதபுரம் MNRCE வேலைத் தளத்தில் 2007 இல் அகற்றுவதற்காக இனங் காணப்பட்ட 51 வாகனங்கள் (இயந்திரங்கள், உபகரணம், வாகனங்கள், பழைய உலோகங்கள் போன்றவை) அகற்றப்படுவதுடன், பெறுதி சேர்க்கப்பட்ட வரி (VAT) நீங்கலாக 6,857,650 ரூபா வருமானம் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பூகொட முற்கலவை பொறிப் பகுதி வளாகத்திலுள்ள பழைய வாகனங்கள் அகற்றப்பட்டதுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக 278,337 ரூபா வருமானமாகப் பெறப்பட்டது.
- SD&CC மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்பந்தக்காரர்களுக்கு உருக்கு தகட்டு முறை குற்றிகளை வாடகைக்கு விடுதல்.
- மதியுரைஞர்கள், அமைச்சருடைய இணைப்பாளர்கள் பயன்படுத்துவதற்கு பல வாகனங்களை வாடகைக்கு விடுதல்.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வாகனங்கள், இயந்திரங்களின் திருத்தங்கள் மேற்கொள்வதிலும் பராமரிப்பும்.

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

- வீதி பராமரிப்பு வேலைகளுக்கான உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கம் போதாமை.
- வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் திருத்தம், பராமரிப்பு தொடர்பில் நிதிப் பகுதியிலிருந்து கொடுப்பனவை மேற்கொள்வதில் தாமதம்.
- 1000 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் திருத்தம், பராமரிப்புக்களை மேற்கொள்வதற்கு பின்வரும் வசதிகள் பற்றாக்குறையாக காணப்படுகின்றது.

    வேலைத்தள வளவுகளின் இடம்

    தரிப்பிடங்களின் இடம்

    வேலைத்தள அலுவலகம் மற்றும் இடம்

    பாரம் தூக்கிகள், நீர் கொண்டு இயக்குகிற இயந்திரங்கள் போன்ற சிறப்பான உபகரணம்

    வேலைத் தளத்திற்கான நல மேம்பாட்டு வசதிகள்

    வேலைத் தளங்களில் களஞ்சியப்படுத்தும் வசதிகள்

    பொறிமுறை கண்காணிப்பாளர், இயந்திரவியலாளர், இயக்குநர்கள் போன்ற தொழில்நுட்ப ஊழியர்கள்

- வேலைத் தளத்திலுள்ள வசதிகள் குறைபாடு காரணமாக வாகன திருத்தம் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிற்கான வெளியிட நிறுவனங்களில் தங்கியிருத்தல்.

- மேலதிக பொறிமுறை மேற்பார்வையாளர், சிறு திருத்தம், வழமையான பராமரிப்பு போன்றவற்றை கையாளுவதற்கு போக்குவரத்து பகுதிக்காக கோரப்படுகிறார்.

- இப்பிராந்தியத்திலுள்ள சாதாரண இயந்திரங்களை திறமையற்றவர்களால் இயக்கப்படுகிறது. இது மேலதிக திருத்தங்களை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீர்படுத்தும் நடவடிக்கைகளும் முன்மொழிவுகளும்**

- வீதி பராமரிப்பு வேலைகளுக்காக உபகரங்களை கொள்வனவு செய்வதற்கு வரவு செலவுத் திட்டத்தில் போதியளவு நிதியைக் கோருதல்.
- வாகனங்கள், இயந்திரங்களை திருத்துதல், பராமரித்தல் தொடர்பான கொடுப்பனவுகளை கையாள்வதற்கு நிதிப் பகுதியில் ஒரு கணக்காளரை நியமித்தல்.
- அங்குலானையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேலைத் தளத்தை வளவின் ஒரு பகுதியை பயன்படுத்துதல். இது வரையறுக்கப்பட்ட MNRCE (தனி) நிறுவுவதற்கு கையளிக்கப்படுகின்றது.
- இயந்திரப் பிரிவு வேலைத்தள போக்குவரத்துப் பிரிவு ஆகியவற்றை பலப்படுத்துவதற்காக பின்வரும் ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

பணிப்பாளர்களின் அலுவலகத்திற்கான 2 பொறிமுறை மேற்பார்வையாளர்கள்
வேலைத் தளத்திற்கான 1 பொறிமுறை மேற்பார்வையாளர்.
போக்குவரத்து பிரிவுக்கான 1 பொறிமுறை மேற்பார்வையாளர்.
வேலைத் தளத்திற்கான 5 இயந்திரவியலாளர்கள்
வேலைத் தளத்திற்கான 7 இயக்குநர்கள்

- திறமையுள்ள இயக்குநர்களை நியமிப்பதற்கு அல்லது இப் பிராந்தியத்திலுள்ள இலகுவான உபகரணங்களை இயக்குகின்றவர்களுக்கு செயற்படுத்துதல், அவற்றின் வழமையான பராமரிப்பு பற்றி ஒரு முழுமையான பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கு செய்வதற்கு முன்மொழியப்படுகிறது.

- போக்குவரத்துப் பிரிவில் எழுதுவினைஞர்களை 04 ஆகக் குறைப்பதற்கும், ஆங்கிலத் தட்டெழுத்தாளர் ஒருவரை அல்லது கணனி இயக்குனரை நியமிப்பதற்கு முன்மொழியப்படுகிறது.

- மாகாணங்களில் உள்ள வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்புபட்ட திருத்தங்கள் விடயங்கள் தொடர்பில் பொறிமுறைப் பிரிவையும் வேலைத் தளத்தையும் ஒருங்கிணைப்பதற்கும் சிறு திருத்தங்களை கையாளுவதற்கும் ஒவ்வொரு பாகங்களுக்கும் பொறிமுறை மேற்பார்வையாளர்களை நியமிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.11 பயிற்சியளித்தல் பிரிவின் செயலாற்றுகை

2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயிற்சிப் பகுதியின் சுருக்கமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை-16 : உள்ளகப் பயிற்சி**

| இல. | கற்கை நெறியின் பெயர் | சமூகமளித்தோரின் எண்ணிக்கை | 2008 இல் உள்ள நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | எழுதுவினைஞர்களுக்காக நடாத்தப்பட்ட கணனிப் பயிற்சி (Ms Word/Excel/Power Point/Access). (02 குழுக்கள் : ஒவ்வொரு குழுக்களிலும் 15 பேர்) | 30 | 13 |
| 2 | பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக நடத்தப்பட்ட மதிப்பீடுகள், அளவை-களைத் தயாரிப்பது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (3 குழுக்கள் : ஒவ்வொரு குழுக்களிலும் 50 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 131 | 3 |
| 3 | பொறியியலாளர்களுக்காக நடாத்தப்பட்ட வியாபார ஆங்கிலம் கற்கைநெறி (2 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 30 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 53 | 21 |
| 4 | சகல ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட கணனி தொழில் நுட்பவியல் கற்கைநெறி (8 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 12 பேர் பங்கு பற்றுகிறார்கள்) | 88 | 29 |
| 5 | பொறியியலாளர்களுக்காக நடாத்தப்பட்ட கணனிப் பயிற்சி Ms (செயற்திட்டம்) – (01 குழு) | 8 | 1 |
| 6 | படவரைஞர்களுக்காக நடாத்தப்பட்ட கணனி பயிற்சி ஓட்டோ கற் 3D (Auto CAD 3D) (12 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 15 பேர் பங்கு பற்றுகிறார்கள்) | 24 | 15 |
| 7 | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட கணனி பயிற்சி Auto CAD 2000 (3 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 12 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 36 | 11 |
| 8 | எழுதுவினைஞர்களுக்காக நடாத்தப்பட்ட ஆங்கிலப் பத்திர தொடர்பாடல் கற்கைநெறி (2 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 25 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 45 | 18 |
| 9 | தொழில்நுட்ப உதவியாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் (5 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 45 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 196 | 26 |
| 10 | பொறியியலாளர்களுக்காக நடாத்தப்பட்ட பிற்மண் பொருட்கள், அஸ்போல்ட் கொங்கிறீட் பயிற்சி (ஒரு குழு) | 50 | 1 |
| 11 | பிரத்தியேக கணனிக்கான பராமரிப்பும் சிறு திருத்தங்- களை சரி செய்யும் பயிற்சி (2 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 15 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 27 | 8 |
| 12 | பொறியியலாளர்களுக்காக நடாத்தப்பட்ட கணனி பயிற்சி Auto CAD 2000 & 2006 (ஒரு குழு) | 10 | 4 |
| 13 | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட கணனி பயிற்சி Auto CAD 2D (2 குழுக்கள் : ஒவ்வொரு குழுவிலும் 20 பேர் நியமிக்கப்பட்டார்கள்) | 37 | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒரு நாள் கருத்தரங்கு:**

"நிச்சயமற்ற நிலைமைகளின் கீழ் வரைபை மேற்கொள்ளும் தீர்மானங்கள்" பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு பெலவத்தையிலுள்ள உபகரண பயிற்சியளிக்கும் நிலையத்தில் (CETRAC) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட ஊழியர்களுக்காக கார்த்திகை மாதத்தில் நடாத்தப்பட்டது. ஏறத்தாழ அறுபது சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இதில் பங்கு பற்றியுள்ளார்கள்.

**குழுத் தலைவர்களுக்கான பயிற்சியளிக்கும் கற்கைநெறி:**

2007 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியான இரண்டு வருட பயிற்சியளிக்கும் கற்கை நெறி ஒவ்வொரு பிரதான பொறியியலாளர்களின் பிராந்தியங்களில் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது 2008 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படும். இந்த பயிற்சி கற்கைநெறி ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9.00 முதல் மாலை 4.00 வரை நடாத்தப்பட்டிருந்தது. மொத்தமாக 530 குழுத் தலைவர்கள் இந்தக் கற்கை நெறியில் பங்கு பற்றியிருந்தனர்.

**பொருட்கள் மற்றும் நடைபாதை பொறியியலில் ஒரு வருட கிரகித்தல் பயிற்சிக் கற்கைநெறி:**

2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாத்தில் பதினான்கு (14) பொறியியலாளர்களுக்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, அது ஒரு வருடத்துடன் முடிவடைந்தது. எனினும் அவர்கள் பரீட்சைக்கு தோற்ற வேண்டி இருப்பதுடன், தங்களது கற்கைநெறி வெற்றி- கரமாக நிறைவு செய்ததன் பொருட்டு ஆராய்ச்சி அறிக்கையினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**பரீட்சைகளும் மதிப்பீட்டு சோதனைகளும்:**

- ஆங்கிலத் தொடர்பாடலுக்கான இறுதிப் பரீட்சையானது, பயிற்சியை நிறைவு செய்த எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள் மற்றும் ஏனையோர்களுக்காக நடாத்தப்பட்டது. இந்தப் பரீட்சைக்கு இருபத்தொன்பது (29) உத்தியோகத்தர்கள் தோற்றியிருந்தார்கள்.
- வியாபார ஆங்கிலத்திற்கான இறுதிப் பரீட்சை, பயிற்சியை பூர்த்தி செய்த பொறியியலாளர்களுக்காக நடாத்தப்பட்டது. இருபத்தேழு (27) உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

**புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கான அறிமுகக் கற்கைநெறி:**

நிர்வாகம் மற்றும் நிதிச் செயன்முறைகள் பற்றிய அறிமுக கற்கைநெறி, புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட எழுதுவினைஞர்களுக்காக பயிற்சிப் பகுதியில் நடாத்தப்பட்டது. ஐந்து உத்தியோகத்தர்கள் குழுக்களுக்கு வெவ்வேறாக பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு குழுக்களுக்குமான காலம் ஐந்து (5) நாட்களாகும். மொத்தமாக இருநூற்றி முப்பத்தேழு (237) எழுதுவினைஞர் உத்தியோகத்தர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட கணனி இயக்குனர்களுக்கான அறிமுக கற்கைநெறி பயிற்சிப் பகுதியில் நடாத்தப்பட்டது. இரண்டு குழு உத்தியோகத்தர்களுக்கு வெவ்வேறாக பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவுக்குமான காலம் பத்து நாட்களாகும். மொத்தமாக பதினாறு கணனி இயக்குனர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

**தொழில்சார் மீளாய்விற்காக பொறியியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்:**

வடிவமைப்பு அலுவலக முன்னுரிமை முறைமையின் கீழ் வடிவமைப்பு அலுவலக பயிற்சி யளிப்பதற்கான பொறியியலாளர்களின் நியமனம், பயிற்சிப் பகுதியின் மேற்பார்வையின் கீழ் சீராக நடைபெறுகின்றது. இந்த வருட காலத்தில் 24 பொறியியலாளர்கள் ஐந்து (5) வடிவமைப்பு அலுவலகங்களில் வடிவமைப்பு பயிற்சியை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-17 : தொழில்சார் மீளாய்வுக்காக பொறியியலாளர்களுக்கு பயிற்சியளித்தல்

| வடிவமைப்பு அலுவலகத்தின் பெயர் | நியமனம் செய்யப்பட்ட பொறியியலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நெடுஞ்சாலைகள் வடிவமைப்பு அலுவலகம் | 06 |
| பால வடிவமைப்பு அலுவலகம் | 07 |
| கண்டி வடிவமைப்பு அலுவலகம் | 05 |
| குருநாகல் வடிவமைப்பு அலுவலகம் | 03 |
| இரத்தினபுரி வடிவமைப்பு அலுவலகம் | 03 |
| மொத்தம் | 24 |

**கடல்கடந்த பயிற்சி:**

நிர்வாக அமைப்பின் வருடாந்த கடல்கடந்த பயிற்சித் தேவைகள் தயாரிக்கப்பட்டு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட வருடாந்த தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு (DER) அனுப்பப்பட்டது.

2008 ஆண்டு காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அறுபது (60) உத்தியோகத்தர்கள், கடல்கடந்த நாட்டு பயிற்சிக் கற்கைநெறி வேலைத் தளங்கள் மற்றும் மாநாடுகள் போன்றவற்றிற்காக பங்கு பற்றியிருந்தனர்.

**வெளி நிறுவனங்களில் பயிற்சியளித்தல்**

மேலே குறிப்பிடப்பட்ட உள்ளகப் பயிற்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, பயிற்சி அளிக்கும் பகுதியானது வெளியக நிறுவனங்களினால் நடாத்தப்படும் பயிற்சி கற்கை நெறிகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை- யின் 598 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

அட்டவணை-18 : வெளிநிறுவனங்களில் பயிற்சி அளித்தல்

| இல: | நிறுவனங்கள் | பயிற்சிகளின் விபரம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வீடமைப்பு திட்டமிடல் மற்றும் கட்டிடங்கள் நிலையம் (CHPB) | கணிய அளவை (BOQ மற்றும் மதிப்பீகளைத் தயாரித்தல் | 09 |
| 2 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) | சூழல் தாக்க மதிப்பீடுகளின் (EIA) அடிப்படை-யில் சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 |
| 3 | இலங்கை நிர்மாண கைத்தொழில் குழு (CCISL) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணை-யுடன் 2008 பங்குனி 27, 28 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட தேசிய மதியுரைஞர் சேவைகள் | 03 |
| | | 2008 ஆவணி 26 ஆம் திகதி தேசிய அபிவிருத்திக்கான போக்குவரத்து உட்கட்டமை பின் முக்கியத்துவம் பற்றிய கருத்தரங்கு | 12 |
| | | சிறந்த செயற்திட்ட முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில்நுட்பம் பற்றிய வேலைத்தளம் | 16 |
| | | இடர்முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு 2008 கார்த்திகை 4ஆம் திகதியில் நடாத்தப்பட்டது | 20 |
| | | செயற்திட்ட முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு | 06 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4 | பொருட் கையாளுகை மற்றும் போக்குவரத்து பட்டையம் பெற்ற நிறுவனம் | தென் ஆசியாவிற்கான இலங்கை பொருட் கையாளுகை மற்றும் போக்குவரத்து | 06 |
| 5 | நிர்மாண பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவகம் (ICTAD) | நிர்மாண பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவக விலை மாற்ற வகுப்பீடு பற்றி 2008 தை 17 ஆம் திகதி நடைபெற்ற 2வது கருத்தரங்கு | 51 |
| | | ICTAD விலை மாற்ற வகுப்பீடு பற்றி 2008 ஆனி 5 ஆம் திகதியில் 3வது கருத்தரங்கு | 61 |
| | | ICTAD விலை மாற்ற வகுப்பீடு – சிங்கள மொழி மூலமான 2008 பங்குனி 4 இல் நடாத்தப்பட்டது | 10 |
| | | நிர்மாண கைத்தொழில் பயன்பாடும் கணனி மென்பொருள் திட்டம் | 02 |
| | | ICTAD விலை மாற்ற வகுப்பீடு – சிங்கள மொழி மூலம் - (2008 புரட்டாதி 25 இல் நடைபெற்றது) | 13 |
| | | ISO 9001-2000 தர முகாமைத்துவ முறைமை பற்றிய கருத்தரங்கு | 05 |
| 6 | தொழில் முயற்சியாண்மை வழி-களும் தந்திரோபாயங்களின் அபிவிருத்தியின் ஆரம்பம் | ஜானகி (சிங்கள மொழி மூலம்) விடுதியில் 2008 ஆனி 12 இல் மேற்பார்வை செய்தல் தொடர்பான அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு | 15 |
| 7 | இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL) | மதியுரை சேவைகளின் தெரிவும் தொழிலும் | 05 |
| | | அறிக்கை எழுதும் அறிவு தொடர்பான ஒரு நாள் வேலைத் தளம் | 04 |
| | | 2008 ஆடி 11, 18 ஆம் திகதிகளில் நடை பெற்ற செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பான 2 நாள் வேலைத் தளம் | 04 |
| | | 2008 ஆவணி 22 மற்றும் 29 ஆம் திகதியில் செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பாக கண்டியில் நடைபெற்ற 2 நாள் வேலைத்தளம் | 01 |
| | | இயந்திரவியலில் பொறிமுறை வடிவமைப்பு பற்றிய சான்றிதழ் கற்கைநெறி | 01 |
| | | பொறியியலாளர்களுக்காக தொடர்பாடலில் பயிற்சி கற்கைநெறி | 01 |
| 8 | அரசாங்க கணக்குகள் மற்றும் நிதி நிறுவகம் (INGAF) | வெளிநாட்டு உதவிக் கணக்கீட்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 09 |
| | | உள்ளகக் கணக்காய்வு திறன் அபிவிருத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 03 |
| 9 | வழங்கல் மற்றும் முகாமைத்துவ நிறுவகம் | களஞ்சியப் பாதுகாப்பில் சான்றிதழ் கற்கை நெறி (சிங்கள மொழிமூலம் 2008) | 01 |
| 10 | இலங்கை வர்த்தக சர்வதேச குழு (ICCSC) | 2009 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட வரிகள் | 18 |
| 11 | INTRAD நிறுவகம் | வாகன அறிவு மற்றும் வாகன பராமரிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 |
| 12 | தொழில் ஆய்வு தேசிய நிறுவகம் (NILS) | கருவிகளை உற்பத்தி செய்வதற்காக 1 வருட நிகழ்ச்சித் திட்டம் பற்றிய 5s முறைகள் | 11 |
| | | | 14 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 13 | தேசிய கொள்வனவு முகவர் (NAP) | கேள்விப் பத்திரங்கள் பற்றிய வேலைத்தளம் | 08 |
| | | கேள்வி மதிப்பீடு பற்றிய வேலைத் தளம் - 2008 மாசி 25 ஆம் திகதி | 09 |
| | | கேள்வி மதிப்பீடு பற்றிய வேலைத் தளம் - 2008 சித்திரை 23 ஆம் திகதி | 02 |
| 14 | வரையறுக்கப்பட்ட திறந்த முறைமை தொழில்நுட்பவியல் (தனி) நிறுவனம் | Civil 3D & STAAD-PRO பற்றிய பயிற்சி | 20 |
| 15 | இலங்கை பூகோள தொழில்-நுட்பவியல் அமைப்பு (SLGS) | இலங்கை பூகோள தொழில்நுட்பவியல் அமைப்பின் வருடாந்த மாநாடு | 08 |
| 16 | இலங்கை அளவைத் திணைக்களம் | 2008 கார்த்திகை 10-14 ஆம் திகதிகளில் நடைபெற்ற 29வது ஆசியா மாநாடு | 03 |
| 17 | மொறட்டுவை பல்கலைக்கழகம் | பூகோள தகவல் முறைமை (GIS) | 01 |
| | | சர்வதேசத்திற்கான நிர்வாக ஒப்பந்தம் பற்றிய கருத்தரங்கு | 13 |
| | | 2008 ஆம் ஆண்டு மாசி 29 ஆம் திகதியிலும் பங்குனி 1,7 மற்றும் 8 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட தீர்மானம் | |
| | | நெடுஞ்சாலை பொறியியலில் பயிற்சி நிகழ்ச்சி திட்டம் - மாதிரி 1 | 49 |
| | | நெடுஞ்சாலை பொறியியலில் பயிற்சி நிகழ்ச்சி திட்டம் - மாதிரி | 46 |
| | | கணனி கருவிகளைப் பயன்படுத்தி கருத் திட்டத்தின் கிரய, நேர முகாமைத்துவம் தொடர்பாக 2008 வைகாசி 14, 17, 24,31 ஆம் திகதிகளிலும், ஆனி 07 ஆம் திகதியிலும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் | 06 |
| | | 2008 ஆனி 25, 26 ஆம் திகதிகளில் நடாத்தப் பட்ட கொங்கிறீட் நடைபாதை வடிவமைப்பு மற்றும் நிர்மாணமும் | 25 |
| | | 2008 ஆடி 22, 23, 24 ஆம் திகதிகளில் நடை பெற்ற நெடுஞ்சாலைகளின் கணனி மயப்படுத்-தப்பட்ட பூகோள வடிவமைப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 11 |
| | | 2008 ஆவணி 19, 20 ஆம் திகதிகளில் நடை பெற்ற போக்குவரத்து முகாமைத்துவ தெரிவு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 02 |
| | | 2008 ஆடி 28 ஆம் திகதியில் நடைபெற்ற தென் ஆசியாவை நோக்கிய அசைவு பற்றிய பிராந்திய மாநாடு | 19 |
| | | ஒப்பந்த நிர்வாகம் பற்றிய வேலைத்தளம் | 49 |
| | | 2008 புரட்டாதி 26, 27 ஆம் திகதிகளிலும், 2008 ஐப்பசி 3, 4, 10, 11,18 ஆம் திகதி- களிலும் நடைபெற்ற மண் சரிவு ஆய்வுகளில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 05 |
| | | பொறியியல் அளவைகளுக்காக மொத்த நிலையங்களும், Auto CAD உம் | 06 |
| 18 | பேராதெனிய பல்கலைக்கழகம் | வலுப்படுத்தும் அபிவிருத்திக்காக புவியியல் தகவல்கள் பற்றிய 5வது தேசிய கருத்தரங்குகள் | 06 |
| | | இயந்திரங்கள், பொருட்கள் விஞ்ஞானம், அணு விஞ்ஞானம், அணு தொழில்நுட்பம் பற்றிய ஒரு சர்வதேச மாநாடு | 05 |
| | மொத்தம் | | 598 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளூர் பல்கலைக்கழகங்கள்∴நிறுவனங்களில் நீண்ட கால கற்கைநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் :**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முப்பத்தேழு (37) உத்தியோகத்தர்கள், உள்ளூர் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களில் பொறியியலில் முதுமானிப் பட்டம் (M.Eng.)/ விஞ்ஞானத்தில் முதுமானிப் பட்டம் (M.SC)/பட்டபின் படிப்பு டிப்புளோமா/டிப்புளோமா போன்ற நீண்டகால கற்கை நெறிகளை பின்தொடர்வதற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

**அட்டவணை-19 : உள்ளூர் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களில் நீண்ட கால கற்கைநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்புக்கள்**

| இல: | நிறுவனங்கள் | பயிற்சிகளின் விபரம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மொறட்டுவை பல்கலைக்கழகம் | 2009/2010 இல் நிர்மாண செயற்திட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானிப் பட்டம்/பட்டபின் டிப்புளோமா | 02 |
| 2 | மொறட்டுவை பல்கலைக்கழகம் | செயற்திட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமானி (M.Sc)/பட்டபின் படிப்ப டிப்புளோமா | 02 |
| 3 | மொறட்டுவை பல்கலைக்கழகம் | பொறியியலில் முதுமானி ஆவதற்கான பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் (பகுதி நேரம்) அத்திவார பொறியியல் மற்றும் பூமி தொடர்ந்திருக்கும் முறைமை ஆகியவற்றில் பட்டம், பட்டபின் படிப்பு | 02 |
| 4 | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (SLIDA) | பொதுத்துறை நிறைவேற்றுகைக்கான 2008/2009 இல் தொழில் விருத்திக்கான (DEP) ஆங்கிலத்தில் டிப்புளோமா | 01 |
| 5 | பிரயோக ஆராய்ச்சி நிலையம் | பிரயோக சமூகவியலில் சான்றிதழ் மற்றும் டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டம் | 03 |
| 6 | வரையறுக்கப்பட்ட பல தொழில் நுணுக்கங்களை கற்பிக்கும் நிறுவனம் | நிறைவேற்று செயலாளர்கள்/நிர்வாக உதவியாளர்களுக்கான டிப்புளோமா | 01 |
| 7 | வர்த்தக சட்டம் மற்றும் தொழில் பயிற்சியின் அபிவிருத்திக்கான நிறுவனம் (ICLP) | வர்த்தக தீர்வுகளில் டிப்புளோமா | 05 |
| 8 | அரசாங்கக் கணக்குகள் மற்றும் நிதி நிறுவனம் (INGAF) | 2008 ஆவணி 14 முதல் தமிழ் மொழியில் தொடர்பாடல் திறமைகளில் டிப்புளோமா | 09 |
| 9 | வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவனம் NIBM – (கொழும்பு நிலையம்) | மனிதவள முகாமைத்துவத்தில் தேசிய டிப்புளோமா – சிங்கள மொழி மூலம் | 08 |
| | | மனிதவள முகாமைத்துவத்தில் தேசிய டிப்புளோமா – ஆங்கில மொழி மூலம் | 01 |
| 10 | வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவனம் NIBM – (குருநாகல் நிலையம்) | மனிதவள முகாமைத்துவத்தில் தேசிய டிப்புளோமா – சிங்கள மொழி மூலம் | 03 |
| | | **மொத்தம்** | **37** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பயிலுநர்களுக்கான பயிற்சி சந்தர்ப்பங்கள்**

தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் ஒத்துழைப்புடனான பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களின் மாணவர்களுக்கும், தொழில் பயிலுநர்களுக்கும் அவர்களது வேலைத்தள பயிற்சியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இப் பகுதியினால் வழங்கப்பட்டது. கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து ஆறு (06) பயிலுநர்கள் ஒரு வருட பயிற்சியை பூர்த்தி செய்வதுடன், மொறட்டுவ பல்கலைகழகத்திலிருந்து ஒரு (1) சிவில் பொறியியல் மாணவர் 2008 ஐப்பசி மாதத்தில் 24 வாரங்களுக்கு பயிற்சியை ஆரம்பித்துள்ளார். களனி பல்கலைக்கழகத்தின் தாவரவியல் திணைக்களத்திலிருந்தான மூன்று (3) சூழலியல் பாதுகாப்பு முகாமைத்துவ மாணவர்கள் தங்களது இரண்டு வார பயிற்சியினை தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தில் பூர்த்தி செய்துள்ளனர்.

**வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம்**

ஒரு பொறியியலாளர் டோக்கியோ பல்கலைக்கழகத்தில், போக்குவரத்துப் பொறியியல் மற்றும் திட்டமிடல் முதுமாணிப் பட்டத்தில் இரண்டு வருட கற்கை நெறியினைப் பூர்த்தி செய்துள்ளார். ஒரு பொறியியலாளர், தற்போது தாய்லாந்து கசேற்சார்ட் பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியலில் முதுமாணிப் பட்டத்திற்கான இரண்டு வருட கற்கைநெறியை பின்தொடர்கின்றார்.

**வீதிச் செயற்திட்டங்களின் நிதி முகாமைத்துவத்திற்கான கட்டிட வலுவிற்கான மதியுரை சேவைகள்**

பத்து உத்தியோகத்தர்கள் இந்தியாவிலுள்ள பிறிபாக் வென்சர் கம்பனியின் மதியுரைஞர்களினால் பயிற்றுவிக்கப்படும் முக்கியமான குழுவிற்காக தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் (ADB TA 4178-SRI) கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியளிப்பின் பெரும் பகுதி ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்டது. 2006 இல் ஆரம்பிக்கப்- பட்ட இந்நிகழ்ச்சித் திட்டம், ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 2008 கார்த்திகை மாதத்திலிருந்து தொடரப்பட்டது. விரிவுரைகள், மதியுரைஞர்களினால் பயிற்சிப் பகுதியில் நடாத்தப்பட்டது. இரண்டு நாள் வேலைத்தளம் மார்கழி மாதத்தில் தாஜ் சமுத்திரா விடுதியில் நடாத்தப்பட்டது. இந்த வேலைத் தளத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களிலுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளும் எதிர்பாராத தடைகளும் கீழே தரப்பட்டுள்ளது.

- இந்தப் பகுதிக்குரிய ஒரேயொரு பொறியியலாளர் வடிவமைப்பு அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் பல மாதங்களாக அளிக்கப்படவில்லை. இப்பகுதியில் தரவுப் பதிவு இயக்குனர் இல்லை. இவ்வாறு தரவுப்பதிவு இயக்குனர் இன்மையால், இப்பகுதியின் தொழிற்பாட்டிற்கு மிக அவசியமான உழியர்களின் பல்வேறு பகுதியினருக்குக் கிடைக்கும் பயிற்சிகளின் அடிப்படையில் சரியான முறையில் பதிவேடுகளை பேணுவதற்கு மிகவும் கஷ்டமாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரண்டு போட்டோ பிரதி இயந்திரங்கள், மல்ரி மீடியா இயந்திரம் மற்றும் மிகவும் பழைய லேசர் அச்சடிக்கும் இயந்திரம் போன்றவை பாவிக்க முடியாமல் திருத்தம் செய்யப்பட வேண்டியவையாக காணப்படுகின்றது.
- கையேடுகளை விரைவில் வெளியிடுவதற்கு பொருத்தமான போட்டோ பிரதி இயந்திரம் இல்லை. பல சந்தர்ப்பங்களில் மூலப்பிரதிகளையே பிரிவுகளுக்கு வழங்கப்படுகின்றன.
- வள ஆளணியினர் தங்களுக்குப் படியாக குறைந்த வீதமே செலுத்துவதாக முறைப்பாடு செய்துள்ளனர். இப்போது குறைந்த வீதமாக படிசெலுத்துகின்ற படியால் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது.
- கணனி அறையில் பயன்படுத்தப்படும் கணனி மிகவும் பழமையானது. அதனுடைய கொள்திறன் போதுமானதாக இல்லாததால் இறுதியான மென்பொருள் பொதிகளை பாதுகாத்து வைக்க முடியாமலுள்ளது. குறிப்பாக வடிவமைப்பு பயிற்சியினதும், ஏனைய மென்பொருள் பொதிகளின் புதிய பாகங்கள் போன்றன.

**சீர்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னுரிமைகளும்**

- ஒரு புதிய மல்ரி மீடியா இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்யும் வரைக்கும் செயற்திட்ட முகாமைத்துவ அலகுகள் மற்றும் பீற்பாக் வென்சர் நிறுவனத்திடமிருந்து தற்காலிகமாக இயந்திரம் பெறப்பட்டது. வீதிச் செயற்திட்டங்களுக்கான நிதி முகாமைத்துவத்தில் கட்டிடங்களை அமைக்கும் ADB TA 4178 மதியுரைஞர்களே பீற்பாக் வெச்சர் நிறுவனமாகும்.
- மேலே குறிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி-யிடமிருந்து லேசர் அச்சடிக்கும் இயந்திரம் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் ஆகியவை தற்காலிகமாகப் பெறப்பட்டது.
- 2009 ஆம் ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், புதிய டியிட்டல் போட்டோ பிரதி இயந்திரம், கணனிகள் அச்சு இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- வீதிச் செயற்திட்டங்களுக்காக நிதி முகாமைத்துவத்தில் ADB TA 4178 கொள்திறன் கட்டிடங்களுக்கான மதியுரைஞரான பீட்பாக் வென்சர் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்ட மல்டி மீடியா புரொஜெக்டர், போட்டோ பிரதி இயந்திரம், லிப்ரொப் கணனி, டெஸ்ரொப் கணனி போன்றவை இந்த வருட இறுதியில் பயிற்சிப் பகுதிக்கு கையளிக்கப்பட்டது.
- 2008 ஐப்பசி மாதத்தில் ஒரு கணனி இயக்குனர் கடமைக்காக இணைந்தார். அத்துடன் 2008 கார்த்திகை மாதத்தில் ஒரு பொறியியலாளர் கடமைக்காக நியமிக்கப்பட்டார்.
- பணிப்பாளர் சபை 2009 இல் இருக்கக் கூடிய வள ஆளணியினருக்கு கொடுக்கக் கூடியபடி வீதத்தை அதிகரிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.12 சட்டப் பிரிவின் செயலாற்றுகை

2008 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் இப்பிரிவு ஆஜரானது.

| | | |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | - | 06 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | - | 12 |
| மாவட்ட நீதிமன்றம் | - | 18 |
| மேல் நீதிமன்றம் | - | 27 |
| தொழிலாளர் நீதிமன்றம் | - | 06 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | - | 10 |
| வீ.அ.அ. சபையால் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | - | 217 |
| மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் | - | 11 |

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

நிறைவேற்று பொறியியலாளர்கள் 24(1), 26(1), 33(அ) மற்றும் 35 ஆம் பிரிவுகளின் கீழ் சட்ட அறிவித்தல்களை அனுப்புவதற்கு முன்னர் அவர்கள் பொதுச் செல்வழி கட்டளைச் சட்டத்தின் ஊடாகவே செய்ய வேண்டும். அவர்கள் வழக்குகளை தாக்கல் செய்ய முன்னரே சட்டப் பகுதியிலிருந்து சட்ட ஆலோசனைகளைப் பெற வேண்டும். அந்த நேரத்தில் நீதிமன்ற கட்டளைகளை பின்பற்ற வேண்டும்.

## 3.13 நிதிப் பிரிவின் செயலாற்றுகை

31.12.2008 இல் இருந்தவாறான நிதி நிலைமைகளின் சுருக்கமும், 31.12.2008 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்படுகையும் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை-20 : பரீட்சை மீதியின் சுருக்கம் - நிதி நிலைமை**

| சொத்துக்கள் | 2007 (ரூபா) | 2008 (ரூபா) |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை | 447,187,668 | 442,800,769 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,002,214,463 | 3,962,130,119 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **4,449,402,131** | **4,404,930,888** |
| **உரிமைகளும் பொறுப்புக்களும்** | | |
| மூலதனமும் ஒதுக்கீடும் | 6,227,608 | (2,210,096,654) |
| நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை | 795,108,527 | 1,100,374,258 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 3,648,065,997 | 5,514,653,285 |
| **மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்** | **4,449,402,132** | **4,404,930,889** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-21 : வருமானம் மற்றும் செலவினங்களின் சுருக்கம்

| விபரம் | 2007 (ரூபா) | 2008 (ரூபா) |
|---|---|---|
| **தொழிற்படு வருமானம்** | | |
| வேலையிலிருந்து | 56,169,425 | (2,022,594,302) |
| பிற மூலங்களிலிருந்து | 555,077,721 | 425,621,176 |
| செலவுகளுக்காகப் பெறப்பட்ட வாக்குப் பணம் | 1,017,000,000 | 1,337,280,000 |
| **மொத்த தொழிற்படு வருமானம்** | **1,628,247,146** | **(259,693,126)** |
| **கழிக்குக:** செலவீனங்கள் | 1,714,000,445 | 1,756,068,108 |
| தேய்மானத்துக்கு முன்னரான தேறிய பற்றாக்குறை | (85,753,299) | (2,015,761,234) |
| **கழிக்குக:** தேய்மானம் | 126,983,303 | 66,401,224 |
| **தேறிய தொழிற்படு மிகை/ பற்றாக்குறை** | **(212,736,602)** | **(2,082,162,458)** |

வரையறுக்கப்பட்ட மகநெகும உபகரண, வீதி நிர்மாண கம்பனியிடமிருந்து கிடைக்கக் கூடிய வாடகை அளவீட்டில் குறைப்பனவு காரணமாக, மேலேயுள்ள செயற்பாட்டு வருமானத்தில் ரூபா 129 பற்றாக்குறையாக காணப்படுகிறது.

குறிப்பு : 2008 ஆம் ஆண்டிற்காக மேலே காட்டப்பட்ட ரூபா 2,022,594,302 பற்றாக்குறையானது நேரடி தொழில் சம்பளத்திற்காக பெறப்பட்ட ரூபா 1,050,720,000.00 வை உள்ளடக்கியுள்ளது.

## 3.14 நிருவாகப் பிரிவின் செயலாற்றுகை

நிர்வாகப் பகுதியின் வருடாந்த நிகழ்ச்சி, SOR மற்றும் பதவியினரது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கோரிக்கைகளின் அடிப்படையில் பின்வரும் நிலைகளைக் கருத்திற் கொண்டு வருட ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டது.

- ஆட்சேர்ப்பு
- பதவி உயர்வு
- இப்பிரிவுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்பானது பயிற்சிப் பணிப்பாளரின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

**2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- விளம்பரங்கள் மூலமாக விண்ணப்பங்கள் கோரிய பின்னர் 127 ஊழியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.
- உள்ளக பதவி உயர்வுகள் 276 உத்தியோகத்தர்கள்/ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது.
- உள்ளக விண்ணப்பங்கள் கோரியதன் மூலம் 52 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.
- 48 உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் இளைப்பாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழில் வாய்ப்புக்காக 27 உத்தியோகத்தர்கள்/ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டது.
- இந்த வருடத்தில் மரணமான 9 ஊழியர்கள் சம்பந்தமான வேலைகள்.
- பத்து உத்தியோகத்தர்கள்/ஊழியர்கள் பதவி வெற்றிடத்தில் சேவையாற்றினர்.
- வருடாந்த இடமாற்றங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, சபையால் சிபார்சு செய்யப்பட்ட இடமாற்றங்கள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இடைநிறுத்தப்பட்டது.
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கடைகள் நிர்மாணம் சம்பந்தமான ஐந்து பொருட் காட்சிகள் நடாத்தப்பட்டன.
- பின்வரும் கடன்கள் செலுத்தப்பட்டன
  ரூபா 69,008,090.50 தொகை 423 ஊழியர்களுக்கு இடர் கடனாக செலுத்தப்பட்டது.
  ரூபா 6,026,100.00 தொகை 6 ஊழியர்களுக்கு வாகனக் கடனுக்குச் செலுத்தப்- பட்டது.
  ரூபா 240,000.00 தொகை 24 ஊழியர்களுக்கு துவிச்சக்கர வண்டிக்குச் செலுததப்பட்டது.
- ரூபா 291,550.00 தொகை 3 ஊழியர்களுக்கு நட்டஈடாக செலுத்தப்பட்டது.
- ரூபா 145,485,92.80 தொகை 53 ஊழியர்களுக்கு பணிக்கொடையாக செலுத்தப்- பட்டது.
- இப்பகுதியின் சகல அலுவலக உறுப்பினர்களுக்கு சுற்றுலா பிரயாணத்திற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.
- 60 நிர்வாக சுற்றறிக்கை கடிதங்களும் 22 நிர்வாக சுற்றறிக்கைகளும் வெளியிடப்பட்டது.
- வருடாந்த அறிக்கைக்கான மொழிபெயர்ப்பு சிங்களத்திலும் தமிழிலும் செய்யப்பட்டது.
- நிர்வாகப் பணிப்பாளரின் தலைமையில் நிர்வாகப் பிரிவில் 5 கூட்டங்கள் நடைபெற்றன.
- ஒரு ஒழுக்காற்று விசாரணை பூர்த்தி செய்யப்பட்டதுடன், 05 ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- 10 ஆரம்ப விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 25 ஆரம்ப விசாரணை- கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**நிகழச்சித் திட்ட முன்னேற்றமும் நடவடிக்கைகளும்**

தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் வருடாந்த இடமாற்றங்களைத் தவிர ஏனையவைகள் அமுல்படுத்தப்பட்டது.

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

முன்னேற்றத்தைப் பாதிக்கின்ற காரணிகளில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணிக்கான அங்கீகாரம் பெறுவது கஷ்டமானதாக உள்ளது. பல கடிதங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும் இவ்வருடத்தில் இதற்காக அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே பதவியணி அங்கீகாரம் அளிக்கப்- படாததால் வருடத்தில் பெறப்படும் பதவி உயர்வுகளை அமுல்படுத்துவது பாதிக்கப்- பட்டுள்ளது.

**சீர்படுத்தும் நடவடிக்கையும் முன்மொழிவுகளும்**

அங்கீகரிக்கப்பட்ட ஆட்களுடன் சிறந்த உறவு, தொடர்பாடல்களை பேணுதல், அதே போன்று சேவை தொடர்பாடலை விருத்தி செய்யும் பொருட்டு முகாமைத்துவ சேவை திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.15 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றுகை

இந்த வருடத்தில் இப்பிரிவால் முகாமைத்துவத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட உள்ளக ஆய்வுத் திட்டத்தின் பெரும் பகுதி நிறைவேற்றப்பட்டதுடன், திட்ட வேலைகள், தொழிலாளர் பதிவேடுகள், சாலைகள், பிரிவுகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள், ஒப்பந்தங்கள், மாற்ற உத்தரவுகள், சுற்று நிரூபங்கள், வங்கிக் கணக்குகள் போன்றன நிறைவேற்றப்பட்டன.

இப்பிரிவு குற்றச்சாட்டுகள், விண்ணப்பங்கள், தலைவர்/பொது முகாமையாளரால் குறிக்கப்பட்ட விஷயங்களை விசாரணை செய்து பொருத்தமான நடவடிக்கை- களுக்கான சிபாரிசுகளைச் செய்தல். செயற்திட்ட முகாமைத்துவ அலகளின் கணக்காய்வும் இந்தப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.
செயற்பாட்டு நிதி கணக்காய்வுகள் விசாரணைகள் ஆகியன சுதந்திரமாகவும், தொழில் ரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டன.

வாகனங்கள், ஊழியர்கள் தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நிதிச் செயற்திட்டங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.0 வெளிநாட்டு நிதிச் செயற்திட்டங்கள்

### 4.1 ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு (ADB)

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவானது, வீதி, பால புனரமைப்பு மேம்படுத்துகை செயற் திட்டங்களை வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் மேற்கொள்கின்றது. அவை வருமாறு :

1. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி பெற்ற வீதி வலையமைப்பு மேம்படுத்துகை செயற்திட்டம் (RNIP) கடன் இல: 1649 SRI (SF)
2. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கான புனரமைப்பு செயற்திட்டம் (CAARP) கடன் இலக்கங்கள் 2043/ 2044 SRI (SF)
3. ADB/EU சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை மீள நிர்மாணிக்கும் செயற்திட்டம் (TAARP) கடன் இல: 2167 SRI (SF), கொடை இல: 006 SRI (SF), கொடை இல: 011 SRI (SF)
4. AFD நிதி பெற்ற திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட செயற்திட்ட கடன் இல: CLK 3000 01 H
5. ஸ்பானிய நிதி பெற்ற உருக்குப் பாலங்கள்
6. USAID நிதி பெற்ற அறுகம்பை பாலத்தின் நிர்மாணம்

#### 4.1.1 வீதி வலையமைப்பு மேம்படுத்துகை செயற்திட்டம் (RNIP)

வீதி வலையமைப்பு மேம்படுத்துகை செயற்திட்டமானது ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி ஆகியவற்றினால் நிதியிடப்பட்டு, (US $ 80 மில்லியன் ரூபா) 345 கி.மீற்றர் நீளமான வீதிகளினது புனரமைப்பையும், 47 பாலங்களின் மேம்படுத்துகையையும் உள்ளடக்கி- யுள்ளது. வீதி வலையமைப்பு மேம்படுத்துகை செயற்திட்டத்தின் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கூறு 274 கி.மீற்றர் நீளமான வீதிகளின் புனரமைப்பையும், 42 பாலங்களின் மேம்படுத்துகையையும் கொண்டுள்ளது. இக்கூறு கட்டம் 2 இல் அமுல்படுத்தப்படுகின்றது.

முதலாவது கட்டம் 08 வீதித் திட்டங்களை (பொதி) கொண்டுள்ளது. இத்திட்டங்களில், 07 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மற்றையதும் தீர்மானிக்கப்பட்ட அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதாவது, C7 – கட்டுகஸ்தோட்டை – குருநாகல், இது 92% மான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. இதனது மீதி வேலைகள், கடனின் கீழ் போதியளவு நிதி இன்மையால் இலங்கை அரசாங்க நிதி மூலமாகவே தொடரப்படும்.

**அட்டவணை-22 : ஆசிய அபிவிருத்தி வங்கியின் வீதி பின்னலமைப்பு மேம்படுத்துகை செயற்திட்டங்கள்**

| ஒப்பந்த இல: | வீதியின் பெயர் | நீளம் கி.மீ. | ஒப்பந்த விலை (ரூ.மில்.) | ஆரம்ப திகதி | பூர்த்தி திகதி | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|
| C - 1 | அம்பத்தளை – கடுவலை வீதி | 4.00 | 522.19 | 01.02.2002 | 31.12.2004 | 100% |
| | மாலபே – கொடகம வீதி | 11.30 | | 01.02.2002 | 31.12.2004 | |
| C - 2 | பஸ்யால – மீரிகம வீதி | 10.10 | 430.43 | 01.02.2002 | 30.11.2005 | 100% |
| | நித்தம்புவ – ஊறபொல வீதி | 8.00 | | 01.02.2002 | 09.08.2005 | |
| C – 3A | பாணந்துறை - இங்கிரிய வீதி 0.00 – 21.00 கி.மீற்றர் வரை | 21.00 | 1,415.00 | 01.05.2005 | 30.06.08 | 100% |
| C - 3 | பாணந்துறை - இங்கிரிய வீதி 21.00 – 33.80 கி.மீற்றர் வரை | 12.80 | 440.90 | 31.03.2003 | 31.03.08 | 100% |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| C - 4 | நாகொடை – அகலவத்தை வீதி | 22.90 | 991.00 | 28.10.2004 | 18.08.2007 | 100% |
| C - 5 | அம்பலாங்கொடை – அல்பிட்டிய வீதி | 16.20 | 691.00 | 16.03.2004 | 18.09.2007 | 100% |
| C - 7 | கட்டுகஸ்தோட்டை – குருநாகல் வீதி | 38.02 | 2,040.00 | 02.10.2002 | 30.08.2008 | 100% |
| C - 9 | நாவலப்பிட்டிய – கினிகத்ஹேன வீதி | 11.71 | 625.00 | 16.03.2004 | 30.09.2007 | 100% |
| C - 10 | வீரவில கதிர்காமம் வீதி | 25.80 | 506.12 | 23.01.2002 | 16.09.2005 | 100% |
| | திக்வெல்ல – பெலியத்தை வீதி | 13.30 | | | | 100% |
| C - 11 | பெல்மடுல்ல – மாதம்பே வீதி | 13.00 | 455.91 | 11.07.2002 | 06.06.2005 | 100% |
| C - 12 | மாதம்பே – மல்வத்தை வீதி | 7.30 | 211.72 | 13.06.2002 | 28.07.2004 | 100% |
| C - 13 | மல்வத்தை – திம்போல்கெட்டிய வீதி | 23.00 | 524.30 | 04.12.2001 | 11.12.2004 | 100% |
| C – 14 | திம்போல்கெட்டியா – எம்பிலிப்பிட்டிய வீதி | 11.60 | 382.00 | 30.01.2004 | 31.01.2006 | 100% |
| C - 15 | எம்பிலிப்பிட்டிய – புதிய ஜப்பானிஸ் வீதி | 11.30 | 389.00 | 30.01.2004 | 25.09.2007 | 100% |
| C - 16 | பேலியகொட – புத்தளம் வீதி (9.0 – 16.4 கி.மீற்றர் வரை) | 7.40 | 268.00 | 05.11.2003 | 19.10.2005 | 100% |
| C - 17 | பேலிகொட – புத்தளம் வீதி (16.4 – 23.7 மற்றும் 5.1 – 7.1 கி.மீற். வரை) | 9.40 | 193.00 | 05.11.2003 | 31.03.2005 | 100% |
| C3A | கண்டி – யாழ்ப்பாணம் வீதி (257.00 – 270.00 கி.மீற். வரை) | 13.00 | 43.26 | 04.01.2003 | 31.03.2004 | 100% |
| C3B | கண்டி – யாழ்ப்பாணம் வீதி (270.00 – 282.00 கி.மீற். வரை) | 12.00 | 167.22 | 04.01.2003 | 30.04.2004 | 100% |
| C3C | கண்டி – யாழ்ப்பாணம் வீதி (282.00 – 290.00 கி.மீற். வரை) | 8.00 | 95.00 | 04.01.2003 | 22.06.2004 | 100% |
| | **மொத்தம்** | **311.13** | | | | |

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

உள்ளூர் ஒப்பந்தக்காரர்களின் நிறைவேற்றுகை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தைவிட குறைவாக இருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஏற்பாடு, கட்டுகஸ்தோட்டை – குருநாகல் வீதியின் 101/2 கிலோ மீற்றர் வீதியைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாகக் காணப்படவில்லை.

**சீர்செய்யும் நடவடிக்கைகளும் முன்மொழிவுகளும்**

கூட்டங்கள் ஒப்பந்தக்காரர்களுடன் நடைபெற்று அவர்களது வேலை, கோரப்பட்ட முன்னேற்றத்தை எய்துவதற்கு உண்ணிப்பாக கண்காணிக்கப்பட்டது.

கட்டுகஸ்தோட்டை – குருநாகல் வீதியின் 101/2 கிலோ மீற்றர் நீளமான பிரிவை பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் நிதி கோரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலபே – கொடகம மற்றும் அம்பத்தளை – கடுவெலை வீதி



பாணந்துறை - இங்கிரிய வீதி



நாகொட – அகலவத்தை வீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதம்பை – மலவத்தை வீதி



பேலியகொட – புத்தளம் வீதி



**ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிபெற்ற வெள்ளச் சேத செயற்திட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி பின்னலமைப்பு மேம்படுத்துகை செயற்திட்டத்தின் கீழான குறைநிரப்பு வகுதியான அமெரிக்க டொலரான 12.5 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளை திருத்துவதற்கு பெறப்படுகிறது. தென் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் ஆகியவற்றில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளை திருத்துவதற்காக 9 ஒப்பந்தப் பொதிகள் வழங்கப்பட்டு, அவற்றுள் எட்டு ஒப்பந்தப் பொதிகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வெள்ளச் சேத செயற்திட்டங்களின் தொகுப்பு :

| | | |
|---|---|---|
| முன்மொழியப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை | = | 9 |
| பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | = | 8 |

ஒரு ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டதுடன், மீதி வேலைகள் மாகாணப் பணிப்பாளரினால் (சப்பிரகமுவ) கையாளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 23: வெள்ள நிவாரணத்திற்கான ஆ.அ.வ. இன் செயற்திட்டங்கள்

| ஒப்பந்த இல: | வீதியின் பெயர் | அகலம் /பிரிவு கி.மீ | ஒப்பந்த விலை (ரூபா. (மி) | ஆரம்ப திகதி | முடிவுத் திகதி | முன்னேற்றம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| F - 1 | இரத்தினபுரி - வேவெல்வத்த வீதி (4 - 24 கி.மீ) | 20 | 87.49 | 14.07.2005 | 28.12.2007 | 100% | |
| F - 2 | காலி – தெனியாய – மாதம்பே (64 - 145 கி.மீ), தெனியாய – விஹாரஹேன வீதிகள் (2 -3 கி.மீ) | 82 | 143.09 | 14.07.2005 | 09.06.2007 | 100% | |
| F - 3 | தியாகொட – கம்புறுபிட்டிய – மாவரால – கொட்டபொல வீதி (21 - 65 கி.மீ) | 44 | 79.40 | 15.09.2005 | 31.12.2007 | 87% | எல்லையை குறைத்தலும் செயற்தி[illegible] பூர்த்தியாக்கலும் |
| F - 4 | திருவனாகெட்டிய – அகலவத்தை - (0-38 கி.மீ), கலவான – தீபதெனே – ரக்வான வீதி (19 - 36 கி.மீ) | 55 | 75.90 | 14.07.2005 | | 82.5% | இடைநிறுத்தப்பட்ட வேலைகள் வீ.[illegible] மாகாண பணிப்பாளரினால் பூர்த்தியாக்கப்பட்டது |
| F - 5 | இரத்தினபுரி – பலேவல – கராவிட்ட (2-17 கி.மீ), அயகம – குக்குலேகம - (5-12 கி.மீ), பாணந்துறை – நம்பெவன - இரத்தினபுரி (47- 61 கி.மீ), இடங்கொடை – அயகம வீதிகள் (2 - 7 கி.மீ) | 41 | 153.49 | 03.09.2005 | 15.06.2007 | 100% | |
| F - 6 | எல்பிட்டிய – அவித்தாவ – லெவ்வன்ந்துாவ (6 - 9 கி.மீ), தவலம – நெலவ – பட்டுவாகல (3 - 4 கி.மீ), பென்தர – ஊரகஸ்மன்ஹந்திய – எல்பிட்டிய (9 - 21 கி.மீ), வஹிலிதும – ஓப்பத்த – பிட்டபெத்தர (5 -13 கி.மீ), திரிவன்கெட்டிய – அகலவத்தை (48 - 62 கி.மீ), நாகொடை – கலேவெல்லேவ – பெல்பிட்டிய வீதி | 38 | 96.22 | 16.07.2005 | 19.02.2007 | 100% | |
| F - 7 | ஹிக்கடுவை – பத்தேமக – நில்ஹேன - (10 - 11 கி.மீ), நயாபமுல – உயன்விட்டடிய – நாகொடை (6-7 கி.மீ), காலி – தெனியாய – மாதம்பே (11 - 12 கி.மீ), கின்தொட்ட – வக்வெல - (2-3 கி.மீ), லெபதுவ – வண்டரும்பல – சன்தரவெல்ல (18 -24 கி.மீ) | 10 | 93.93 | 15.07.2005 | 04.01.2007 | 100% | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஒப்பந்த இல: | வீதியின் பெயர் | அகலம் /பிரிவு கி.மீ | ஒப்பந்த விலை (ரூபா. (மி) | ஆரம்ப திகதி | முடிவுத் திகதி | முன்னேற்றம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| F - 8 | தெனேகம – முலத்தியன - (கி.மீ 8-9), Kaburutiya - kirinda (கி.மீ 8-9), அக்குரஸ்ஸை – கம்புறுபிட்டிய (கி.மீ 10-13), மாத்தறை – அக்குரஸ்ஸ (கி.மீ 11-16), அக்குரஸ்ஸ – கெட்டன்வெயில - (கி.மீ 0-8), ஹினிதும – ஓப்பத்த – பிட்டபெத்தர (கி.மீ 25-31) வீதிகள் | 24 | 122.24 | 15.07.2005 | 10.01.2007 | 100% | |
| F - 9 | கொழும்பு – காலி - ஹம்பந்தொட்டை – வெல்லவாய வீதி (கி.மீ 209-210), தங்கல்ல – வீரகெட்டிய (கி.மீ 1-11), ஹக்மனே – மீல்ல – தலஹாகன்வடுவ (கி.மீ 5-11), மாத்தறை - ஹக்மன - (கி.மீ 10-19), நாரன்தெனிய - ஹக்மன் (கி.மீ 1-10) வீதிகள் | 35 | 101.25 | 18.07.2007 | 19.10.2007 | 100% | |
| | மொத்தம் | 349 | | | | | |

## 4.1.2 மோதல்களினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கான புனரமைப்பு செயற்திட்டம் (CAARP)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மோதல்களினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கான புனரமைப்பு செயற்திட்டத்தின் (CAARP) வீதி உட்கட்டமைப்புக் கூறின் கீழ் வடக்கு, கிழக்கில் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட இடங்கள் முழுவதையும் இணைக்கின்ற தந்திரோபாய வீதியின் புனரமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்கான கடன் உடன்படிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 2004 தை மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த செயற்திட்டம் 35 LCB ஒப்பந்தப் பொதிகளைக் கொண்டுள்ளதுடன், ஒரு கால கட்டத்தில் ஒன்று என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களில் எட்டு வீதிகள் புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. மொத்தக் கடன் தொகை 53.1 ஐ.அமெரிக்க டொலராகும். 2043 SRI, கட்டம் I நிலை 1 கடனில், 15 எண்ணிக்கையான ஒப்பந்தங்கள் 2005 ஆடியில் வழங்கப்பட்டு, 13 ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, மேலும் 07 ஒப்பந்தங்கள் கட்டம் 2 நிலை II மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டன. 2044 SRI கட்டம் II கடனின் கீழ் 13 ஒப்பந்தங்கள் முன்மொழியப்பட்டு, 06 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. 3 ஒப்பந்தங்கள் தற்போதைய நிலைமை காரணமாக இடைநிறுத்தப்பட்டு, மற்றைய 3 ஒப்பந்தங்கள் மதிப்பிடப்படுகின்றது. ஒரு கேள்விப் பத்திரம் 2009 தை 19 இல் மூடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICB ஒப்பந்தப் பொதிக்கு மாற்றீடாக பின்வரும் வீதிகள் புனரமைப்புக்காக முன்மொழியப்பட்டன.

- கண்டி – யாழ்ப்பாணம் வீதி (158-176) – (185-193.6) – 26.6 கி.மீ.
- வவுனியா – ஹொரவப்பொத்தானை வீதி (0-9.6) கி.மீ. மற்றும் (35.0- 46.2)- 20.8 கி.மீ.
- மதவாச்சி – மன்னார் - தலைமன்னார் வீதி (14.5-56.0) மற்றும் (60-73.0) – 54.5 கி.மீ.

வேலை சாத்தியப்படுமிடத்து, கிடைக்கக் கூடிய நிதிகள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்படும். பின்வரும் 13 NCB பொதிகள் மீள அட்டவணையிடப்பட்டு, முன்மொழிவுகள் வட மாகாண செயற்திட்ட மாகாண ஒருங்கிணைப்புக் குழுவினாலும் ICB பொதிகளுக்குப் பதிலாக ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் அங்கீகரிக்கப்பட்டது.

**அட்டவணை-24 : நிர்மாண நிலைகளின் கீழான செயற்திட்டம்**

| ஒப்பந்த இல: | வீதியின் பெயர் | நீளம் கி.மீ. | ஒப்பந்த தொகை (ரூ.மில்.) | எதிர்பார்க்க பட்ட பூர்த்தி திகதி | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| NRC1 | கண்டி – யாழ்ப்பாணம் வீதி (158-167) | 9 | 406.6 | 31.2.2010 | ஒப்பந்தம் வழங்கப்பட்டது |
| NRC2 | கண்டி – யாழ்ப்பாணம் வீதி (167-176) | 9 | 464.8 | 19.2.2010 | ஒப்பந்தம் வழங்கப்பட்டது |
| NRC4A | வவுனியா - ஹொறவப்பொத்தானை வீதி (0-9.6) | 9.6 | 382.7 | 19.02.2010 | |
| NRC4B | வவுனியா - ஹொறவப்பொத்தானை வீதி (35-46.2) | 11.2 | 395.2 | 19.02.2010 | |
| NRC5A | மதவாச்சி – மன்னார் - தலைமன்னார் வீதி (14.5-25) | 10.5 | 358.6 | 19.02.2010 | |
| NRC7 | யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி (18.9-21.9) | 3.0 | 458.4 | 19.02.2010 | |
| NRC6A | யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி (5-18) | 13 | 66.4 | 31.01.2010 | கேள்விகள் 15.12.08 இல் மூடப்பட்டு விலை கூறல் மதிப்பிடப்படுகின்றது |
| NRC6B | யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி (18-20) | 2 | 63.8 | | |
| NRC6C | யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி (20-20.65) | 0.65 | 65.0 | | |
| NRC19A | முருங்கன் - சிலாவத்துறை வீதி (26-15.2) | 10.8 | 441.4 | 31.03.2010 | விலை கூறல் 19.01.2009 இல் மூடப்பட்டது |
| NRC14B | பரந்தன் - பூநகரி வீதி (4-8) | 4 | 183.8 | 31.01.2010 | விலை கூறல் மதிப்- பிடப்பட்டு, ஒப்பந்தங் கள் வழங்கல் தற்போதைய நிலைமை காரணமாக தாமதமானது |
| NRC15 | பரந்தன் - பூநகரி வீதி (8-12) | 4 | 153.9 | | |
| NRC16 | பரந்தன் - பூநகரி வீதி (2-14) | 12 | 176.7 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

கேள்வி கோரப்பட்ட காலத்தில் பாதுகாப்பு நிலமைகள் காரணமாக குறைவானோர் பங்கு பற்றியதுடன், வேலை மணித்தியாலங்களில் வரையறைகளும் இடங்களில் ஏற்பட்ட மோதல் காரணமாக வேலை செய்வதில் கஷ்ட நிலைகளும் காணப்பட்டது.

**சீர்படுத்தும் நடவடிக்கைகளும் முன்மொழிவுகளும்**

சில ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டு, புதிய வேலைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.

### 4.1.3 ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை மீளக்கட்டும் செயற்திட்டம் (TAARP)

வீதிப் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணத்திற்கான ஐ.அ.டொலரான 55.2 மில்லியன் நிதியை வழங்கும் பொருட்டு, கடன் ஒப்பந்தம், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து பெறப்படும் நிதிகள் தொடர்பில் கடன் உடன்படிக்கை யூரோ 52.4 மில்லியன் பெறுமதியில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 25 : ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆ.அ.வ இனால் நிதிவழங்கப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்நிர்மாண செயற்திட்டம் (TAARP)

| ஒப்பந்த இல | வீதியின் பெயர் | அகலம் /பிரிவு கி.மீ | ஒப்பந்த விலை (ரூபா. (மி) | ஆரம்ப திகதி | முடிவுத் திகதி | முன்னேற்றம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| ICB - C3 | சியம்பலாண்டுவ – பொத்துவில் - அக்கரைபத்து வீதி (286.10-364.4கிமீ A4) | 78.40 | 3,487.61 | 26.03.2008 | 25.09.2010 | 15.7% | |
| ICB - C4 | மாத்தறை – வெல்லவாய – வீதி (160-318 கிமீ of A2 வீதி ) | 158.00 | 4,198.44 | 19.03.2007 | 18.09.2009 | 70% | |
| NCB C1 | திருகோணமலை – புல்மோடை வீதி (7.5-27.5 கிமீ ) | 20.00 | 665.01 | 10.03.2008 | 09.09.2009 | 26% | |
| NCB C2 | திருகோணமலை – புல்மோடை வீதி (27.50-47.50 கி.மீ) | 20.00 | 654.76 | 10.03.2008 | 09.10.2009 | 19% | |
| NCB C3 | திஸ்ஸ – கிரிந்த வீதி (0.00-13.00 கி.மீ ) | 13.00 | 488.88 | 26.11.2007 | 25.11.2009 | 48% | |
| NCB C5 | பொத்துவில் - பனாம வீதி (0.00-17.00 கிமீ) | 17.00 | 694.00 | 15.03.2008 | 15.03.2010 | 20% | இயக்கப்பாடும் நிர்மாண வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்து. |
| NCB C6 | போகாவெவ – புல்மோடை வீதி (12.09 -27.67 கி.மீ ) | 15.58 | 489.48 | 11.12.2007 | 10.06.2009 | 40% | |
| NCB C7 | பேராதெனிய – பதுள்ள - செங்கலடி வீதி (281.6- 283.6 கி.மீ) | 2.00 | 315.58 | 05.11.2008 | 04.11.2009 | | 20.11.2008 ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு அளிக்கப்பட்டது. ஒப்பந்தம் இயக்கப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. |
| NCB C8 | போராதெனிய – பதுளை – செங்கலடி வீதி (279.6 - 281.6 கி.மீ) | 2.00 | 96.29 | 05.11.2008 | 04.05.2010 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியாம்பலந்துவ – அக்கரைப்பற்று வீதி



ABC இடுதல்



வேலையில் ஈடுபடுவதற்கு முன்னர் ABC மேற்பரப்பை பரிசீலித்தல்

மாத்தறை – வெல்லவாய வீதி



அல்பேஸ்ட் கொங்கிறீட்டை மேற்பரப்பில் இடுதல்



ஒட்டும் கலவையை இடுதல்

திருகோணமலை – புல்மோட்டை வீதி



துப்பரவு செய்தலும் அகழ்தல் வேலைகளும்



அணையிட்டு நிரப்பும் வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றது.

திஸ்ஸ – கிரிந்த வீதி



ABC இடுதல்



ஆரம்ப வேலைகள்

போகஹேவேவா – புல்மோட்டை வீதி



அணையிட்டு நிர்மாணம்



உப அடித்தள நிர்மாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.1.4 பிரான்ஸ் நிதியிடப்பட்ட செயற்திட்டங்கள்

AFD நிதியிட்ட திருகோணமலை ஒருங்கிணைப்பு உட்கட்டமைப்பு செயற்திட்டம்

பின்வரும் வீதிகள், பாலங்களை புனரமைப்பதற்காக யூரோ 43.16 மில்லியன் நிதி கிடைக்கிறது.

வீதிகளின் விபரம்

1) திருகோணமலை – மட்டக்களப்பு வீதி (திருகோணமலையிலிருந்து திருக்கொண்டியாமடு வரை) - 99 கி.மீ.

2) அல்லை – கந்தளாய் வீதி - 41 கி.மீ.

3) கடற்கரை வீதி (A மாகாண சபை வீதி) - 33 கி.மீ.

பாலங்களின் விபரம்

1) வெருகல் பாலம் (மட்டக்களப்பு – திருகொண்டியாமடு – திருகோணமலை A015 வீதியில்

2) காயன்கேணிப் பாலம் (A015 வீதியில்)

3) மூதூர் பாலம் (A015 வீதியில்)

4) கங்கை பாலம் (செல்லும் வழி உட்பட) (A015 வீதியில்)

5) உப்பாறு பாலம் (செல்லும் வழி உட்பட) (A015 வீதியில்)

*<u>மதியுரை சேவைகள்</u>*

இலங்கை RDC யுடன் இணைந்து பிரான்ஸ் BCEOM மதியுரைஞர்கள், தங்களது மதிப்பீட்டு வேலைகளின் கட்டம் 1 பூர்த்தி செய்துள்ளனர். (கேள்வி ஆவணங்கள் தயாரிப்பு)

*<u>நிதிகள்</u>*

(1) கடன் CLK 3000 01 H யூரோ 40.26 மில்லியன்

(2) கடன் CLK 3000 02 J யூரோ 15.00 மில்லியன்

*<u>சிவில் வேலைகள்</u>*

(1) ஒப்பந்த விலை - ரூபா 9,102,591,168

(2) ஒப்பந்தகாரர் - வரையறுக்கப்பட்ட சீனா துறைமுக பொறியியல் கம்பனி

(3) (அ) ஆரம்ப திகதி – 08 ஆவணி 2008

(ஆ) எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி திகதி – 07 மாசி 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 26: ஆ.அ.வ இனால் நிதியிடப்பட்ட திருக்கோணமலை உட்கட்டமைப்பு செயற்திட்டம்

| ஒப்பந்த இல | வீதியின் / பாலத்தின் பெயர் | அகலம் /பிரிவு கி.மீ | ஒப்பந்த விலை (ரூபா. (மி) | ஆரம்ப திகதி | முடிவுத் திகதி | முன்னேற்றம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| RDA/TIIP/AFD/ ICB 01 | மட்டக்களப்பு திருகோணமலை வீதி (A15) திருகொண்டிமடுவிலிருந்து திருகோணமலை | 99 | 9,102,591,168 | 08.08.2008 | 08.01.2011 | - | 26.05.2008 வெளியிட்ட கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்திடப்பட உள்ளது. |
| | புதிய 5 பாலங்களின் நிர்மாணம் A 15, கயன்கேநரி வேறுகல ரல்குளி கங்கை உப்பறு | | | | | | |
| | எல்லை கந்தளாய் வீதி (B10 ) | 42 | | | | | |
| | மதவாச்சியிலிருந்து கணேசபுரத்திற்கு | 33 | | | | | |

**முன்னேற்றத்திற்கான தடைகள்**

2008 ஆகஸ்ட் மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒப்பந்தகாரரின் தாமதத்தினால் வேலை மெதுவாக நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1.5 ஸ்பெயின் நிதி பெற்ற செயற்திட்டங்கள் - பாலங்களின் நிர்மாணம்

பின்வரும் நான்கு பாலங்களுக்கான நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. இறக்கண்டிப் பாலம் (ஒரு வழிப் பாலத்திற்குப் பதிலாக புதிய இரண்டு வழிப் பாலம்) – திருகோணமலை மாவட்டத்தில்
2. புத்தவைகத்து பாலம் (தற்போது படகுத்துறை) – திருகோணமலை மாவட்டத்தில்)
3. யான் ஓயா பாலம் (தற்போது படகுத்துறை) – திருகோணமலை மாவட்டத்தில்
4. ஓட்டுமாவடி பாலம் (A015 வீதியில்) – மட்டக்களப்பு மாவட்டத்தில்

மேலே கூறப்பட்ட நான்கு பாலங்களின் நிர்மாணத்திற்கான செயற்திட்டம், TAARP செயற்திட்டத்தின் கீழ் ஸ்பெயின் உதவியின் மூலம் மேற்கொள்ளப்படும். ரூபா 1190 மில்லியன் தொகைக்கான முதல் மூன்று பாலங்களினதும் ரூபா 1100 மில்லியன் தொகைக்கான ஓட்டுமாவடிப் பாலம் ஆகியவற்றிற்கான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளன. நிர்மாண வேலைகள் 2010 ஐப்பசி மாதத்தில் பூர்த்தியாகு- மென எதிர்பார்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள்

குறிப்பு 01 — சொத்து, இயந்திரப் பொறிகளும் உபகரணங்களும்

| விபரம் | செலவு | | | | தேய்வு | | | | தேறிய சொத்துக்களின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீதி 01.01.2008 | வருடத்தில் ஏற்பட்ட கூட்டுதல் | விற்பனையும் சீராக்கலும் | மீதி 31.12.2008 | மீதி 01.01.2008 | வருடத்திற்கான அறவீடு | விற்பனையும் சீராக்கலும் | மீதி 31.12.2008 | 31.12.2008 | 31.12.2007 |
| காணி | 25,604,180.00 | - | 373.786.30 | 25,977,966.30 | - | - | | - | 25,977,966.30 | 25,604,180 |
| புலம்பெயர்ந்த குடும்பங்களின் மீள்குடியேற்றலுக்குரிய காணி | 28,839,000.00 | - | - | 28,839,000.00 | - | - | - | | 28,839,000.00 | 28,839,000 |
| கட்டிடங்கள் | 259,642,764.84 | - | - | 259,642,764.84 | 176,899,968.33 | - | 5,493,356.05 | 182,393,324.38 | 77,249,440.46 | 82,742,797 |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 72,863,284.58 | (3,404,921.07) | 3,835,595.05 | 73,293,958.56 | 49,296,540.67 | (3,373,333.84) | 7,132,181.07 | 53,685,387.90 | 19,608,570.66 | 22,936,744 |
| கணனிகள் | 56,576,145.20 | (592,609.50) | 8,459,425.00 | 64,442,960.70 | 40,737,082.06 | (592,591..50) | 8,463,614.35 | 48,608,104.91 | 15,834,855.79 | 15,839,063 |
| மின்சாரங்களும் மின்சார இணைப்புகளும் | 13,347,497.72 | (51,850.00) | 2,216,463.21 | 15,512,110.93 | 9,413,324.61 | (42,541.54) | 952,232.71 | 10,323,015.78 | 5,189,095.15 | 3,934,173 |
| மோட்டார் வாகனங்கள் | 398,488,853.42 | (201,500.00) | 5,477,500.00 | 403,764,853.42 | 356,670,361.21 | (201,499.00) | 12,206,698.19 | 368,675,560.40 | 35,089,293.02 | 41,818,492 |
| இயந்திரப் பொறிகளும், உபகரணங்களும் | 2,602,581,036.17 | (7,500.00) | 165,499.00 | 2,602,739,035.47 | 2,550,686,297.36 | (4,843.75) | 20,727,963.35 | 2,571,409,416.96 | 31,329,618.51 | 51,894,739 |
| வரைபினதும் நில அளவையினதும் உபகரணங்கள் | 18,628,858.67 | (34,312.00) | - | 18,594,546.67 | 16,458,061.98 | (34,304.00) | 855,818.39 | 17,279,576.37 | 1,314,970.30 | 2,170,797 |
| கருவிகளும் உபகரணங்களும் | 28,366,360.05 | - | - | 28,366,360.05 | 27,989,799.34 | - | 368,829.06 | 28,358,628.40 | 7,731.65 | 376,561 |
| தொடர்புசாதன முதலீடுகள் | 9,454,232.84 | (45,750.00) | 952,358.92 | 10,360,841.76 | 7,232,272.29 | (45,402.13) | 709,506.45 | 7,896,376.61 | 2,464,465.15 | 2,221,961 |
| உசாத்துணை நூல்கள் | 2,395,852.79 | - | 1,720.00 | 2,397,572.79 | 2,386,394.28 | - | 9,551.18 | 2,395,945.46 | 1,627.33 | 9,458 |
| பெயிலி பாலங்களுக்கான உபகரணங்கள் | 214,260,260.27 | - | 8,481,606.77 | 222,741,867.04 | 180,514,939.05 | - | 6,420,298.18 | 186,935,237.23 | 35,806,629.81 | 33,745,321 |
| பால உபகரணங்கள் | 172,813,357.13 | - | - | 172,813,357.13 | 172,810,821.76 | - | 2,531.37 | 172,813,353.13 | 4.00 | 2,535 |
| துவிச்சக்கர வண்டிகள் | 160,935.00 | (12,815.00) | 67,000.00 | 215,120.00 | 153,582.92 | (12,812.00) | 6,956.00 | 147,726.92 | 67,393.08 | 7,352 |
| மோட்டார் வண்டிகள் | 6,476,350.00 | - | - | 6,476,350.00 | 6,382,300.00 | - | 44,000.00 | 6,426,300.00 | 50,050.00 | 94,050 |
| ஆராச்சி, அபிவிருத்தி உபகரணங்கள் | 85,406,369.06 | - | - | 85,406,369.06 | 84,794,133.85 | - | 611,687.21 | 85,405,821.06 | 548.00 | 612,235 |
| பயணப் படகுகள் | 19,188,000.00 | - | - | 19,188,000.00 | 14,692,498.00 | - | | 14,692,498.00 | 4,495,502.00 | 6,891,502 |
| பயிற்சி உபகரணங்கள் | 6,676,479.12 | - | - | 6,676,479.12 | 6,676,455.11 | - | - | 6,676,455.11 | 24.01 | 24 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 9,510,140.78 | - | - | 9,510,140.78 | 9,510,140.78 | - | - | 9,510,140.78 | - | - |
| அக்கிரோப் பொருட்கள் | 64,236,000.00 | - | - | 64,236,000.00 | 64,236,000.00 | - | - | 64,236,000.00 | - | - |
| மொத்தம் | 4,095,515,957.94 | (4,351,257.57) | 30,030,954.25 | 4,121,195,654.62 | 3,778,170,973.60 | (4,307,327.76) | 66,401,223.56 | 3,840,264,869.40 | 280,930,785.22 | 317,344,984 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்
# அறிக்கை

# 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No } එන්ඩී/ජ/ආර්ඩීඒ/එෆ්ඒ/08
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2010 පෙබරවාරි 16 දින

සභාපති

මාර්ග සංවර්ධන අධිකාරිය.

<u>මාර්ග සංවර්ධන අධිකාරියේ 2008 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරණ මුදල් පනතේ 14(2) ( සි ) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව</u>

සමාංක හා 2009 ඔක්තෝබර් 28 දිනැති මාගේ ලිපියට යොමු වේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ ඉංග්‍රීසි අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එස්.ස්වර්ණජෝති
විගණකාධිපති.

පිටපත් :- 01. ලේකම් , මහාමාර්ග හා මාර්ග සංවර්ධන අමාත්‍යාංශය
02. ලේකම් , මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம் கொழும்பு 07 இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி / Telephone } 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ-மெயில் / E-mail } oaggov@sltnet.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 ஒக்டோபர் 28

என்டி/ஜீ/ஆர்டிஏ/எப்ஏ/08

தலைவர்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குகள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கண்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 16(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரசச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை 2009 ஜுன் ஆந்திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைச் கொண்டிராத நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைக் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.3. **கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்ராயத்திற்கான அடிப்படையும்**

கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம். கருத்துரைகள் கண்டுபடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியனியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது. நிதிசார் கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

நிதிசார் கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிசார் கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய எனது அபிப்பிராயத்துக்கான போதிளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரசட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்களுக்கும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 டிசெம்பர் 31 உள்ளவாறான நிலவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) வேலைப்பிரிவின் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 896,015 மில்லியன் தொகை செலுத்த வேண்டி மீதியொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1562.42 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 666.40 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 2,006,197 மற்றும் ரூபா 33,392 தொகை முறையே பொரளை மற்றும் கண்டியில் அமைந்துள்ள நிலத்திற்குக் கீழான பாதசாரிகள் கடவையிலுள்ள கடைகளிலிருந்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக கிடைத்த வாடகை வருமானமாக அவதானிக்கப்பட்டுது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கிடைக்க வேண்டிய வாடகை வருமானத் தொகை காசு அடிப்படையில் கணக்கிடப்பட்டிருந்தமையால் பொரளையில் அமைந்துள்ள நிலத்திற்குக் கீழான பாதசாரிகள் கடவையிலுள்ள கடைகளிலிருந்து மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 582,372 தொகையும் கண்டியில் அமைந்துள்ள நிலத்திற்குக் கீழான பாதசாரிகள் கடவையிலுள்ள கடைகளிலிருந்து மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 793,292 தொகையான மீதியும் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.2.2 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 ஆம் ஆண்டு முதல் 1989 வரையிலும் 2001 முதல் 2007 இடைப்பட்ட காலப்பகுதியில் வீதி பராமரிப்பு மற்றும் வீதி நிர்மாணம் என்பவற்றிற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய முறையே ரூபா 4.206 மில்லியன் மற்றும் ரூபா 576,499 தொகைகளை அதிகாரசபைக்கு அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் கீழ் வெளிநாட்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட உழைப்பு மற்றும் சேவைகளுக்காக ரூபா 43.08 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் அறிவிட வேண்டியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபைக்கு கடன்பட்டோரிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா 85.2 மில்லியன் அளவு 5 ஆண்டுகளுக்கு மேல். 04 ஆண்டுகளுக்கு மேல் 05 இற்கு குறைவான, 03 ஆண்டுகளுக்கு மேல் 04 இற்கு கீழ், 02 ஆண்டுகளுக்கு மேல் 03 இற்கு குறைவான மற்றும் 01 ஆண்டுகளுக்கு மேல் 02 இற்கு குறைவானது என முறையே ரூபா 4.6 மில்லியன் ரூபா 8.902 ரூபா 18.89 மில்லியன் ரூபா 42.9 மில்லியன் ரூபா 18.725 மில்லியன் என அறிவிடவதற்காகக் காணப்பட்டதுடன் அத்தகைய மீதிகளும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்காக அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டிருந்தவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 2,213.012 தொகை அச்செயற்பாட்டிற்காக பயன்படுததாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(உ) 1987 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் முன் கொண்டுவரப்பட்ட வரும் ரூபா 82,580 தொகை வீதிப் பராமரிப்பு நடவடிக்கை தொடர்பாக ஒப்பந்தகாரர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய தொகையன்று ஆண்டில் முன்கொண்டு செல்லப்படவில்லை.

(ஊ) ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக 04 கணக்குகளுக்குரிய ரூபா 3,253,871 கூட்டுத்தொகையான கடன் கொடுத்தோர் மீதி தீர்க்கப்படாமல் முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.3. கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் கடன்பட்டோர்களிடம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பவற்றினால் அதிகாரசபை என்பவற்றிலிருந்த அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 375,683 மற்றும் ரூபா 6,622,531 தொகை தொடர்பாக மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம், பயன்பாட்டுப் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள் முதலியன கிடைக்காமையால் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.2.4. நிகழத்தக்க பொறுப்புக்கள்

அதிகாரசபை ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினரால் 19 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், அதற்காக கணக்கிடப்பட்டிருந்த ரூபா 95,429,406 தொகையான பொறுப்புக்கள் முடிவுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபைக்கு நிரந்தரமாக செலவிடுவதற்கு ஏற்படக் கூடிய பொறுப்புக்கள் நிச்சயிக்கப்பட்டும் கணக்குளில் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ). 2003 யூன் 02 ஆம் திகதி

பீராடி/12 ஆம் இலக்க பொது

முயற்சிகள் சுற்று நிரூபம்

| | |
|---|---|
| (i). 4,2,1 ஆம் பந்தி | நோக்கம் மற்றும் இலக்குகளின் நம்பிக்கை வைப்பதற்காக வருடாந்த திட்டம் மற்றும் பாதீட்டை மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் போன்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் இயக்குனர் சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (II). 4.2.2 ஆம் பந்தி | அதிகாரசபையின் அமைப்பு வரைபடம், பாதீடு மற்றும் செயலாற்றுகை என்பவற்றை குறித்த காலத்தில் மீளாய்வு செய்தல் இயக்குனர் சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அச்செயற்பாடுகள் செய்யப்பட்டமைக்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (III). 5.1.2. ம் பந்தி | 2005-2010,2006-2011 மற்றும் 2007-2012 என்ற வகையில் நடப்பாண்டு உட்பட அதிகாரசபையினால் 03 கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இத்திட்டங்களுக்குக்குள் உள்ளடக்கப்பட வேண்டிய சில முக்கியமான தகவல்கள் காண்பிக்கப் படாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| IV. 8.3.9 ஆம் பிரிவு | பொது வியாபார முயற்சிகளால் வரிசை அமைச்சினதோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்காகவோ செலவுகளை மேற் கொள்ளல், அல்லது அவற்றின் சொத்துக்களை பயன்படுத்தவோ கூடாத போதிலும், அதற்கு முரணாக அதிகாரசபையால் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சிற்காக எரிபொருள், வாகன வாடகை, சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், சம்பளக் கொடுப்பனவு,விளம்பரச் செலவு, வாகனத் திருத்தம் என்பவற்றிற்காக ரூபா 91,096 மில்லியன் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக் கப்பட்டது. |
| V. 9.2 (இ) | அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி என்பன திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| VI. 9.7 ஆம் பந்தி | 2005ஆம் ஆண்டு முதல் திறைசேரி செயலாளரின் அங்கிகாரமின்றி அதிகாரசபையின் படிகள் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலாக வெவ்வேறு படிகள் அங்கீகாரமின்றி முன்னைய பல ஆண்டுகாலமாக செலுத்தப்பட்டு வந்தது. 2008 ஆம் ஆண்டில் அவ்வாறு அங்கிகாரமின்றி செலுத்தப்பட்ட படிகளின் கூட்டுத் தொகை ரூபா 284.7 மில்லியனாகும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (ஆ). 1971 இன்38ஆம்இலக்கநிதி அதிகாரச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் (அ) பந்தி | அதிகாரசபையினால் வெளிநிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 02 "மகநெகும" கம்பனிகளில் முதலீட செய்துள்ள ரூபா 2 மில்லியன் தொடர்பாக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ). இலங்கைக் குடியரசின்நிதிப் பிரமான இலக்கம் 395(அ) | வங்கிக்கணக்குகளுக்குரிய மாதாந்த வங்கி கணக்கிணக்கத்தை மாதம் முடிவடைந்ததன் பின்னர் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்க வேண்டிய போதிலும், மேல்மாகாண பணிப்பாளர் காரியாலயம் மீளாய்வாண்டிற்குரிய வங்கி கணக்கிணக்கத்தை தயாரித்திருக்கவில்லை. |

## 2.2.6 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ). அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத 15 ஒருங்கிணைப்பாளர்கள் மீளாய்வாண்டில் ஆட்சேர்க்கபட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் ஆட்சேர்க்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட மொத்த எண்ணிக்கை 66 ஆக இருந்தது. வருடாந்தச் சம்பளங்களாக அவர்களுக்கு ரூபா 12,615 மில்லியனும் மில்லியனும் எரிபொருள், பிரயாணச் செலவினம் மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 7.25 மில்லியனும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக பங்களிப்புச் செய்ததற்கு அவர்களால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ). அதிகார சபையின் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தேவையான முன்கூட்டி தயாரிக்கப்பட்ட கலவை 2006 ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் அதிகாரசபையின் வளங்களைப் பயன்படுத்தி பிரதேச ரீதியாக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2006 மே முதல் அதிகாரசபைக்கு தேவையான முன்கலவையை வரையறுக்கப்பட்ட இமல்ஷன் "மகநெகும" கம்பனிகளிடமிருந்து மட்டும் கொள்வனவு செய்வதற்கு அதிகார சபையால் எடுக்கப்பட்ட திர்மானத்தின் காரணமாக கொழும்பில் அமைந்துள்ள அக்கம்பனிகளின் பிரிவுகளிலிருந்து மாத்திரம் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக மேலதிக போக்குவரத்து செலவினமொன்று மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

2006/2007 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின்படி ரூபா 130 மில்லியன் அளவிலான தொகை போக்குவரத்துச் செலவாக செலவிடப்பட்டிருந்தது. இவ்வழங்கள் அதிகாரசபைக்கு தேவையான முறையில் கம்பனிகளிலிருந்த வழங்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையால் நாளாந்தம் செய்யவேண்டிய பராமரிப்புகளுக்கு தடையாக இருப்பதாக அச்செயற்பாடுகளுடன் தொடர்பான பெரிறியியலாளர்களின் கடித மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் 2008ஆம் ஆண்டில் சிறிய அளவில் மேற்கொள்வதற்'கு அதிகாரசபை தீர்மானித்திருந்தது.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நிதிசார் மீளாய்வு

#### (அ). நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2082.162 மில்லியனான தேறிய பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 212,737 மில்லியனான நேரொத்த தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 1869.425 மில்லியளான பாதகமான அதிகரிப்பொன்றைக் காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ). **திரண்ட பற்றாக்குறை**

2004 ஆம் ஆண்டின் வருமானக் கூறின் திரண்ட பற்றாக்குறையாக 2197 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் அது ரூபா 7027 பற்றாக்குறையாக அதிகரித்துக் காணப்பட்டது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 225% அதிகரிப்பாகக் காணப்பட்டது.

(இ) **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்**

2004 இன் இறுதியின் மூலதனம் மற்றும் ஒதுக்கங்களாக ரூபா 2895 ஆன சாதகமான மீதி 2007 ஆண்டின் இறுதியில் ரூபா 6.2 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2210 மில்லியனான பாதாளீகமான நிலை வரை குறைவடைந்திருந்தது.

(ஈ) **அதிகார சபையால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முதலீடுகள்**

அதிகாரசபை 04 தனியார் கம்பனிகளில் நிதிகளை முதலீடு செய்திருந்ததுடன் அது தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**I. வரையறுக்கப்பட்ட வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்தல் (தனியார்) கம்பனி**

கணக்காய்விற்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் 1987 ஆம் ஆண்டில் இக்கம்பனி அதிகாரசபையின் துணைக் கம்பனியாக தாபிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபைக்காக அதிகாரசபையால் பிரதிநிதித்துவமொன்று இடம் பெற்றிருந்ததுடன், அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான முடிவுக் கணக்குகளின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட மூலதனத்தில் ஒரு பகுதி தவிர ஏனைய பகுதிகளின் ரூபா 114.7 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 327 மில்லியன் கடன் தொகையும் வழங்கப்பட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டின் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியை ஒடுக்கல் செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை 3 மாதத்திற்குள் பூர்தி செய்யுமாறு திறைசேரியால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஒடுக்கல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் ஒடுக்கல் நடவடிக்கைகளுக்காக ரூபா 6,173,194 செலவிடப்பட்டிருந்துது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இக்கம்பனிக்கு அதிகாரசபையிலிருந்து கிடைக்க வேண்டிய 14 உருப்படிகள் மற்றும் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய 27 உருப்படிகள் ஒன்றுக்கொன்று சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய ரூபா 85.986 மில்லியன் நடப்பாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மீதியாக அதிகாரசபையின் நடப்பாண்டி இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. இச்சீராக்கல் தொடர்பான விபரங்கள் கணக்காய்வாவிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

- கம்பனி அதிகாரசபைக்கு ரூபா 99,731 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை ஒப்படைத்திருந்ததுடன், ஒடுக்கல் கணக்கில் பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 27,290 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. வித்தியாசத்திற்கான காரணம் அவதானிக்கப்படவில்லை.

- வாடகை அடிப்படையில் ரூபா 259 மில்லியான அதிகாரசபையின் இயந்திர உபகரணங்கள் உதிரிப் பாகங்கள் உட்பட கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் மீள ஒப்படைக்கப்பட்ட அத்தகைய இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 100 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 159 மில்லியன் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மீள ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- இக்கம்பனிக்குரிய ரூபா 15.056 தொகையான கட்டங்கள் பொறுப்பளிக்கப்பட்டதாக ஆவணங்களில் குறிப்பிட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் கணக்குகளுக்கு அது கொண்டு வரப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- மீளாய்வாண்டின் இறுதியில் முடிவுக் கணக்குகளின் பிரகாரம் அதிகாரசபையின் இயந்திர உபகரணங்கள் இக்கம்பனிக்கு வாடகைக்கு வழங்கியமைக்காக கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 620,817 என அவதானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இக்கம்பனிக்காக ரூபா 66 மில்லியனான வரிப்பொறுப்பு காணப்பட்டதுடன் அதை கொடுத்து தீர்ப்பதற்காக திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு கோரப்பட்டிருந்தது.

(ii) **வரையறுக்கப்பட்ட "மகநெகும" இமல்ஷன் உற்பத்தி (தனியார்) கம்பனி**

கணக்காய்விற்கு கிடைக்க கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், கம்பனியின் வழங்கப்பட்ட மூலதனம் ரூபா 200 ஆக இருந்ததுடன் அதிகாரசபை ரூபா 100 ஆன பங்கு மூலதனத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபை மீளாய்வாண்டின் கணக்குகளின் பிரகாரம் ரூபா ஒரு மில்லியனை மீளாய்வாண்டின் கணக்குகளின் பிரகாரம் ரூபா ஒரு மில்லியனை கம்பனியின் பங்கு மூலதனத்திற்கு முதலீடு செய்துள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்துது. இக் கம்பனி மூலம் அதிகார சபையின் வீதி அபிவிருத்திக்குத் தேவையான இமல்சன் வழங்கல் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(iii) **வரையறுக்கப்பட்ட "மகநெகும" வீதி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரணங்கள் (தனியார்) கம்பனி**

கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபா 200 ஆக இருந்ததடன், அதிகாரசபை ரூபா 100 ஐ அப் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்திருந்தது. இக்கம்பனிக்கு அதிகாரசபை வசமிருந்த இயந்திரங்கள் உபகரணங்கள் தற்போது ஒடுக்கலுக்குள்ளாகியிருக்கும் வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி செய்தல் (தனியார்) கம்பனியிடமுள்ள சொத்துக்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவ்வாறு வழங்கப்பட்ட இயந்திர உபகரணங்களுக்காக 2005 முதல் 2008 ஆம் ஆண்டு வரை பட்டியலிடப்பட்ட வாடகைக் கட்டணம் ரூபா 841,37 ஆக இருந்ததுடன், அவ்வியந்திர உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுக்காமல் இருந்ததற்காக ரூபா 303 மில்லியன் அக்கம்பனியால் கழிக்கப்பட்டிருந்தது. இச்சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்காக எவ்வித உடன்படிக்கையும் அதிகார சபைக்கும் கம்பனிக்கும் இடையே இருப்பதற்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv). **வரையறுக்கப்பட்ட "மகநெகும" ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ (தனியார்) நிறுவனம்**

கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், கம்பனியால் விநியோகித்த பங்கு மூலதனம் ரூபா 400 ஆக இருந்தததுடன் ரூபா 100 ஆன பங்கு மூலதனத்திற்கு அதிகார சபையால் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா ஒரு மில்லியன் தொகை அக்கம்பனியின் உரிமை மூலதனத்தில் முதலீட செய்யப்பட்டிருந்தமை ஆண்டின் இறுதிக் கணக்குகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

மேற்கூறப்பட்ட "மகநெகும" கம்பனி அதிகாரசபையால் ஸ்தாபிக்கப்பட்ட கம்பனியாக இருந்ததுடன மேலும் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

❖ இக்கம்பனியை ஆரம்பிப்பதற்காக அதிகாரசபைக்கு கிடைத்த அதிகாரம் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

❖ அதிகாரசபை முதலீடு செய்துள்ள நிதியத்திற்காக கிடைத்த பங்குச் சான்றிதழ் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

❖ பங்குதாரராக அதிகாரசபை இக்கம்பனியில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள் வெளிப்படத்தப்படவில்லை.

❖ தற்போது ஒடுக்கலில் காணப்படுகின்ற வீதி நிர்மாணிப்புகள் மற்றும் அபிவிருத்தி செய்தல் (தனியார்) கம்பனிக்கு உரித்தான பல்வேறு சொத்துக்கள் இம் "மகநெகும" கம்பனிகளின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிச்சயிக்கப்பட்ட தகவல்களும் உடன்படிக்கைகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

❖ இக்கம்பனியை ஆரம்பித்தல் தொடர்பான எவ்வித ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் தேசிய பெருந்தெருக்கள் இணைப்பை மேம்படுத்துவதும் பெருந்தெருக்கள் பொறியியலாளர் துறையை வினைத்திறனூடான நிறுவனமாக, அதிகாரசபையை உருவாக்குவது தூரநோக்கு விதித்துறையின் முன்னுரிமை வாய்ந்த தேசிய நிறுவனமாக தேசிய சமூக பொருளாதார அபிவிருத்திற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்தில் பாதுகாப்பாகவும் இலகுவாகவும் சுற்றாடலுக்கு இசைவான வரையில் மக்கள் மற்றும் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக போதுமானதும் செயற்திறனானதுமான தேசிய வீதி வலையமைப்பு வழங்குவதை பிரதான பணியை நிறைவேற்றுவதற்கு 4429 பாலங்களுடன் கூடிய 11,902 கி.மீற்றர் ஆன தேசிய பெறுந்தெருக்கள் வலையமைப்பை புனர்நிர்மாணம் செய்தலும் அபிவிருத்தி செய்தலும் அதிகாரசபையின் பிரதான நோக்கமாகும்.

மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஒன்பது மாகாணங்களின் வீதிகளை முன்னேற்றுதல், அகலமாக்குதல் மற்றும் வீதிகள் நிர்மாணம் மற்றும் ஏனைய விசேட செயற்திட்டங்களுக்காக ரூபா 7.834 மில்லியன் மீளாய்வாண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 9,915 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயலாற்றல் தொடர்பாக அதிகாரசபையால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், அதிகாரசபையின் விடய எல்லைக்குட்படாத சில செயற்பாடுக்ள மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தேவையான திரவத்தார் மற்றும் நிதியம் உரிய காலவேளைகளில் கிடைக்காமையால் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்கு ஓரளவு பாதிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது

#### 4.1.1. அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளின் செயலாற்றல்

அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டிருந்த வெவ்வேறு பகுதிகளில் சிலவற்றின் நடவடிக்கைகளை பரிசோதித்து செயலாற்றல் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டதுடன் அது தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**(அ) தொழிநுட்ப பிரிவு**

இப்பிரிவினால் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வெவ்வேறு காலப்பகுதியில் 35 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாகனங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையின் வசமுள்ள சில பழுதடைந்த வாகனங்கள் திருத்தல் நடவடிக்கைகளுக்காக அதிக காலம் எடுக்கப்பட்டிருக்காததாக அவதானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) சட்டப்பிரிவு

இப்பிரிவினால் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயலாற்றுகை மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

**(இ) பெருந்தெருக்கள் நிர்மாணப்பிரிவு**

வருடாந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சில் செயற்திட்டங்கள் பணம் செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த ஆரம்ப நிர்மாணத்திட்டங்கள் பின்னைய சந்தர்ப்பங்களில் இப் பிரிவினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச்செயற்பாடுகளுக்காக செயற்திட்டங்களிலிருந்து செலவிடப்பட்ட தொகை பயனற்றதாக இருந்தமை தெளிவாகியது.

**4.1.2. மாகாணசபைகள் மற்றும் பிரதேச சபை பொறியியலாளர்கள் காரியாலயங்களின் செயலாற்றுகை**

தென்மாகாணம் மற்றும் மேல் மாகாண பணிப்பாளர் காரியாலயங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் செயல்முன்னேற்ற அறிக்கையின்பிரகாரம் திட்டமிடப்பட்ட முறையில் சில செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் மதிப்பிடப்பட்ட அளவினைப் பார்க்கக் கூடுதலாக சில நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தன. சில நடவடிக்கைகளுக்கு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் கூட செலவிடப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் திட்டமிடப்பட்ட தொடர் செயற்பாடுகளுக்காக ரூபா 58.863 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,848 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. மேல் மாகாணத்தின் 08 செயற்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 241,116 மில்லியன் ஆகவிருந்தும் ரூபா 591.452 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. தட்டத்ததை முன்னேற்றுவதற்காக இரண்டு மாகாணங்களுக்காக ரூபா 11.566 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 0.204 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் செயலாற்றுகை இலக்கிடப்பட்ட வேலைகளுடன் ஒப்பிடப்பட்டு நோக்கத்தை எய்தப்படாமைக்கான காரணத்தை அவற்றுக்கு ஆராய்ந்தறிந்து மாற்று வழிகள் எடுக்கப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) காரியாலயங்களிலும் வெளிக்களத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலை நடவடிக்கைகளை தெளிவாக இனங்கண்டு பொருத்தமான வேலைப்பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு ஏனைய செயற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட சந்தர்ப்பங்கள கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(ஈ) வங்கிஇணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல், தீர்வையாக காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் பிடித்து வைக்கப்பட்ட தொகைகளை மீளச் செலுத்துதல் பெற்றுக்கொண்ட முற்பணத்தை தீர்த்தல். களஞ்சியங்களில் இருக்கும் செயற்பாடற்ற பழுதடைந்த பொருட்களை கை தவிர்ப்புச்செய்தல் களஞ்சியக் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுவது தொடர்பான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை

### 4.1.3. நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம்

நீர்கொழும்பு, அவிஸ்ஸாவெல்ல, கொழும்பு நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயங்களின் நடவடிக்கை தொடர்பான கணக்காய்வு தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சில நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட நாளது வரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டிய செயற்பாடுகளை மேற்கொள்ளல். சமிக்கை விளக்குகளைப் பொருத்துதல். நீர்ப் போக்குவரத்து செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் குறைந்த முன்னேற்றம் மீளாய்வாண்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. எடுத்துக்காட்டாக நீர்க்கொழும்பு நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்தின் இச் செயற்பாடுகள் 50% இற்கு குறைவாக அறிக்கையிடப்பட்டிருந்துது.

(ஆ) அத்துமீறிய நிர்மாணம் மற்றும் அத்துமீறிய அறிவித்தல் பதாகைகளைக் காட்சிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக முறையான செயற்பாடொன்றை மேற்கொண்டு அவற்றை அப்புறப்படத்துவதற்கு இப்பொறியியலாளர், காரியாலயம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக நீர்க்கொழும்பு மற்றும் அவிஸ்ஸாவெல நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயங்களில் மேற்படி காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) சில காரியாலயங்களில் பயன்பாட்டிற்கு எடுக்காத கமிக்கை பதாகை மற்றும் ஏனைய பொருட்கள் நீண்ட காலமாக களஞ்சியங்களில் குவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை பயன்பாட்டிற்கு எடுக்க முறையான வேலைத் திட்டமொன்று எடுக்கபபட்டிருக்கவில்லை. கொழும்பு நிறைவேற்று பொறியியலாளர் காரியாலயத்திற்குறிய ஒருகொடவத்த களஞ்சியப்பிரிவில் 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சமிக்கை பதாகைகள் கருத்திற் கொ்ளக்கூடிய அளவில் பயன்பாட்டிற்கு எடுக்காமல் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) சில நிறைவேற்று பொறியியலாளர் காரியாலய அதிகார பிரதேசத்திலுள்ள காணிகளில் கருத்திற் கொள்ளக் கூடியளவு அத்துமீறிய குடியிருப்பாளர்களால் பயன்படுத்தப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக அவிஸ்ஸாவெல நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயத்திற்குரிய கலகெதர டிபோ அமைந்துள்ள காணியில் ஒரு ஏக்கர் அளவிலான பகுதி அத்துமீறிய குடியிருப்பிற்கு வழிவகுக்கப்பட்டிருந்தது.

(உ) மேற்குறித்த பொறியியலாளர் காரியாலயத்தினூடாக நீர் இணைப்புக்களை வழங்குவதற்காக உடைக்கப்பட்ட வீதிகளை முறைப்படி உடனடியாக திருத்தியமைத்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

### 4.2 ஒப்பந்த நிர்வாகம்

அதிகாரசபையின் ஒப்பந்த வழங்குதல் மற்றும் பூர்த்தி செய்தல் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சில ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு குறித்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. எடுத்துக்காட்டாக 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 204 கி.மீ. கிட்டிய சில பாதைகளின் நிர்மாணம் மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கு 5 கம்பனிகளுக்கு ரூபா 26 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் குறிந்துரைக்கப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் ஒப்பந்த தொகையையும் தாண்டி செலவு மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தத்தின் விடயப் பரப்புக்களை சரியாக இணங்காண்பதற்கு தவறியமையால் சில ஒப்பந்தங்களின் ஒப்பந்த தொகையும் மீறி மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருந்தது. எடுத்துக்காட்டாக மித்தெனிய பனாமுர வீதியின் முன்னேற்ற ஒப்பந்தத்தினை வழங்கியதன் பின்னர் விடயப்பரப்பு மாற்றப்பட்டிருந்தது. இவ்வீதி வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தக்காரரால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட நலிவான முன்னேற்றம் இவ்வொப்பந்தத்தினை வழங்கும் போது கருத்திற் கொள்ளப்பட்டிருந்த போதிலும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதமும் நிர்மாணிப்புக்களில் பல்வேறு குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(இ) சில ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதன் பின்பு தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக மினுவாங்கொடை, மிறிஸ்வத்த-கடான பாதையின் 9/3 ஆம் இலக்க பாலம் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் காணப்பட்டதுடன் பல்வேறு குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(ஈ) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் அதற்குரிய செயற்பாடுகள் முறையான பரிசோதித்தல் மற்றும் களப்பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு சில ஒப்பந்தங்களில் காணப்பட்ட குறைபாடுகள், ஒப்பந்தக் காரரால் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு சுட்டிக்காட்டி ஒப்பந்தத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் மாற்றம் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக ஹங்வெல்ல பூகொடை ஊராபொல வீதியின் 8/3 ஆம் இலக்க பாலத்தின் மீள் நிர்மாணத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள மாற்றப்பட்டிருந்தன.

## 4.3. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் வீதி அபிவிருத்தி செயற்திட்டம்

மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த 21 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களாக இருந்ததுடன் அவற்றை அமுல்படுத்தும் நிறுவனமாக அதிகாரசபை இருந்தது. இச் செயற்திட்ட நடவடிக்கைகளை கணக்காய்வு மேற்கொண்ட போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) செயற்திட்டத்தின் செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்காக செயலாற்றல் மதிப்பீடு, மீளாய்வு மற்றும் அந்நடவடிக்கைகளின் செயற்பாடு போதியளவில் இடம் பெற்றிராமை அவதானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அபிவிருத்தி செய்யப்படும் பெருந்தெருக்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் பராமரிக்கும் பொறுப்பு அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படுவதாலும் அமுல்படுத்தப்படும் நிறுவனமாக அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவு, காணிப்பிரிவு, பெருந்தெருக்கள் நிர்மாணம் மற்றும் திட்டமிடல் பிரிவு, சட்டப்பிரிவு மற்றும் தொழிநுட்ப கணக்காய்வு போன்ற பிரிவுகளின் மேற்பார்வை இடம்பெறுவது அவதானிக்கப்படவில்லை.

(இ) கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் செயற்திட்டம் தொடர்பாக விநியோகிக்கப்படுகின்ற இறுதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள், செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற மற்றும் அமுல்படுத்தப்படும் நிறுவனங்கள் முறையே பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மீளாய்விற்கு உட்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 4.4. பயனற்ற சொத்துக்கள்

**கீழே காட்டப்பட்டுள்ள பயனற்ற சொத்துக்கள் மற்றும் செலவீனம் அவதானிக்கப்பட்டன**

(அ). 1983 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குக் கிடைத்த ரூபா 51.8 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இருப்பொன்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பெறுமதி குறிப்பிடப்படாத பொருட்களின் இருப்பொன்றும் ரூபா 630,000 பெறுதியான வீதி நிர்மாணிப்பின் போது பயன்னடுத்தப்படும். (Ged textile) 12 "காபட் ரோல்" உம் பல ஆண்டுகளாக அதிகாரசபையின் மருதானைக் களஞ்சியத்தில் வைத்திருக்கப் பட்டிருந்தன. இப்பொருட்களை மீண்டும் பாவனைக்கு எடுக்கவோ அல்லது களஞ்சியப்படுத்தலிருந்த அப்புறப்படுத்தவோ முறையான நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ). சபரகமுவ மற்றும் கதிர்காம உல்லாச விடுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் முறையே 2000ஆம் ஆண்டு மற்றும் 2004 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாண்டுகளிலேயே வேலை நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் கதிர்காம வீடுகளின் வேலை ஆரம்பிக்ப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 2.294 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இவ்வீடுகளை நிர்மாணித்து உடனடியாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5. மனிதவள முகாமைத்துவம்

(அ). அதிகாரசபையின் பொறியியலாளர் மற்றும் ஏனைய முகாமைத்துவ சேவை, எழுதுனர் மற்றும் ஒருங்கினைப்புச் சேவை சிற்றூழியர் சேவை மற்றும் தொழிளாளர் பிரிவுகளில் 8198 ஊழியர்கள் மிளாய்வாண்டில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதுடன், பதவியணி, அதிகாரசபையின் பணிப்பாளர்சபையால் மட்டும் அங்கீகரிக்கப் பட்டிருந்துது. இப்பதவியின் 9,531 ஊழியர்களும் உள்ளடக்கப்பட்டு முன்மொழியப்பட்ட பதவியணியொன்று மீளாய்வாண்டில் அங்கீகரிக்கடுவதற்காக நடவடிக்கை எடுக்கபட்டிருந்த போதிலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ). தலைமை அலுவலகம், மாகாண காரியாலயங்கள் மற்றும் ஏனைய பிரதேச காரியாலயங்களுக்கு பதவியனியை இணைக்கும் முறையொன்று இல்லாமல் அலுவலகங்களில் பதவியணிக்கான பற்றாக்குறையும் மிகைகளும் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக ஊவா மாகாண அதிகாரசபைக் காரியாலயத்தில் பதவியணயினரின் பற்றாக்குறை நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகாரசபையின் கட்டுப்பாட்டுக்குள் வராத அண்மித்த தனியார் கம்பனியொன்றின் பதவிக்காக அதிகாரசபையின் பிரதான பொறியியலாளர் ஒருவர் சம்பளத்துடன் ஓராண்டிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். இப்பொறியியலாளர் அந்த கிட்டிய கம்பனியில் இருந்து மாதாந்தம் ரூபா 118,000 தொகையை சம்பளமாக பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதிகாரசபையிலிருந்து அனைத்து படிகள் உட்பட ரூபா 69.930 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6. அதிகாரசபையின் கட்டுபாடிலான காணி மற்றும் விடுதிகள்

அதிகாரசபையின் பிரதேச பொறியியலாளர் காரியாலயங்களில் அதிகாரசபையின் பாவனைக்கு உள்ள வீடுகளுடன் கூடிய காணி மற்றும் வீதியுடன் தொடர்பான ஒதுக்கப்பட்ட காணிகள் தொடர்பான 05 மாகாணங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 208 ஏக்கர் அளவு நிலவியதுடன் இக்காணி உட்ப் வீதி அபிவிருத்திக்கான காணிகளைக் கையேற்றல் காணி கையேற்பு அதிகாரசட்டத்தின் (46 ஆம் அதிகாரம்) 44 ஆம் பிரிவின் கீழ் பிரதேச செயலாளர்களால் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட காணிப் பதிவாளர் காரியங்களில் பதிவு செய்யப்பட்ட காணிகள் அதிகள்வில் காணப்படுவதுடன் அது தொடர்பாக அதிகாரசபையின் காணிப் பிரிவிலோ அல்லது ஏனைய பிரிவிலோ அறிக்கையிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. இக்காணிகளுக்கு மேலதிகமாக 452 பேர்ச் காணி 62.207 மில்லியன் செலுத்தப்பட்டு பத்தரமுள்ள, உடுமுள்ள ஆகிய பிரதேசங்களில் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக 2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும் இற்றை வரை அதனை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டமை தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7 அதிகாரசபையின் உள்ளகக்கணக்காய்வு நடவடிக்கைகள்

(i). **உள்ளகக்கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளில் செயலாற்றல் அதிகாரசபையின் நோக்கத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டதா என பரீட்சிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யும் முறையொன்று பின்பற்றபட்டிருக்கவில்லை.

(ii). அதிகாரசபையின் பின்வரும் துறைகளுக்காக போதுமானஅளவு கணக்காய்வு மேவுகை மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை

- கொள்வனவு ஒப்பந்தம் அளிப்புக்கள் மற்றும் ஒப்பந்த நிறைவேற்றுகை
- சொத்துப் பயன்பாடு மற்றும் முகாமைத்துவம்
- முறைமைகளினதும் கட்டுப்பாட்டு முறைகளினதும் மதிப்பாய்வு

(iii). வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியங்கள் ஈடுபடுத்தப்பட்டு அதிகாரசபை மூலம் அமுல்படுத்தப்படும் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் செயலாற்றுகை தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள் போதியளவில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) **தொழிநுட்ப கணக்காய்வு**

அதிகாரசபையில் பராமரிக்கப்பட்டு வரும் தொழிநுட்ப கணக்காய்வு அலகின் செயலாற்றல் தொடர்பாக தகவல்கள் மீளாய்வு செய்வதற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.8. அதிகாரசபையின் கணனி முறைமை மற்றும் முகாமைத்தகவல் முறைமை

முறையான தகுதியான மற்றும் அர்த்தமுள்ள தகவல்களை அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளில் சேகரிப்பதற்கும் அவற்றை மேல்மட்ட முகாமைத்துவத்திற்கு முறையான முகாமைத்துவ முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப் பட்டது.

## 4.9. பாதீட்டுக் கட்டுப்பாடு

2008 ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் வேதனங்கள், மேலதிக நேர கொடுப்பனவு, விடுமுறை தினக் கொடுப்பனவு பதவியனிக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் காரியாலய தேவைபாடுகளுக்காக திருத்திய பாதீட்டு மூலம் முறையே ரூபா 932.14, 27,99, 4.65, 19.07 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதினும் மீளாய்வாண்டின் மேற்படி செலவின விடயங்களில் நிதி ஏற்பாடுகளுக்கு மேற்பட்டு 115% முதல் 200% வரையாளன விச்சீல் அதிகரித்திருந்தது. இதன் காரணமாக பாதீட்டு அறிக்கை சிறந்த நிதி மற்றும் முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்ட முறைமை மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகளில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அது தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) களஞ்சியம்
(ஆ) உத்தியோக விடுதிகள்
(இ) வங்கி நடவடிக்கை மற்றும் இணக்கக் கூற்று தயாரித்தல்
(ஈ) பயன்படுத்துவதற்குரிய காணி
(உ) ஒப்பந்தங்கள் வழங்குதல் மற்றும் பூர்த்தி செய்தல்
(ஊ) அதிகார சபையின் பௌதீக செயலாற்றல்

**ஒப்பம் :- எஸ். ஸ்வர்ணஜோதி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# நிதிக்கூற்றுக்கள்
# 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 2008 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள் | குறிப்பு | 2008 (ரூபா) | 2007 (ரூபா) |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| சொத்து, இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், நன்மதிப்புப் பங்கு முதலியன | 01 | 280,930,785.22 | 317,344,984 |
| உரிமை முதலீடுகள் | 02 | 116,890,500.63 | 116,890,501 |
| 1103 A கட்டிடத்தின் மீதான நடைபெறும் வேலைகள் | | 44,979,483.03 | 12,952,183 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 442,800,768.88 | 447,187,668 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கையிருப்பு | 03 | 329,017,588.24 | 315,051,059 |
| கடன்பட்டோர் | 04 | 296,325,567.97 | 308,346,627 |
| நடைமுறைக் கணக்கு வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும இமல்சன் புரடக்ஷன் கம்பனி | 05 | 37,013,185.46 | 57,588,671 |
| நடைமுறைக் கணக்கு வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும வீதி நிர்மாண உபகரணக் கம்பனி | 06 | 705,630,216.50 | 709,982,719 |
| நடைமுறைக் கணக்கு வரையறுக்கப்பட்ட மகநெகும உசாவுகை மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ சேவைக் கம்பனி | 07 | 68,116,234.47 | 9,558,872 |
| ஏனைய முதலீடுகள் | 08 | 236,161,212.82 | 81,412,380 |
| வைப்புக்களும் முற்பணங்களும் | 09 | 1,736,246,801.80 | 1,861,379,769 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 10 | 378,373,210.37 | 382,808,979 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 11 | 175,246,101.21 | 276,085,387 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 3,962,130,118.84 | 4,002,214,463 |
| மொத்தச் சொத்துக்கள் | | 4,404,930,887.72 | 4,449,402,131 |

CHAIRMAN GENERAL MANAGER DIRECTOR (FINANCE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 2008 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| | | குறிப்பு | 2008 (ரூபா) | 2007 (ரூபா) |
|---|---|---|---|---|
| | **உரிமைகளும் ஒதுக்கீடுகளும்** | | | |
| | **மூலதனமும் ஒதுக்கீடுகளும்** | | | |
| 31 | செலுத்தப்பட்ட முதலீடு | | 1,000,000 | 1,000,000 |
| 32 | அரசாங்கப் பங்களிப்பு | | | |
| 321 | (அ) திரட்டிய நிதியுடன் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் | | 1,215,272,791.76 | 1,215,272,792 |
| 322 | (ஆ) ஓ.ஈ.சி.எப். கடனின் கீழ் கிடைக்கப் பெற்ற சொத்துக்கள் | | 1,870,893,626.59 | 1,870,893,627 |
| 33 | நெடுஞ்சாலைகள் திணைக்களத்திலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் | | 684,594,465.53 | 684,594,466 |
| 34 | செயற்திட்டங்களிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் | | 34,873,728.19 | 34,873,728 |
| | மூலதன ஒதுக்கீடுகள் | 12 | 1,010,209,321.55 | 1,010,209,321 |
| | திரண்ட இலாபம்/ நட்டம் | | (7,026,940,587.89) | (4,810,616,326) |
| | | | (2,210,096,654.27) | 6,227,608 |
| | **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | | |
| 211 | பணிக்கொடை ஏற்பாடு | | 986,220,625.61 | 659,791,537 |
| 212 | பிற்போடப்பட்ட வருமானம் | | 112,955,834.61 | 135,145,970 |
| 213 | உரிமை மாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத் தரிடமிருந்து திரட்டிய மோட்டார் சைக்கிள் தொகை | | 1,197,797.20 | 171,020 |
| | **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| | வைப்புக்களும் பிடிப்பணமும் செலுத்த வேண்டியவை | 13 | 3,843,080,843.88 | 2,033,474,501 |
| | வரையறுக்கப்பட்ட தனியார் ஆர்.சி. மற்றும் டீ.சி. கம்பனியின் கலைப்புக்கள் | 14 | 85,986,732.47 | 92,458,927 |
| | ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 15 | 1,209,309,147.76 | 913,054,585 |
| | அட்டுறுச் செலவு | 16 | 252,840,212.16 | 383,501,148 |
| | சென்மதியாளர்களும் ஏனையோர்களும் | 17 | 123,436,348.30 | 225,576,836 |
| | மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 5,514,653,284.57 | 3,648,065,997 |
| | மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும் | | 4,404,930,887.72 | 4,449,402,131 |

CHAIRMAN GENERAL MANAGER DIRECTOR (FINANCE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 2008 டிசெம்பர் 31 திகதி முடிவடைந்த வருடத்துக்கான வருமானக் கூற்று

| க/கு குறி | கணக்கின் பெயர் | குறிப்பு | 2008 (ரூபா) | 2007 (ரூபா) |
|---|---|---|---|---|
| 41 | **செய்த வேலையின் பெறுமதி** | 18 | 8,397,092,807.90 | 9,120,519,206 |
| | நேரடி ஊழிய வேலைக்காக பெறப்பட்ட நிதிகள் | | 1,050,720,000.00 | - |
| | **கழி** | | | |
| | **வேலையின் கிரயம்** | | 9,447,812,807.90 | 9,120,519,206 |
| 6 | அபிவிருத்தி செலவினம் | 19 | 9,915,431,170.13 | 9,064,349,781 |
| 8 & 80 | உற்பத்தி செலவினம் | | 1,554,975,939.97 | -- |
| | **செயற்பாட்டு பற்றாக்குறை** | | (2,022,594,302.20) | 56,169,425 |
| 4011 | மேந்தலைகள் பொருட்டு கிடைத்த ஒதுக்கீட்டு நிதி | | 1,337,280,000.00 | 1,017,000.000 |
| 42 | மேந்தலைகள் வசூலிப்பு | 20 | 3,066,857.45 | 6,587,261 |
| | மொத்தச் செயற்பாட்டு வருமானம் | | (682,247,444.75) | 1,079,756,686 |
| | **கூட்டுக** | | | |
| | **ஏனைய செயற்பாட்டு வருமானம்** | | | |
| 4012 | மாற்றப்பட்ட பிற்போடப்பட்ட வருமானம் | | 39,681,785.35 | 31,529,328 |
| 43 | சேவைக் கட்டணம் | 21 | 45,040,755.05 | 18,614,098 |
| 44 | வட்டி | 22 | 44,279,731.54 | 32,394,526 |
| 45 | வாடகைக் கட்டணமும் வாடகையும் | 23 | 269,588,028.48 | 441,251,775 |
| 48 | ஏனையவை | 24 | 23,760,679.41 | 24,700,733 |
| | உரிமை முதலீட்டில் பங்கு இலாபம் | 25 | 203,338.67 | - |
| | மொத்த ஏனைய செயற்பாட்டு வருமானம் | | 422,554,318.50 | 548,490,460 |
| | மொத்த செயற்பாட்டு பற்றாக்குறை/மிகை | | (259,693,126.25) | 1,628,247,146 |
| | **கழி** | | | |
| 51 | நிர்வாகமும் பொதுச் செலவினமும் | 26 | 1,745,324,715.26 | 1,707,364,756 |
| 52 | ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 27 | 5,016,471.54 | 3,800,612 |
| 64 | வாடிக்கையாளர்களின் வேலைக்கான மேந்தலைகள் | 28 | 5,726,921.47 | 2,835,077 |
| | மொத்த நிர்வாகமும் ஏனைய செயற்பாட்டுச் செலவினமும் | | 1,756,068,108.27 | 1,714,000,445 |
| | தேய்மானத்திற்கு முன்பு தேறிய செயற்பாட்டுப் (பற்றாக்குறை) | | (2,015,761,234.52) | (85,753,299) |
| 53 | கழி : தேய்மானம் | | (66,401,223.56) | (126,983,303) |
| | வருமான வரி கழிக்க முன்னரான செயற்பாட்டுப் (பற்றாக்குறை) | | (2,082,162,458.08) | (212,736,602) |
| 55 | கழி : இந்த வருடத்துக்கான வரி | | - | - |
| | தேய்மானத்திற்குப் பின்னரான தேறிய செயற்பாட்டுப் பற்றாக்குறை | | (2,082,162,458.08) | (212,736,602) |
| 3522 | முற்கொணர்ந்த தேறிய நட்டம் | 29 | (4,944,778,129.81) | (4,597,879,724) |
| | முன்கொண்டு சென்ற நிலுவை | | (7,026,940,587.89) | (4,810,616,326) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## கணக்கீட்டுக் கொள்கை

(1) **ஆதனப் பொறி மற்றும் உபகரணங்கள் - பெறுமானமும் தேய்மானமும்**

(அ) ஆதனப் பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன், திரட்டிய தேய்மானத்தைக் கழித்துக் கணக்கில் காட்டப்படுகின்றன.

(ஆ) பலவித சொத்துக்களின் நீண்ட ஆயுளைக் கருத்திற் கொண்டு நேர்கோட்டு
முறையில் தேய்மானம் கீழ்க்காட்டிய வீதங்களின்படி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 5% ஆண்டுக்கு |
| தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் | 20% ஆண்டுக்கு |
| கணினிகள் | 33 $^1/_3$% ஆண்டுக்கு |
| மோட்டார் வாகனங்கள் | 20% ஆண்டுக்கு |
| பொறித் தொகுதியும், உபகரணங்களும் | 25% ஆண்டுக்கு |
| வரைபட நிலவளவை உபகரணங்கள் | 20% ஆண்டுக்கு |
| கருவிகளும் உபகரணங்களும் | 20% ஆண்டுக்கு |
| தொடர்புசாதன முதலீடுகள் | 15% ஆண்டுக்கு |
| உசாத்துணை நூல்கள் | 50% ஆண்டுக்கு |
| உருவான பாலப் பொருட்கள் | 10% ஆண்டுக்கு |
| தூவிச்சக்கர வண்டிகள் | 20% ஆண்டுக்கு |
| பால உபகரணங்கள் | 10% ஆண்டுக்கு |
| மோட்டார் வண்டிகள் | 20% ஆண்டுக்கு |
| ஆராச்சிக்கான அபிவிருத்தி உபகரணங்கள் | 20% ஆண்டுக்கு |
| மின்சார இணைப்புக்களும் பொருத்தங்களும் | 25% ஆண்டுக்கு |
| பயிற்சி உபகரணங்கள் | 20% ஆண்டுக்கு |
| பயணப் படகுகள் | 20% ஆண்டுக்கு |

(இ) (i) இலங்கைக் கணக்காளர் நியமம் (இ.க.நி.) 24 இன் பிரகாரம் அரசாங்க உதவி மூலம் கொள்வனவு செய்த சொத்துக்களுக்கும், செயற்திட்டங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்களுக்குமான கணக்குகள் காட்டப்பட்டுள்ளன.

(ii) சொத்துக் கொள்வனவுக்கெனக் கிடைத்த உதவி பிற்போட்ட வருமானமாகக் கருத்திற் கொண்டு வருடத்துள் ஒதுக்கப்பட்ட தேய்மானத்திற்கு ஏற்ப வருமானமாக வருமானக் கணக்கில் கருதப்பட்டுள்ளது.

(ஈ) நிர்மாணிக்கப்பட்ட பாலங்கள், வீதிகள் ஆகியன அபிவிருத்திச் செலவுகளாக
வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

(2) **கையிருப்புக்கள் :**

(i) கையிருப்புக்கள் அதன் விலையில் அல்லது கணிக்கப்பட்ட தேறிய பெறுமதியில்
இ.க.நி. 5 இன் பிரகாரம் எப்பெறுமதி குறைவாக உள்ளதோ அந்த மதிப்பில் காட்டப்பட்டுள்ளது.

(ii) களஞ்சியத்தில் உள்ள முடிவுப் பொருட்கள் H.S.R. அடிப்படையில் நிலையான
கிரயத்தில் மதிப்பிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) <u>வரி விதிப்பு</u> :

(அ) <u>பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (பெ.சே.வ.)</u>

i. கூட்டிய பெறுமதி வரியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதியிடப்பட்ட கட்டளையின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வண்ணம் காசு அடிப்படையில் செலுத்தப்பட்டது.

ii. பெறப்பட்ட மீண்டெழும் உதவிகள், 2005.09.13 ஆம் திகதிய திறைசேரிக் கட்டளையின் பிரகாரம் 2005 செப்டெம்பரில் இருந்து கூட்டிய பெறுமதி வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அதன் விளைவாக உள்ளீட்டு வரியானது 2005 செப்டெம்பரில் இருந்து மீண்டெழும் உதவிகளில் மேந்தலைக் கொடுப்பனவுகளில் அறவிடப்பட்டது.

iii. பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது கட்டுப்படுத்தும் கணக்கின் படி பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்குப் பதிதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஏனைய அனுமதிக்கப்படாத அல்லது உரிமை கோரப்படாத பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது செலவினமாகக் கருதப்படுகின்றது.

(ஆ) <u>ஈ.எஸ்.சி.</u>

செலுத்தப்பட்ட ஈ.எஸ்.சி. யானது கணக்கில் காட்டப்பட்டு 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்துக்கு அமைய எதிர்கால வருமான வரிப் பொறுப்புக்கு எதிராக ஆரம்பிப்பதற்கு முன்கொண்டு செல்லப்பட்டது.

(இ) <u>வருமான வரி</u> :

செலுத்தப்படக் கூடிய வருமான வரி, முழுவதும் வட்டி வருமானத்தில் செலுத்தக் கூடிய வருமான வரியைப் பிரதிபலிக்கின்றது. அது இந்த வருட காலப் பகுதியில் உழைக்கப்பட்ட வட்டி வருமானத்திலிருந்து கழிக்கப்படுகின்றது. இ.க.நி. 14 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. ஆனால் நேர வேறுபாடு காரணமாக வரி விளைவு, வருமான வளங்களிலிருந்து வரி விதிக்கப்படக் கூடிய இலாபம் காணப்படாததால் அது கணக்கிடப்படவில்லை.

(4) <u>பணிக்கொடை</u> :

ஊழியர்களுக்கான பணிக்கொடையானது சட்டத்தின் பிரகாரம் தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வழங்கப்படுகின்றது. மேலும் நிரந்தரமான ஐந்து (05) வருட கால சேவையைப் பூர்த்தி செய்தவர்களான, நேரடி கண்காணிப்பின் கீழ் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கெனவும் பணிக்கொடையானது ஒதுக்கப்படுகின்றது.

(5) <u>பீ.எம்.யூ.யூ. விடமிருந்து முகாமைத்துவக் கட்டணத்தினதும் மேந்தலைகளினதும் வசூலிப்பு</u> :

பீ.எம்.யூ.யூ. சார்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட கருத்திட்ட முகாமைத்துவக் கட்டணத்திலிருந்து மேந்தலைச் செலவின் பொருட்டு 12% அறவிடப்படுகின்றது.

(6) <u>செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியைக் கணித்தல்</u> :

அமைச்சு வாக்குகளின் மேல் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியானது 2008 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அமைச்சிடமிருந்து வேலைக்காகப் பெறப்பட்ட நிதியங்களின் அளவு வரை கணக்கிடப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் வேலைகள் தொடர்பாகச் செய்யப்பட்ட வேலையின் பெறுமதியானது 2008 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வாடிக்கையாளர்கள் சார்பாக மேற்கொள்ளப்பட்ட உண்மையான வேலைகளின் மேல் கணிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## பொதுவான குறிப்புக்கள்

(1) மூலதனம் பின்வருமாறு செலுத்தப்பட்டது.

1982 ரூபா 250,000/=

1983 ரூபா 750,000/=

(2) (i) 1987 ஆம் ஆண்டில் தனியார் வரையறுக்கப்பட்ட வீதி நிர்மாண அபிவிருத்திக் கம்பனிச் சட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழுமையாகச் சொந்தமாக்கப்பட்ட உப அலகாக இணைக்கப்பட்டுள்ளது.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ஒரு வருடத்துக்குள் சகல பொறுப்புக்களையும் தீர்க்க வேண்டியிருப்பதனால் ஆர்.சீ. & டீ.சீ. க்கு செலுத்த வேண்டிய தேறிய தொகையானது நடைமுறை, நடைமுறையல்லாச் சொத்துக்கள் பொறுப்புக்களின் வேறுபடுத்தல் இல்லாமல் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ்க் காட்டப்படுகின்றது.

(3) அதிகாரசபையின் கணக்கீட்டுச் செயற்பாடுகள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் 1990 மே 01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் 09 மாகாணப் பணிப்பாளர்களுடைய அலுவலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளது.

(4) **எதிர்பாரா நிகழ்ச்சிப் பொறுப்பு (உறுமுரிமைப் பரிப்பு)** :

(i) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராகத் தொழிலாளர்களினால் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் பிரகாரம் 2008.12.31 இல் உள்ளவாறு 95,429,406.95 ரூபா அளவுக்கு எதிர்பாரா நிகழ்ச்சிப் பொறுப்பு உள்ளது.

(5) **கட்டிட நிதியம்**

இந்த நிதியின் கணக்கானது இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படுவதற்கு தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தித் செயற்திட்டத்திற்கு (STDP) இற்கு சமர்ப்பிக்கப்பட்ட காணி ஒன்றிற்காக தென் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டத்திடமிருந்து பெறப்பட்ட பணத்தினைப் பிரதிபலிக்கின்றது. பொறியியலாளர்களின் (E.E) அலுவலகங்கள், விடுதிகளின் நிர்மாணத்திற்காக இந்தப் பணத்தைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற படியால், இந்தத் தொகையானது, கட்டிட நிதியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**(6) உரிமை முதலீடு**

(i) 2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் RC & DC யிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்ட ரூபா 15,056,700 தொகையான கட்டிடத்தின் பெறுமதி, RC & DC இல் முதலீட்டுத் தொகைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டது.

(ii) இறுதிப் பங்கீட்டு வேளையில் ஏற்படும் என RC & DC யின் முதலீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட நட்டங்களுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(iii) எல்லா ஏனைய முதலீடுகளும் அவற்றின் கிரயத்தில் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி அபிவிருத்தி அதிகாரசபை
நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள்

| | | 2008 (ரூபா) | 2007 (ரூபா) |
|---|---|---|---|
| | குறிப்பு 02 **உரிமைகளின் முதலீடு கிரயத்தில்** | | |
| 121 | வரையறுக்கப்பட்ட தனியார் ஆர்.சீ & டீ.சீ. கம்பனி | 114,690.500.63 | 114,690,501 |
| 122 | வரையறுக்கப்பட்ட வீதி அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 200,000.00 | 200,000 |
| 123 | வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும இமல்சன் உற்பத்திக் கம்பனி | 1,000,000.00 | 1,000,000 |
| 125 | வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும உசாவுகைக் கருத்திட்ட முகாமைத்துச் சேவைக் கம்பனி | 1,000,000.00 | 1,000,000 |
| | | 116,890,500.63 | 116,890,501 |
| | குறிப்பு 03 **2008 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பு** | | |
| 13100 | சொத்துக்கள் கையிருப்புக்கள் | 1,786,986.05 | 507,514 |
| 131011 | ஓ.ஈ.சீ.எப். உதிரிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு | 51,859,080.12 | 51,859,080 |
| 13102A | நேர் மூலப்பொருட்கள் | 221,098,656.34 | 206,404,956 |
| 13107,09,14 | நுகரக்கூடிய பொருட்கள் | 26,375,563.38 | 32,018,244 |
| 13108,13115 | எழுது பொருட்கள் மற்றும் அச்சடித்தலும் | 13,097,088.03 | 10,102,274 |
| 13110 | உதிரிகள் | 7,077,714.11 | 8,390,227 |
| 13112 | மூலப்பொருட்கள் கையிருப்பு – களஞ்சியத்தி லுள்ள நிர்மாணத்தின் ஆதாரப் பொருட்கள் | 666,963.71 | - |
| 13113 | வெறுமையான பொருட்கள் | 2,504,561.98 | 3,344,660 |
| 13116,13121 | சீருடைப் பொருட்கள் முதலியன | 1,007,216.95 | 1,003,365 |
| 13117 | ரயர் | 878,887.36 | 1,251,627 |
| 13118 | பட்டோலைக் கையிருப்பு | 48,410.78 | 22,849.06 |
| 13122 | ஆர்.சீ. & டீ.சீ. யிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கையிருப்பு | 146,263.00 | 146,263 |
| 13123 | | 2,470,196.43 | -- |
| | | 329,017,588.24 | 315,051,059 |
| | குறிப்பு 04 **கடன்பட்டோர்** | | |
| 13303-13303A | கூலிச் செலவுக்காக கடன்பட்டோர் | 2,732,270.81 | 5,360,642 |
| 13305 | ஆர்.எம்.சீ. இருப்புக்காகக் கடன்பட்டோர் | 4,206,443.49 | 4,596,677 |
| 13307-B01&C01 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு பீ.எம்.யூ.யூ. ஏ.டீ.பி. பகுதி | 10,495,008.35 | 8,078,761 |
| 13307-B02&C02 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு பீ.எம்.யூ.யூ. எம்.எவ்.ஏ.பீ. பகுதி | 6,083,911.24 | 6,496,154 |
| 13307-B03&C03 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு பீ.எம்.யூ.யூ. ஜே.ஏ.பி. பகுதி | 3,202,397.23 | 3,774,643 |
| 13307-B04&C04 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு பீ.எம்.யூ.யூ. எஸ்.ரீ.டீ.பீ. பகுதி | 20,487.05 | 4,945,086 |
| 13307-B05&C05 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு வீதித்துறை அபிவிருத்தி செற்திட்டம் | 85,720.08 | 166,629 |
| 13307-B07&C07 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு ஓ.சீ.ஏச். பகுதி | 8,451,017.28 | 4,796,529 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>வீதி அபிவிருத்தி அதிகாரசபை</u>
<u>நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள்</u>

| | | 2008 (ரூபா) | 2007 (ரூபா) |
|---|---|---|---|
| 13307-B08&C08 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு சீ.கே.எச். பகுதி | - | 971,093 |
| 13307-B09&C09 | நடைமுறைக் க/கு உலக வங்கி | 6,599,742.61 | 810,188 |
| 13307-B10&C10 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு சீ.கே.ஈ. | 3,327,525.73 | 2,038,353 |
| 13307-B11&C11 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு ஆர்.பீ.பீ. வசதி | - | 79,259 |
| 13307-B12&C12 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக் க/கு என்.எச்.பி. திட்டம் | 1,928,252.22 | 1,537,758 |
| 13307-B12&C13 | மேந்தலைக் கட்டுப்பாட்டுக்க/கு உருக்கு பாலப் பகுதி | 1,174,783.83 | - |
| 133082 | மாகாணப் பணிப்பாளர்களிடமிருந்து பெறக் கூடிய தொகை | 2,546,942.40 | 117,674 |
| 133091 | வேறு கடன்பட்டோர் சீ.பி.சீ. | 48,089.92 | 16,261,644 |
| 133092 | நானாவித கடன்பட்டோர் | 4,034.00 | - |
| 133093 | காணி மீள் அமர்வுக்காகக் கடன்பட்டோர் | 9,489,705.40 | 9,923,286 |
| 13310 | திறைசேரி உண்டியலிலிருந்து பெறக்கூடிய வட்டி | 301,459.47 | 427,335 |
| 13312 | காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - பெறக்கூடிய உரிமைகள் | 3,942,515.28 | 3,320,167 |
| 133141 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மீதான நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி | 180,112.23 | 359,876 |
| 133142 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மீதான நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் | 2,673,478.13 | 910,759 |
| 133144 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் - தேசிய வரி வருமானம் | 9,884,433.10 | 5,182,733 |
| 133147 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் - ஈ.எஸ்.சீ. | 204,732,757.00 | 127,261,102 |
| 133148 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் - 1/3 பெறுமதி சேர்க்கப்பட்ட வரி முற்பணம் | 45,900.75 | - |
| 13315 | தேர்தல் ஆணையாளர் | - | 281,798 |
| 13317 | கிழக்கு மாகாண உட்கட்டுமான அபிவிருத்தி அமைச்சு | 334,031.20 | 721,784 |
| 13317A | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | 303,037.42 | 455,343 |
| 13317 B | நிதி அமைச்சு | 316,945.47 | 250,712 |
| 13317 C | இலங்கை வெளிநாட்டுப் பணியகம் | 280,540.63 | 190,538 |
| 13317E | பின் வீதி முகாமைத்துவ உசாவுகை – எஸ்.ரீ.டீ.பீ. | 60,328.54 | 310,011 |
| 13317F | தேசிய கட்டிடங்களும் அபிவிருத்திக்குமான அமைச்சு | - | 226,614 |
| 13317G | கொத்தமலை உயர் நீர்மின்வலுக் கருத்திட்டம் | 231,761.79 | 225,001 |
| 13317H | ஏற்றுமதி அபிவிருத்திக்கான அமைச்சு | 447,595.69 | 434,071 |
| 133171 | நகர அபிவிருத்திக்கான அமைச்சு | 1,007,499.65 | 752,926 |
| 13317J | நீர் வழங்கல் சபை | 596,807.60 | 426,979 |
| 13317K | மீளக்குடியமர்த்தல் அனர்த்த நிவாரண சேவைகள் | 1,874.44 | - |
| 13318 | பெறக்கூடிய வாடகை | 917,155.19 | - |
| 13324 | இலங்கை வங்கி பெற வேண்டிய வரி வருமானம் | 2,416,578.23 | 995,432 |
| 133251 | மாற்றப்படாத காசோலைகள் | - | 56,590 |
| 221 B | வாடிக்கையாளர்களின் வேலைக்கான கடன் பட்டோர்கள் | 375,683.47 | 95,602,480 |
| 22332 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்- பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) | 6,622,531.05 | - |
| | கடன்பட்டோர்-களஞ்சியத்திலுள்ள நிர்மாணப் ஆதரப் பொருட்கள் | 256,210.00 | - |
| | | 296,325,567.97 | 308,346,627 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்கள்

குறிப்பு 04ஏ

| | | | |
|---|---|---|---|
| 13327 | கடன்பட்டோர் - கொங்கிறீட் பாவித்து உற்பத்தி செய்யும் இடம் | | |
| | கடன்பட்டோர் - கொங்கிறீட் பாவித்து உற்பத்தி செய்யும் இடம் | 5,671,885.00 | |
| | கழி | | |
| I | <u>வரையறுக்கப்பட்ட வீதி நிர்மாண அபிவிருத்தி (தனி.) கம்பனி</u><br>கணக்காய்வுக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் இக்கம்பனி 1987 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் ஒரு உப நிறுவனமா கூட்டிணைக்கப்பட்டது. அதிகாரசபை, பணிப்பாளர் சபைக்கு ஒரு பிரதிநிதித்துவத்தை மேற்கொண்டதுடன், மீளாய்வு ஆண்டு காலத்திற்- கான அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளின் பிரகாரம், வழங்கப்பட்ட மூலதனத்தில் ஒரு பங்கு தவிர, 114.7 மில்லியன் தொகை ஏனைய பங்குகளில் முதலீடு செய்யப்பட்டதுடன், ரூபா 327 மில்லிய-னான கடன் வழங்கப்பட்டிருந்தது. 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, திறைசேரியானது 3 மாதங்களுக்குள் அதனை பூர்த்தி செய்வதற்கு அறிவுறுத்தியிருந்தது. ஆனால் கலைப்பு | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் மீளாய்வு ஆண்டின் முதலில்கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. ரூபா 6,473,194 தொகைக் கான செலவினங்கள், மீளாய்வு ஆண்டின் முடிவில் கலைப்பு நடவடிக் கைகளுக்காக ஏற்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டது. | | இக்கம்பனியின் கலைப்பு செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன் இறுதித் தொகையானது பெற்றுக் கொள்ளப்படும் போது இந்தக் கணக்கு தீர்க்கப்படவுள்ளது இவ் ஆண்டு (2011) |
| | ❖ அதிகாரசபையினால் குறித்த கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய 14 விடயங்களில் அந்த அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய 7 விடயங்கள் கொடுத்துத் தீர்க்கப்-பட்ட பின்னர், எஞ்சியிருந்த ரூபா 85.986 மில்லியன் தொகையானது அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளில் செலுத்தப்பட வேண்டிய தொகையாகக் காட்டப் பட்டுள்ளது. இச்சீராக்கம் தொடர் பான விபரங்கள் கணக்காய்-விற்காகக் கிடைக்கவில்லை. | வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக் கம்பனி யின் நடைமுறைக் கணக்கில் சென்மதிக் கும் வருமதிக்கும் வேறுபாடு இந்தத் தொகையில் உள்ளது. கம்னியின் கலைப்புச் செயன்முறை 2009 ஆம் ஆண்டில் நிறைவு பெறும் என்று கருதி இந்தத் தொகை கொடு படவேண்டிய நடை முறைப் பொறுப்பாக காட்டப்பட்டுள்ளது. | கலைப்புச் செயன்முறை யானது கடந்துள்ள தால் இது இவ்வாண்டு தீர்க்கப்படும். |
| | ❖ சொத்துகளின் பெறுமதி கலைப் பாளர்களினால் ரூபா 27.290 மில்லியனுக்கு மட்டும் மதிப்பிடப் பட்ட அதேவேளை, ரூபா 99.731 மில்லியன் பெறுமதியான சொத்-துக்களை இக்கம்பனியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளித்திருந்தது. | ரூபா 35,095,272.32 வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கையளிக் கப்பட்ட இரண்டாவது தொகுதிக்கும் பொருந் தும். நாங்கள் ரூபா 99,731,886.22 பெறுமதி-யான 5 தொகுதி சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார-சபையால் பெறப் பட்டது. இது பின்வரு மாறு வழங்கப்பட்டது.<br>எமல்சன் கம்பனிக்கு ரூபா 12,868,519.91<br>உபகரணக் கம்பனிக்கு ரூபா 44,516,178.09<br>வீதி அபிவிருத்தி அதி கார சபையால் தன்-வசம்வைத்துக் கொண்டு கைலப்பாளருக்கு சென்-மதியாகக் காட்டப்பட்டது ரூபா 27,290,488.20<br>வீதி அபிவிருத்தி அதி காரசபை வைத்துக் கொண்டு மூலதனத் திற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டது. 15,056,700.00<br>99,731,886.22 | கலைப்புச் செயன்முறை யானது கடந்துள்ள தால் இது இவ்வாண்டு தீர்க்கப்படும். |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | ❖ ரூபா 259 மில்லியன் மதிப்பிடபட்ட உதிரிப் பாகங்களுடன் பொறியும், பொறித் தொகுதிகளையும், வாடகை அடிப்படையில் இக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, கையளிக்கப்பட்ட அத்தகைய பொறியும், பொறி இயந்திர சாதனங்களின் பெறுமதி ரூபா 100 மில்லியன் ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 159 மில்லியன் பெறுமதியான பொறியும், பொறித் தொகுதி இயந்திர சாதனங்கள் திரும்பப் பெற்றதற்கான சான்று கணக்காய்வுக்காகக் கிடைக்கவில்லை. | இந்தச் சொத்துக்கள் மகநெகும கம்பனியின் பிரதிநிதியிடம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கலைப்பாளரால் கையளிக்கப்பட்டு பாரம் கொடுக்கப்பட்ட ஆவணம் இயந்திரப் பகுதியில் உள்ளது. | ஆவணங்கள் இருக்கின்றன. |
| | ❖ இந்தக் கம்பனிக்கு சொந்தமான ரூபா 15.056 பெறுமதியான கட்டிடங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன என ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட, இவைகள் அதிகாரசபையின் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்ததற்கான சான்று கிடைக்கவில்லை. | இந்தக் கணக்கு 2007 இல் கணக்கிடப்பட்டிருந்தது. | இவை வீதி அபிவிருத்தி அதிகாரசபையினுடைய கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. |
| | ❖ மீளாய்வு ஆண்டு காலத்தில் இறுதிக் கணக்கின் பிரகாரம், அதிகாரசபையின் பொறி மற்றும் இயந்திரத் தொகுதிகளை இந்தக் கம்பனிக்கு வாடகைக்கு விடுவது தொடர்பில் பெறக்கூடிய வாடகை ரூபா 620.817 மில்லியன் தொகை யென அவதானிக்கப்பட்டது. | இது திருத்தப்படவில்லை பெறவேண்டிய மோட்டார் வாகன வாடகைக் கட்டணத் தொகை ரூபா 907,161 ஆக இருக்கிறது. பெற வேண்டிய வாடகை ரூபா 9,100,000.00 | இவைகள் தற்போது தீர்வு செய்யப்பட்டிருக்கிறது |
| | ❖ இந்தக் கம்பனிக்கு ரூபா 66 மில்லியன் வரிப் பொறுப்பாக இருந்ததுடன், அதனைத் தீர்ப்பதற்கு பொது திறைசேரியிடமிருந்து ஏற்பாடுகள் கோரப்பட்டிருந்தன. | நாங்கள் பதிவினை பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க முடியாமல் உள்ளதுடன் இது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதல்ல. | கலைப்புச் செய்முறை மேற்கொண்டதன் பயனாக தீர்க்கப்--பட்டுள்ளது |
| 3 (ஈ) (ii) | <u>**வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும எமல்சன் உற்பத்திக் கம்பனி**</u><br>கணக்காய்வுக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், இந்த கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபா 200 ஆக இருந்ததுடன், அதிகாரசபை பங்கு மூலதனத்தில் ரூபா 100 தொகையை முதலீடு செய்தது. இருப்பினும் மீளாய்வு | உடன்படுகின்றோம் | நிதி அமைச்சினுடைய அங்கீகாரத்துக்காக ரூபா 1.00 மில்லியன் முதலீடாக இருக்கிறது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான அதிகார சபையின் கணக்குகளின் பிரகாரம், ரூபா 1 மில்லியன் கம்பனியின் உரிமை மூலதனத்தில் முதலீடு செய்யப்பட்டு இக்கம்பனி ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கம்பனி, அதிகாரசபையினால் வீதி அபிவிருத்திக்காகக் கோரப்பட்ட எமல்சன்னை வழங்கியிருந்தது. | | |
| (iii) | <u>வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் உபகரணக் கம்பனி</u><br>கணக்காய்வுக்குக் கிடைத்த தகவல்-களின் பிரகாரம், இந்தக் கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபா 200 ஆக இருந்ததுடன், அதிகாரசபை அதனுடைய பங்கு மூலதனத்தில் ரூபா 100 தொகையை முதலீடு செய்தது. கலைப்புக்கு உள்ளாகியிருக்கின்ற வரை-யறுக்கப்பட்ட தனியார் வீதி நிர்மாண மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்கு சொந்-தமான சொத்துக்களும் மற்றும் அதிகாரசபைக்குச் சொந்தமான பொறி-யும், இயந்திர சாதனத் தொகு-தியும் இந்தக் கம்பனிக்கு கையளிக்கப் பட்டிருந்தது. இருப்பினும் 2005 முதல் 2008 வரையான காலப் பகுதிகளுக்காக பட்டியலிடப்பட்ட வாடகைக் கட்டணங்கள் ரூபா 841.37 மில்லியன் என தொகை-யிடப்பட்டதுடன், குறிப்பிடப்பட்ட காலப் பகுதியில் பயன்படுத்தப்படாத அத்தகைய பொதிகள் மற்றும் இயந்திரத் தொகு-திகள் தொடர்பில் ரூபா 303 மில்லியன் தொகையை கம்பனி கழித்திருந்தது. இத்தகைய சொத்துக்களின் வாடகை தொடர்பாக அதிகாரசபைக்கும் கம்பனிக்-கும் இடையில் செய்யப்பட்ட உடன்-படிக்கை தொடர்பில் எந்தவித சான்று-களும் கிடைக்கவில்லை. | எங்களுடைய ஆரம்ப விலைப்பட்டியல்கள் தொடர்பாக மகநெகும கம்பனியுடன் முரண் பாடு இருந்தது. அவர் களின் பாவனையில் இல்லாத இயந்திரங் களும் உபகரணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது ஒரு காரணம். இதை விசாரணை செய்யும் போது தவறு இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. 3 வருடத்திற்கான தவறுகள் ஒன்றாக சீராக்கப்பட்டது. | அவர்களால் சமர்ப்-பிக்கப்பட்ட பயன்பாட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகைக் கட்டணம் கணிக்கப்படுகிறது. |
| (iv) | <u>வரையறுக்கப்பட்ட தனியார் மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமை-த்துவக் கம்பனி</u><br>கணக்காய்வுக்குக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், இந்தக் கம்பனி-யின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபா 400 ஆக இருந்ததுடன், அதிகார-சபை பங்கு மூலதனத்தில் ரூபா 100 தொகையை முதலீடு செய்தது. இருப்-பினும் ரூபா 1 மில்லின் தொகை இக் கம்பனியின் உரிமைப் பங்கு மூலதனத்-தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது என நடைமுறை வருடத்திற்கான | உடன்படுகிறோம் | நிதி அமைச்சினுடைய அங்கீகாரத்துக்காக ரூபா 1.00 மில்லியன் முதலீடாக இருக்கிறது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருந்தது.<br><br>மேலே குறிப்பிடப்பட்ட மகநெகும கம்பனிகள் அதிகாரசபையினால் தாபிக்கப்பட்டது. கணக்காய்வில் இது தொடர் பாக அவதானிக்கப்பட்ட மேலதிக விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | | |
| | ❖ இந்தக் கம்பனிகளை ஆரம்பிப்பதற்காக அதிகாரசபையால் பெறப்பட்ட அதிகாரச் சான்றுகள் கணக்காய்வுக்காகப் பெறப்பட்டிருக்கவில்லை. | மகநெகும கம்பனியின் தலைவர்களிடமுள்ள பங்குகளை கொள்முதல் செய்வதற்கு வீதி அபி விருத்தி அதிகாரசபை யின் பணிப்பாளர் சபை யினால் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. | இந்தக் கம்பனிகள் உருவாக்கத்துக்கு ஓர் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அதன் பிரதிகள் கணக்காளர் நாயகத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளது |
| | ❖ அதிகாரசபையின் நிதிகளை முதலீடு செய்வதற்காகப் பெறப்பட்ட பங்கு சான்றிதழ்கள் கணக்காய்வுக்காகப் பெறப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தோம் பங்குப் பத்திரத்துக்காக ஆனால் இது வரையும் கிடைக்க வில்லை. | பங்குப் பத்திரம் இது வரையும் கிடைக்க வில்லை. |
| | ❖ ஒரு பங்கு உரிமையாளரான இவ் அதிகாரசபையினால் இந்தக் கம்பனிகளின் கணக்குகளை கணக்காய்வு செய்யப்பட்டதற்கான ரசீது (பற்றுச்சீட்டு) தொடர்பான சான்றுகள் கணக்காய்வுக்காகப் பெறப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் கணக்காய்வு கணக்குகளை பேணுவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். | 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த வருடத்திற்கான அனைத்து 3 கம்பனி களினதும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு கள் இருக்கின்றன. |
| | ❖ தற்போது கவனிப்புக்குள்ளாகி யிருக்கின்ற வரையறுக்கப்பட்ட தனியார் வீதி நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்குச் சொந்தமான பல்வேறான சொத்துக்கள் மகநெகும கம்பனிகளால் பயன்படுத்துவதற்கு அனு மதியளிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, அது சம்பந்தமான குறித்த தகவல்கள் மற்றும் உடன் படிக்கைகள் கணக்காய்வுக்காகப் பெறப்பட்டிருக்கவில்லை. | குறிப்பான ஒப்பந்தங் கள் செய்யப்படவில்லை ஆனால் முறையாக கையளிக்கப்பட்டு பாரம் எடுக்கப்பட்ட ஆவணங் கள் இயந்திரப் பகுதி யில் உள்ளது. | முறையான ஒப்பந்தத் தில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது. |
| | ❖ இந்தக் கம்பனியை தாபிப்பது தொடர்பிலான ஆவணங்கள் கணக்காய்வுக்காகப் பெறப்பட்டி ருக்கவில்லை. | இந்த அனைத்து கம்பனிகளும் அமைச்ச ரவையின் தீர்மானத் துடன் உருவாக்கப்பட்டு ள்ளது. | இவை சம்பந்தமான ஆவணங்கள் இருக்கின் றதுடன் அது கணக் காய்வாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| 4<br>4.1 | **தொழிற்பாட்டு மீளாய்வு**<br>**செயலாற்றுகை**<br>அதிகாரசபையின் செயல்நோக்கம், சகல பங்களிப்பாளர்களினதும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பைத் தர முயர்த்துவதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையை நெடுஞ்சாலை பொறி யியலில் பல்துறை நிபுணத்துவம் வாய்ந்த ஒரு உன்னதமான நிறுவனமாக ஆக்குதல் ஆகும். இவ் அதிகாரசபை யின் செயற்பாடுகளாவன, நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான மக்களினதும் பொருட்களி னதும் போக்குவரத்தை, சூழலுக்கு இசைவான வகையிலும் எற்றுக் கொள்ளக் கூடிய பாதுகாப்பு மற்றும் சொகுசு மட்டத்திலும், செய்வதற் குகந்ததும் திறமையானதுமான ஒரு தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பை, வீதித் துறையின் முதன்மைத் தேசிய நிறுவனம் என்ற வீதியில் வழங்குதல் போன்ற இவ் அதிகாரசபையின் செயற் பணிகளை பூர்த்தி செய்யும் பொருட்டு 4,429 பாலங்கள் உட்பட 11,902 கி.மீற்றர் நீளமான தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பினை புனரமைத்து அபிவி ருத்தி செய்வதும் ஆகும். | | |
| | மீளாய்வு ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம், ரூபா 7,834 மில்லியனுக்கான ஏற்பாடு, மேலே குறிப்பிடப்பட்ட நோக்க ங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 09 மாகாணங்களில் உள்ள மாற்று வீதி களினதும், ஏனைய விசேட செயற் திட்டங்களினதும் வீதி நிர்மாணத்தை மேம்படுத்தி அகலமாக்குவதற்காக மேற் கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டு காலத்தில் இவ் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 9,915 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டி ருந்தது. கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின்படி, அதிகாரசபையின் நோக்கங்களுக்குள் வராத செயலாற்றுகை மற்றும் நிச்சயமான நடவடிக்கைகள் தொடர்பில் அதிகாரசபையினால் மேற்-கொள்ளப்பட்டிருந்தது உரிய காலங்-களில் எமல்சன் மற்றும் நிதிகள் கிடைக்காமை காரணமாக, நாளாந்த பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடி க்கைகளின் முன்னேற்றம் சில பரப்புக்களில் பாதிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | மழை காலத்தில் வீதி களின் நிலை மிகவும் கீழ் நிலையில் இருந்-தால் எதிர்பார்த்த செல வுகளிலும் பார்க்க கூடிய செலவு பராமரிப்பு வேலைக்கு ஏற்பட்டது. ஆனால் பெற்ற ஒதுக்க த்துக்கும் இந்தச் செலவு ஏற்பட்டது. மகுநெகும வால் வழங்கப்பட்ட கலவையின் விலைகள் ஏனைய கம்பனியுடன் ஒப்பிடுகையில் குறைந்-ததாக இருந்தபடியால் மகநெகும கம்பனியின் கலவையின் தரம் சிறந் ததாக இருந்தமையால் அக்கம்பனியுடன் கொள் முதல் செய்ய தீர்மா-னிக்கப்பட்டது. | எங்கள் (Asphalt plant) நிர்மாணிக்கப்பட்ட-தனால் இமேசன் வழங்கல் அபிவிருத்தி காரணமாகவும் முன் நோக்கிச் செல்ல முடி-கிறது. |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | **அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளின் செயலாற்றுகை தொடர்பில்** | | |
| 4.1.1 | அதிகாரசபையின் நோக்கத்தை நிறை வேற்றும் பொருட்டு தாபிக்கப்பட்ட பகுதி களில், சில பகுதிகளுடைய நடவடிக் கைகள் பரிசோதனை செய்யப்பட்டதுடன், சில பகுதிகள் தொடர்பிலான செயலாற் றுகையும் மேற்கொள்ளப்பட்டு, இது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. | | |
| (அ) | <u>தொழில்நுட்பப் பிரிவு</u><br>இந்தப் பிரிவு 35 வாகனங்களை பல்வேறு காலங்களில் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு விடுவிக்கப் பட்டிருந்த போதிலும்கூட, அவற்றைத் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரசபையின் பழுதடைந்த சில வாகனங்களைத் திருத்துவதற்கு நீண்ட காலம் எடுக்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட அமைச்சர் கள் மற்றும் முன்னைய செயலாளர்களுக்கு குறிப்பிட்ட வாகனங்-களை திருப்பித் தரும் படி பல கடிதங்கள் அனுப்பப்பட்டது. ஆனால் அவர்கள் பதில் தரவில்லை. மேந்தலை நிதிகள் இல்லாத காரணத்தால் வாகனத் திருத்தங்கள் தாமதிக்கப்பட்டுள்ளது. அவைகள் திருத்தப்-பட்டு பாவனையில் உள்ளது. | சில வாகனங்கள் திரும்ப கிடைக்கப் பெற்றன. மேலும் மீதியான வாக னங்களை மீளப்பெறு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (ஆ) | <u>சட்டப் பிரிவு</u><br>இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் வருடாந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனாலும் செயல் திட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை என அவ தானிக்கப்பட்டது. | நீதிமன்றத்தில் வழக்கு களின் திகதிகள் முன்னரே தீர்மானிக்க முடியாத காரணத்தால் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. அனுமதிக்கப்படாத நிர்மாணங்கள் அடை-யாளம் காணப்படல் மற்றும் சட்ட முன்னறி வித்தல் வழங்கப்படுதல் நிறைவேற்றுப் பொறியி-யலாளர்களின் கடமை. சட்ட அலுவலர் ஒருவரை இக்கடமைக்கு நிறுத்து வது வழங்கலை வீண் ணடிப்பதாக இருக்கும். ஒரு பொது எழுது வினைஞர் இதனைச் செய்ய முடியும். | தற்போது செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படு கிறது. |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| (இ) | <u>நெடுஞ்சாலை வடிவமைப்பு பிரிவு</u><br>ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆரம்ப வடிவமைப்புக்கள் மூலம் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் கூட, மேலும் இதன் விளைவாக வரும் செயற்திட்டங்களுக்காக ஏற்பட்ட செலவினம் இந்தப் பிரிவினாலும் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்த நடவடிக்கை தொடர்பாக இச் செயற்திட்டங்களினால் ஏற்பட்ட செலவினம் தேவையில்லை எனக்காட்டியது. | பெருந்தெருக்கள் வடிவமைப்புப் பகுதி கணனி மயப்படுத்தும் வரையில் திட்டங்களுக்கான வடிவமைப்பு மதிப்பீடுகள் தயாரிப்பது ஏழாது உள்ளது. இதைச் செய்வதற்கு இயல்பு உள்ளது. 5 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | இவ் வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. |
| 4.1.2 | **மாகாண அலுவலகங்கள் மற்றும் பொறியியல் அலுவலகங்களின் செயலாற்றுகை**<br>தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணப் பணிப்பாளர்களது அலுவலகங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மாதிரிச் செவ்வையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | மீளாய்வு ஆண்டுக் காலத்திலுள்ள முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், சில செயற்திட்டங்கள், திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை என்பதுடன், ஒதுக்கப்பட்ட மதிப்பீட்டு ஏற்பாடுகள் சில செயற்திட்டங்கள் தொடர்பாக செலவழிக்கப்படாமல் இருந்தும், மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டைவிட மிகையாக சில செயற்திட்டங்கள் தொடர்பில் செலவினங்கள் ஏற்பட்டிருந்தன. உதாரணமாக ரூபா 58.863 மில்லியன் தொகையானது மேல் மற்றும் தென் மாகாணங்களில் திட்டமிடப்பட்ட தொடர்ச்சியான வேலைகளுக்காக அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஏற்பட்ட செலவினம் ரூபா 4.848 மில்லியன் மாத்திரமே ஆகும். மேல் மாகாணத்தில் 8 செயற்திட்டங்கள் தொடர்பில் மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 241.116 மில்லியனாக இருக்கையில் உண்மையாக ஏற்பட்ட செலவினம் ரூபா 591.452 மில்லியன் ஆகும். ரூபா 11.566 மில்லியன் தொகை, இரண்டு மாகாணங்கள் தொடர்பில் வடிவமைப்பினை மேம்படுத்துவதற்காக அளிக்கப்பட்டிருந்த போதிலும்கூட, ஏற்பட்ட செலவினம் ரூபா 0.204 மில்லியனே ஆகும்.<br><br>மீளாய்வு ஆண்டில் உண்மையான செயலாற்றுகையுடன் இலக்கிடப்பட்ட வேலைகளை ஒப்பீடு செய்வதன் மூலம் | செயலாற்றுகை மற்றும் இலக்கிடப்பட்ட வேலைகளை தொடர்புபடுத்து | நடைமுறையில் இது மேற்கொள்ளப்படுகிறது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | நோக்கங்களை அடைவதில் ஏற்பட்ட தவறு காரணமாகவும் எடுக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர் பாகவும் மேற்கொள்ளபட்ட விசாரணை களை உறுதிப்படுத்துவதற்கு தேவை யான சான்றுகள் கிடைக்கவில்லை. | வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | அலுவலகங்கள் மற்றும் வேலைத் தளங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளை இனங்காணுவதன் மூலம் வேலைகள் உரிய பிரிவினால் மேற்-கொள்ளப்படவில்லை. | அனுபவம் குறைவாக உள்ள ஆளணி உள்ள காரணத்தால் கடமை கள் மேற்கொள்வதில் பிரச்சனைகள் இருந்தன இந்நிலையை நீக்கு-வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப் படும். | இந்நிலை தற்போது முன்னேற்றம் அடைந் திருக்கிறது. |
| (இ) | மீளாய்வு ஆண்டு காலத்தில் அதிகார சபையின் குறிக்கோள்களை எய்து வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு கள், சில சமயங்களில் வேறுசில நோக் கங்களுக்காக செலவு செய்யப்பட்டி ருந்தது என கணக்காய்வில் அவதானிக் கப்பட்டது. | வீதி அபிவிருத்தி அதி காரசபையின் தொழில் சம்பந்தமான நடவடிக் கைகளும் பரப்பு எல்லை யும் பல சந்தர்ப்பங் களில் மாற்றத்துக்கு உள்ளாகின. தற்போது வீதி அபிவிருத்தி அதி காரசபை அதிகரிக்கப் பட்ட பரப்பெல்லையுடன் தொழிற்பட வேண்டி யுள்ளது. | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேலை அளவும், வேலையும் சட்டத்தின் கீழ் செயற்படுகிறது |
| (ஈ) | வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரித்தல், மதிப்பிழந்த காசோலை களின் செயல் நடவடிக்கை, கொடுக்க வேண்டிய வைப்புக்கள் மற்றும் பிடிப்புப் பணம் ஆகியவற்றின் மீள்அளிப்பு, பெறப்பட்ட முற்பணங்களின் தீர்ப்பனவு மற்றும் களஞ்சியங்களில் பாவிக்கப்படாத சேத-மடைந்த பொருட்களின் விற்பனை போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் பெறப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அனுபவம் உள்ள அலு வலர் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் இத் தாமதம் ஏற்பட்டுள்ளது. தேறாத வைப்புப் பண ங்கள் மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் முற்பணங்கள், பிடித்து வைத்தல் பணம் ஆகிய வற்றை தீர்வு செய்-வதற்கு நடவடிக்கைகள் எடுப்பதுடன், இருப்புப் பதிவேடுகள் பராமரிப் பதற்கும் நடவடிக்கை கள் எடுக்கப்படும். | இவை தீர்க்கப்பட்டி ருக்கிறது. |
| 4.1.3 | **நிறைவேற்று பொறியியலாளர்களின் அலுவலகங்கள்** நீர்கொழும்பு, அவிசாவளை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர்களின் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் செவ்வையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தது. | | |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு குறைந்த அளவிலான முன்னேற்றம், சில நிறைவேற்றுப் பொறியியலாளர்- களின் அலுவலகங்களினால் மீளாய்வு ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட காலத்திற்குக் காலம் நடைபெறும் பராமரிப்பு வேலைகள், சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல், நீர் வினியோகம் போன்றவற்றிற்காக அறிக்கை யிடப்பட்டிருந்தது. உதாரணமாக நீர்கொழும்பு மாவட்டத்திலுள்ள நிறை வேற்று பொறியியலாளரின் அலுவல கத்தில் இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் 50% த்தைவிடக் குறை வாகவே அறிக்கையிடப்பட்டிருந்தது. | ஒதுக்கீடுகள் போதாமல் உள்ள காரணத்தால் | இந்தப் பிரச்சனைகள் தற்போது தீர்வு கண்டு- ள்ளது. |
| (ஆ) | அவசரமான நடவடிக்கைகள், பொருத் தமான அளவீடுகள் மேற்கொள்ளப் பட்டதன் பின்னர் அங்கீகாரமற்ற நிர்மாணங்கள் மற்றும் அனுமதியற்ற விளம்பரப் பதாதைகள் போன்றவற்றை அகற்றுவது தொடர்பில் இந்தப் பொறியியலாளரின் அலுவலகங்களினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உதாரண மாக நீர்கொழும்பு மற்றும் அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளரது அலுவல கங்களினால் இந்த நடவடிக் கைகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை கள் எவையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அதிகாரமளிக்கப்படாத எல்லா விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் போன்றவற்றை அகற்ற முடியாமல் இருந்தது. ஏனெனில் பராமரிப்பு வேலை களுக்காக முன்னுரிமை அளிக்கப்பட்டது. | அதிகாரமளிக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்ட வற்றை அகற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | பயன்படுத்தப்படாத குறியீட்டுப் பலகை கள் மற்றும் ஏனைய பொருட்கள் ஆகியன சில அலுவலகங்களில் நீண்ட காலமாக களஞ்சியங்களில் களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவற்றைப் பயன்படுத்துவதற்கு முறையான அளவீடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கணிசமான குறியீட்டுப் பலகைகள், பயன்படுத்தப்படாமல் நிறைவேற்றுப் பொறியியலாளர்களின் கொழும்பு அலுவலகத்திற்குச் சொந்த மான ஒறுகொடவத்தை களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இருப்பு பதிவேடுகளில் இருந்து இந்தச் சமிக்ஞை பலகைகள் விலக்கப் பட்டுள்ளது. பதிவேடுகள் வழங்கி பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | இருப்பு பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | சில நிறைவேற்றுப் பொறியியலாளர் களின் அலுவலகங்களின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கணிசமான காணிகள் அத்துமீறி காணி பிடிப்போர் களால் பயன்படுத்தப்பட்டிருந்தவை என அவதானிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக அவிசாவளை நிறை வேற்றுப் பொறியியலாளர் அலுவலகத் | குத்தகை அடிப்படை யில் ஹோமாகம பிரதேச செயலாளரி னால் கோவிலுக்காக ஒரு பகுதிக் காணி வழங்கப்பட்டது. தொழில் நுட்ப உத்தியோகத்- தருக்கு அறிவுறுத்தல் | வீதி அபிவிருத்தி அதி காரசபையினுடைய காணியை அளவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | திற்குச் சொந்தமான கலகெதர களஞ்சியம் அமைந்துள்ள இடத்தில் கிட்டத்தட்ட 01 ஏக்கர் விஸ்தீரணக் காணியின் பகுதியில் அனுமதியற்ற நிர்மாணம் அமைக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டது. மேற்படி வேலைத் தளத்தினை பாதுகாப்பாக அளவிட்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு | |
| (உ) | நீர் வினியோக ஏற்பாடுகளுக்காக அமைக்கப்பட்ட வீதிகள், இந்தப் பொறியியலாளர்களின் அலுவலகங்களினால் சரியான முறையிலும் விரைவாகவும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மேற்குறிப்பிட்ட சேதத்தை திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் | இவைகள் தற்பொழுது சீராக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 4.2 | **ஒப்பந்த நிர்வாகம்** அதிகாரசபையினால் நிர்மாணங்களை வழங்குதல், பூர்த்தி செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் செவ்வையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | | |
| (அ) | வழங்கப்பட்ட சில ஒப்பந்தங்கள் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக ரூபா 26 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2006 இல் பல வீதிகளுக்கான வடிவமைப்புக்கள் மற்றும் கேள்விப் பத்திரங்களைத் தயாரிப்பதற்காக 5 கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும்கூட, கிட்டத்தட்ட 204 கி.மீற்றர் நீளமான வீதிகள் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன் செலவினங்கள், ஒப்பந்தத் தொகையை விட அதிகமாக ஏற்பட்டிருந்தது. | இல: 4, 6 உடைய ஒப்பந்தம் தொடர்பான திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒப்பந்த இல: 1, 2 தொடர்பான வேலைகள் வடிவமைப்பு வேலைகள் பூர்தியான பின்பு ஆரம்பமாகவுள்ளது. இல: 3, 5 தொடர்பான வேலைகள் நடைமுறை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. விரைவில் ஆரம்பமாகவுள்ளது. | ஒரு திட்டம் தவிர்ந்த ஏனையவை யாவும் பூர்த்தியாக்கப்பட்டது. திருப்தியற்ற முறையில் செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தம் செயலற்ற தாக்கி செயற்பாட்டுப் பிணை காசாக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஒப்பந்தத்தின் நோக்கத்தை முறையாக இனங்காணுவதில் ஏற்பட்ட தவறு காரணமாக, ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் மேலதிக வேலைகளுக்காக சில ஒப்பந்தங்களின் பெறுமதியைவிட அதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. உதாரணமாக மிட்டேனியா – பாணமுற வீதிகளின் மேம்பாட்டிற்கான ஒப்பந்தத்தின் நோக்கம், ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் மாற்றமடைந்திருந்தது. முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் ஒப்பந்தக் காரரின் திருப்திகரமற்ற முன்னேற்றம், இந்த ஒப்பந்தங்களை வழங்கும் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும்கூட, தொழில்நுட்பக் குழு இந்த ஒப்பந்தத்தை | தொழிநுட்ப ஆய்வுக்குழு ஆளணியினர் மற்றும் இயந்திரங்கள் தேவையான அளவில் வேலையை முன்னெடுக்க உள்ளது என்பதை அறிந்து எட்வேட் கிறிஸ்ரி நிறுவனத்துக்கு முன்மொழிந்துள்ளது. எட்வேட் மற்றும் கிறிஸ்ரி நிறுவனத்தினால் கூறப்பட்ட குறைந்த விலை றோயல் கொம் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை மூலம் உடன்பாட்டுக்கு வந்து அக்குறைந்த விலைக்கு ஒப்பந்தம் | திட்டங்கள் நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதத்தைக் குறைப்பதுடன் ஆரம்ப ஒப்பந்த விலைக் கிரயத்தை மிஞ்சாமல் இருப்பதை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால் இதற்குரிய காரணம் பொது வசதிகள், இடப் பெயர்தல், மேலதிக வேலைகள் ஏற்படுதல், பாதகமான காலநிலை, விலை ஏற்றஇறக்கம் ஆகியன. இந்தக் காரணங்கள் சந்தை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | அவருக்கே வழங்குவற்கு தீர்மானித் திருந்தது. எனினும் நிர்மாண வேலைகளில் பல்வேறான குறைபாடுகள் காரணமாக வேலைகளில் தாமதம் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப் பட்டிருந்தது. | செய்யப்பட்டது. எட்வேட் மற்றும் கிறிஸ்ரியுடன் கொள்வனவுக் குழு விவாதித்து அவர்களிடம் ஆளணி இயந்திரங்கள் ஆகிய வளங்கள் வேலையை நிறைவேற்றியிருப்பதன் காரமாக 2006 இல் அவர்களுக்கு இவ்வேலை வழங்கப்பட்டது. | நிலமையாலும் ஏனைய எதிர்பார்க்காத காரணங்களாலும் ஏற்படுகிறது<br><br>ஆனால் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி இன்றி வேலைகளை மாற்றம் செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும் இந்த வேலை திட்டம் தற்போது முடிவுற்றது. |
| (இ) | சில ஒப்பந்தங்களின் வேலைகள் தாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த வேலைகள் குறித்துரைக் கப்பட்ட காலத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக மினுவாங்கொடை – மிரிஸ்வத்தை – கட்டான வீதியில் அமைந்துள்ள 9/3 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாண காலத்தில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், பல்வேறான குறைபாடுகளும் அவதானிக் கப்பட்டது. | 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் வாரத்தில் இப் பாலத்தின் வேலைகள் ஆரம்பமாக இருந்த போதிலும் காலைநிலை காரணமாக ஆரம்பிக்கப்படவில்லை. வேலை முன்னேற்றக் குறைவுக்கு இக்காலநிலை தான் காரணம். மேலும் பாலத்தின் அமைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கால நீடிப்பு கொடுப்பதும் தாமதமானது. | தற்போது இந்த பாலத்தினுடைய நிர்மாணிப்பு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதற்கு முன் தொடர்பான வேலைகள் உரிய முறையில் பரிசீலிக்க வேண்டியதுடன், இடங்களின் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ஒப்பந்தத்தில் உள்ள சில பகுதிகளில் அதிகாரசபையின் உத்தியோகத் தர்களுக்கு ஒப்பந்தக்காரர்களினால் ஒப்பந்தத்திலுள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய பின்னர் மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப் பட்டது. உதாரணமாக ஹேன்வெல – பூகொடை – உறபொல வீதியில் அமைந்துள்ள 8/3 ஆம் இலக்க பாலத்தின் மீள்நிர்மாணத்தில் செய்யப்பட வேண்டிய வேலைகளின் பகுதிகள் மாற்றப்பட்டிருந்தது. | ஏற்கனவே இருந்த பாலத்தின் உபகட்டமைப்பு நல்ல நிலையில் இருந்தாக கருத்திற் கொண்டு வடிவமைக்கும் போது இருந்த கட்டமைப்பை உபயோகிக்க தீர்மானிக்கப்பட்டது. வெளிப்பார்வையில் ஒரு குறைபாடும் அவதானிக்கப்படவில்லை. ஆனால் குறைபாடுகள் பின்கண்டுபிடிக்கப்பட்டு அமைப்பு மாற்றப்பட்டது குறைபாடுகள் அகழவு செய்த பின்பு கண்டு பிடிக்கப்பட்டது. | தற்போது இந்த பாலத்தினுடைய நிர்மாணிப்பு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| 4.3 | **உள்ளுர் மற்றும் வெளிநாட்டு நிதிகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள்**<br>மீளாய்வு ஆண்டு காலத்தில் அமுல்படுத்தப்படுகின்ற 21 வீதி அபிவிருத்தி செயற் திட்டங்கள் காணப்பட்டதுடன், இந்த செயற்திட்டங்களை அமுல் படுத்தும் முகவராக வீதி அபிவிருத்தி அதிகாரசபையே காணப்படுகிறது. இச் செயற்திட்டங்களின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்வதில் அவதானிக் கப்பட்ட விடயங்கள் கீழே தரப் பட்டுள்ளன. | முறைசார்ந்த கற்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் 6.4(i) மற்றும் 6.4(ii) இல் கூடிய காரணத்தால் சில விடயங்கள் முன்னரே அறியமுடியாமல் இருந்தது. | |
| (அ) | எதிர்பார்க்கப்பட்டவாறு செயற்திட்ட நிறைவேற்றுகையை பூர்த்தி செய்யும் நோக்குடன் செயற்திட்டங்களின் நடவடிக் கைகளின் செயலாற்றுகைப் பகுப்பாய்வு, மீளாய்வு, அமுல்படுத்துதல் ஆகியவை திருப்திகரமான முறையில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்-பட்டது. | மாதாந்த செய்தியாளர் மாநாட்டில் இத்திட்டங் கள் விவாதிக்கப்பட்டன. இது சம்பந்தமான நட வடிக்கைகள் எடுக்கப் படும். | இவைகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றன. |
| (ஆ) | அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவு, காணிப் பிரிவு, நெடுஞ்சாலைகள் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு, சட்டப் பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றின் தொழிற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டதென அவதானிக்கப்படவில்லை. | வீதி அபிவிருத்தி அதி காரசபையின் காணி மீளக்குடியமர்தல் பகுதி உதவி நிதியுடன் மேற் கொள்ளும் திட்டங்-களின் பொருத்தமான நடவடிக்கைளை மேற் கொள்ள இயல்பு அற்ற நிலையில் உள்ளது. திட்டப் பணிப்பாளர்கள் காணி சுவீகரிப்பு மற்றும் மீளக்குடியமர்தலுக்கு பொறுப்பாய் உள்ளனர். கடன் உடன்படிக்கை களின்படி அதே நிலை ப்பாடுதான் உள்ளது. திட்ட முகாமை அலகு களின் கீழ் காணி சுவீ கரிப்பு மற்றும் மீள் குடியமர்தல் பிரிவுகள் திட்டத்தின் கீழ் ஏற்படும் பிரச்சனைகளை உடன் கையாள நிறுவப்பட்டு ள்ளது. தொடர்புபட்ட வேலையை தொழில் நுட்பக்குழு வடிவமைப்பு மற்றம் மதியுரைஞர் களால் கூறுவிலை கோரும் ஆவணங்-களை மீளாய்வு செய்யும் ஒப்பந்தங்களில் ஏற்படும் | இந்நடவடிக்கைகள் சீராக மேற்கொள்ளப் படுகின்றன. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
| --- | --- | --- | --- |
| | | சட்டம் சார் பிரச்சனைகள் ஒரு விசேட தன்மையைக் கொண்டுள்ளதால் சாதாரண சட்டத்தரணிகள் கையாள்வது கடினம். நிபுணத்துவம் படைத்த சட்டத்தரணிகளின் அறிவுரைகள் தேவைப்படும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப் பிரிவும், வேலைத் திட்ட முகாமை அலகுகளும் தற்சமயம் முன்னேற்ற சுட்டிகள் பிரகாரம் முன்னேற்றத்தைக் கண்காணிக்கின்றன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழில் நுட்பஆய்வுப் பகுதி வேலைத் திட்டத்தளங்களை ஒழுங்காக பரீட்சித்து வருவதுடன் வேலைத் திட்டத்தின் தரம் மற்றும் தொடர்பான விடயங்கள் சார்பாக அறிக்கை சமர்ப்பிக்கும். | |
| (இ) | செயற்திட்டங்களை நிறைவேற்றும் முகவராகவும், அமுல்படுத்தும் முகவராகவும் தொழிற்படுகின்ற முறையே நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவை தொடர்பில் கணக்காய்வு நாயகத்தினால் செயற் திட்டங்கள் தொடர்பில் வினியோகிக்கப் பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டது | அமைச்சின் கணக்காய்வு குழுவின் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுகின்றது. |
| 4.4 | **பயன்பாடற்ற சொத்துக்கள்**<br>பின்வரும் பயன்பாடற்ற சொத்துக்கள் மற்றும் செலவினங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | 1983 இல் அதிகாரசபையினால் பெறப்பட்ட ரூபா 51.8 மில்லியன் பெறுமதியான உபகரண இருப்பும், பெறுமதி குறிப்பிடப்படாத பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களும், வீதி நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 630,000 பெறுமதியான 12 தரை விரிப்புச் சுருள்களும் பல வருடங்களாக | இப்பொருட்களை விற்று அகற்ற பொது மக்களிடம் கூறுவிலை கோரிய போதிலும் தீர்மானித்த விலைக்கு குறைவாக கூறுவிலைகள் இருந்தன பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் கூடிய | ஒரு பகுதி விற்பனை செய்து அகற்றப்பட்டுள்ளது. மீதியானவை விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. துணிச் சுருள்கள் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் மருதானை களஞ்சியங்களில் களஞ்சியப்படுத் தப்பட்டிருந்தது. இந்தப் பொருட்களை மீளப் பயன்படுத்துவதற்கோ அல்லது களஞ்சியப்படுத்துவதற்கோ அல்லது களஞ்சியத்திலிருந்து அகற்றவோ உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | கூறுவிலைக்கு கோரியவர்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. துணிச் சுருள்கள் நிறைவேற்றுப் பொறியியலாளர்களுக்கு பராமரிப்பு வேலைக்கு உபயோகிப்பதற்காக கையளிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சப்பிரகமுவ மற்றும் கதிர்காமம் சுற்றுலா விடுதிகளின் நிர்மாண வேலைகள் முறையே 2000 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், வேலைகள் அதே ஆண்டுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ரூபா 1.069 மில்லியன் தொகை இந்த வேலைகளுக்காக ஆரம்பத்தில் செலவழிக்கப்பட்டிருந்தன. கதிர்காமம் சுற்றுலா விடுதியின் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, ரூபா 2.294 மில்லியன் செலவினம் மீளாய்வு ஆண்டு காலத்தில் ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் அவற்றை மிக விரைவாக பயன்பாட்டில் விடுவதற்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட விடுதிகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாகவில்லை | சுற்றுலா விடுதிகளின் நிர்மாண வேலை செய்யப்படுகின்றது. |
| 4.5<br>(அ) | **மனிதவள முகாமைத்துவம்**<br>பொறியியல் மற்றும் ஏனைய முகாமைத்துவ சேவைகள், தொழில்நுட்ப மற்றும் அதனோடு இணைந்த சேவைகள், எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகள், சிற்றூழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்ற பகுதிகளில் உள்ள 8198 ஊழியர்கள் இவ்வாண்டு காலத்தில் அதிகாரசபையின் சேவையில் சம்மந்தப்பட்டிருந்தனர். இப்பதவியணி அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டு காலத்தில் அங்கீகாரம் பெற்ற நடைமுறையிலுள்ள பதவியணி உட்பட 9531 ஊழியர்களைக் கொண்ட முன்மொழியப்பட்ட பதவியணியைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை. | 15.07.2009 இல் பணிப்பாளர் சபையின் கலந்துரையாடலில் விடுத்த அறிவுரைகளுக்கு அமைய முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் திறைசேரியின் தேசிய பாதீட்டு பகுதிப் பிரதிநிதி நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் பொது முகாமையாளர் ஆகியோர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆளணியினை முன்மொழிந்துள்ளனர். இந்த முன்மொழிவுகள் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது இந்த அனுமதி பெறும் வரை எல்லா நியமங்கள், பதவி உயர்வுகள் நிறுத்தப்பட்டுள்ளன. | திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆளணியினை அனுமதித்துள்ளது |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| (ஆ) | தலைமை அலுவலகம், மாகாண அலுவலகங்கள் மற்றும் ஏனைய பிராந்திய அலுவலகங்கள் ஆகிய-வற்றிற்கு உழியர்களை இணைப்பதற்கு பின்பற்றப்படுகின்ற முறைமைகள் பெறப்-படாமையால், இந்த அலுவலகங்களில் மிகையான ஊழியர்கள் மற்றும் குறைவான ஊழியர்கள் காணப்பட்டனர் எனஅவதானிக்கப்பட்டது. உதாரணமாக அதிகாரசபையின் ஊவா மாகாண அலுவலகத்தில் ஊழியர்கள் குறைவாக இருந்தனர் என அவதானிக்கப்பட்டது. | அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களின் படி மேலதிக மற்றும் குறைந்த ஆளணியினர் ஆகியவை அடையா ளம் காணப்பட்டுள்ளது. | மேலதிக ஆளணியினர் மற்றும் நிரப்ப வேண்டிய நிலைகள் ஆகிய பிரச்சனைகள் சம்பந்தமாக நடவடிக்-கை எடுக்கப்படும் |
| (இ) | அதிகாரசபையின் பிரதான பொறியியலா ளர்களில் ஒருவர் அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் வராத ஒரு தனியார் கம்பனியின் பதவிக்கு 1 வருட காலத்திற்கு சம்பளத்துடன் விடுவிக்கப் பட்டிருந்தார். இந்தப் பொறியியலாளர் இக்கம்பனியிட மிருந்து மாதாந்தம் சம்பளமாக ரூபா 118,000 பெறுகின்ற அதேவேளை அதிகாரசபையும் அவருக்கு படி உட்பட மாதாந்தச் சம்பளமாக ரூபா 69,930 வை வழங்கியிருந்தது. | மகநெகும நிர்மாணக் கம்பனிக்கு நிரந்தரமாக அலுவலர்கள் விடுவிக் கப்பட்டுள்ளன. கொடுப் பனவு செய்த வேதனம் மீளப்பெறப்படும். | இந்தப் பொறியியலாளர் கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு திரும்ப சேர்க்கப்பட்டுள்ளனர். மகநெகும கம்பனியால் நியமனம் வழங்கப்படா மையால் வீதி அபிவிரு த்தி அதிகாரசபையி னால் வழங்கப்பட்ட வேதனம் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் முறைசார் கொடுப்பன வாக கொள்ளப்பட்டது. |
| 4.6 | **அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழான காணியும், கட்டிடங்களும்**<br>5 மாகாணங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அதிகார சபையின் பிராந்திய பொறியிய லாளர்களது அலுவலகங்களின் குடியி ருப்புக்காக கிடைக்கும் வீதிகள் மற்றும் வீடுகளுடன் இணைந்த காணிகளில் 208 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலே குறிப் பிடப்பட்ட இந்தக் காணிகள் உட்பட வீதி அகலித்த லுக்கான காணிகளின் சுவீகரிப்பு, காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (அத்தியாயம் 460) பிரிவு 44 இன் கீழ் பிரதேச செயலகங்களினால் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>அதிகாரசபையில் ஒதுக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான காணிகள், காணிப் பதிவகத்தின் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டது. இத்தகைய காணி களின் விபரங்கள், காணிப் பிரிவு களிலோ அல்லது அதிகாரசபையின் வேறு ஏதாவது பிரிவுகளிலோ பதியப்பட்டிருக்கவில்லை என அவதா னிக்கப்பட்டது. இந்தக் காணிகளுக்கு மேலதிகமாக, பத்திரமுல்லையிலுள்ள | வீதி அபிவிருத்தி அதி காரசபை நிறுவப்பட்ட போது பெருந்தெருக் கள் திணைக்களம் மூடப்பட்ட போதிலும் அதற்கு உரித்தான காணிகள் சட்டப்படி வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்படவில்லை.<br>மேலும் வீதி அபிவிருத்திஅதிகாரசபை சொத்து கள் பதிவேடு தயாரிக்க ப்படவில்லை. இதற்கான காரணம் இவை அரசுக்கு சொந்தமாப் இருந்த போதும் அதன் எல்லைகள் சரியாக வகுக்கப்படவில்லை.<br>இதை சீர்செய்ய பல முறை முயன்ற போதும் பல காரணங் களால் நிறைவுபெற வில்லை. நிறைவேற்று | நில அளவை மேற் கொண்டு 40 வீதமான வேலைகள் முடிவுற்று வரைபடங்கள் தொடர் புடைய பிரதேச செய லாளர்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமை வழங்க அனுப்பப் பட்டுள்ளது. காணிப் பதிவேடு தயாரிக்கப் படுகிறது. உடுமுல்லை காணி வெளிச்சுற்று வட்ட பெருந்தெருக்கள் திட்டத்தினால் உபயோ கிக்கப்படுகிறது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கணக்காய்வு பந்தி இல: | கணக்காய்வு வினாவல் | பதில் | தற்போதைய பெறுபேறுகள் |
|---|---|---|---|
| | உடுமுல்ல பிரதேசத்தில் 452 பேச் விஸ்தீரணமுள்ள காணியொன்று, அதிகாரசபையின் பயன்பாட்டுக்காக நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 62.207 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்தக் காணி இன்று வரை பயன்படுத்தப்-பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. | பொறியியலாளர்கள் மூலம் ஒரு திட்டம் தயாரித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமையைப் பெற நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றன. | |
| 4.7 (அ) | **அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்**<br>உள்ளகக் கணக்காய்வு | | |
| (i) | கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபை யின் பல்வேறான பிரிவுகளின் செயலாற்றம் அதிகாரசபையின் குறிக்கோளின் பிரகாரம் அடையப் பெற்றிருந்தவை என பரிசீலிப் பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் முறையான ஒழுங்கு முறைகள் பின் பற்றப்பட்டிருக் கவில்லை. | அதிகாரசபையின் நோக்கங்களுக்கு இணைவாக வேறுபாடு கள் உள்ளதா என ஒவ்வொரு கணக்காய் வுகளும் பரீட்சிக்கப்படு கிறது. | தற்பொழுது உள்ளக கணக்காய்வு திறம்பட செயற்படுகிறது. |
| (ii) | அதிகாரசபையின் பின்வரும் காலங்கள் தொடர்பில் திருப்திகரமான கணக்காய்வினை மேற்கொள்வது தொடர்பாக உறுதிப்படுத்-துவதற்கு சான்று கிடைக்கவில்லை.<br><br>பெறுகை நடவடிக்கைகள், ஒப்பந்தங்கள் வழங்கல் மற்றும் ஒப்பந்தங்களின் பூர்த்தி.<br>❖ சொத்து முகாமைத்துவம் மற்றும் பயன்பாடு<br>❖ முறைமைகளின் மதிப்பீடு மற்றும் கட்டுப்பாடுகள்<br><br>உள்ளூர் நிதிகள் மற்றும் வெளிநாட்டு நிதிகள் மூலம் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்திச் செயற் திட்டங்களின் நிறைவேற்றுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை நோக்கிய கணக்காய்வுச் செயற்பாடுகள் திருப்திகரமான முறையில் மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக் கப்பட்டது. | ஒவ்வொரு கணக்காய் விலும் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் முகாமைத்துவம் செய்தல் ஆகிய நடைமுறைகள் கட்டுபா டுகள் ஆகியனவும் ஆய்வுக்கு உட்படு கின்றது. குறைபாடுகள் சம்பந்தமாக முகாமைக்கு அறிக்கை யிடப்படுகின்றது. | உள்ளக கணக்காய் வாளரால் இவைகள் கவனத்தில் கொள்ளப் படுகின்றன. |
| (iii) (அ) | <u>தொழில்நுட்பகணக்காய்வு</u><br>அதிகாரசபையினால் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப கணக்காய்வு அலகு பற்றிய செயலாற்றுகை தொடர்பான | வெளிநாட்டு நிதியுடன் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களு | இவ் விடயம் உள்ளகக் கணக்காய்வு பகுதியின ரால் போதுமான |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள்,கணக்காய்வில் மீளாய்வினை மேற்கொள்வதற்கு பெறப்படவில்லை. | க்கு கணக்காய்வு செய்வதற்கு வேறான கணக்காய்வு பகுதி அவசியமில்லை. உள்ளக கணக்காய்வு பகுதி இதை மேற் கொள்ளலாம். ஆரம்ப த்தில் சிறியளவு வேலைத்திட்டங்கள் மட்டும் அமைச்சினால் அனுமதிக்கப்பட்டது. 2009 வருடத்தில் அமைச்சு கணக்காய்வு செய்ய திட்டமிட்டிருக் கிறது. | அளவில் கவனிக்கப் படுகின்றன் |
| (ஆ) | தொழில்நுட்ப கணக்காய்வு அதிகாரசபையினால் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப கணக்காய்வு அலகு பற்றிய செயலாற்றுகை தொடர்பான தகவல்கள், கணக்காய்வில் மீளாய்வினை மேற்கொள்வதற்கு பெறப்படவில்லை. | தொழில்நுட்ப ஆய்வுப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட பரீட்சை தொடர்பான அறிக்கை களின் பிரதிகள் இத் துடன் இணைக் கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு பொருத்த மான ஆளணியினர் இல்லாத காரணத்தி னால் செயற்படவில்லை இப்பகுதியை உள்ளக கணக்காய்வுப் பகுதி பணிப்பாளரின் கீழ் கொண்டுவர நடை முறை மேற்கொள்ளப் படுகின்றன. |
| 4.8 | **அதிகாரசபையின் கணனி முறமை மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை**<br>அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளி லிருந்து முறையான, பொருத்தமான, கருத்துள்ள தகவல்கள் போன்றவற்றைப் பெறும் பொருட்டு, உரிய முகாமைத்துவ தகவல் முறைமை தாபிக்கப்பட வில்லையென அவதானிக்கப்பட்டது. | 2009 வருடத்தில் கடன் பட்டோர் கடன் கொடுத் தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு ஆகியன பற்றி அறிக்கை யிடக் கூடிய செயன் முறையொன்றை ஏற் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மகாண நடவடிக்கை கள் உள்ளடங்கிய பாதீட்டு கட்டுப்பாட்டு முறை மற்றும் முகாமைக்கு தகவல் வழங்கும் முறைகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | கொழும்பு பல்கலைக் கழகத்துடன் ஒரு பரந்த முகாமை தகவல் முறைமையை நிர்மாணி ப்பதற்காக வழங்கப்-பட்டுள்ளது. |
| 4.9 | **பாதீட்டுக் கட்டுப்பாடு**<br>2008 ஆம் ஆண்டிற்கான சம்பளங்களும் கூலிகளும், மேலதிக நேரமும் விடுமுறைக் கொடுப்பனவு, ஊழியர் பயிற்சியளித்தலும் அபிவிருத்தியும் மற்றும் அலுவலகக் கோரிக்கைகள் போன்றவற்றிற்காக முறையே ரூபா 932.14 மில்லியன், ரூபா 27.99 மில்லியன், ரூபா 4.65 மில்லியன் மற்றும் ரூபா 19.07 மில்லியன் ஆகிய | இது முக்கியமான வரவு செலவுத் திட்ட வேதன அதிகரிப்பினால் ஏற்பட்டது. வேதனத் துடன் விடுதலை நாள் கொடுப்பனவு, புதிய ஆட்சேர்ப்பு மற்றும் அலுவல பொருட்கள் என்பவற்றால் | எங்கள் மதிப்பீட்டின்படி வேதனம் மேந்தலை தொடர்பாக கோரிய தொகை திறைசேரியி னால் குறைக்கப்பட்டது ஒதுக்கப்பட்ட தொகை எப்போதும் குறைவாக உள்ளதான காரணத் தால் வேறுபாடுகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகள் திருத்தப்பட்ட பாதீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலே குறிப்பிடப்பட்ட இந்தப் பகுதிகளுக்கான செலவினம், மீளாய்வு ஆண்டுக் காலத்தில் 115% லிருந்து 200% மாக அதிகரித்திருந்தது. ஆகையினால் பாதீடானது நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் தாக்கமுள்ள கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | செலவுகள் அதிகரிப்புக்கு உள்ளாகியன. | உள்ளது. இவ்வேறுபாடுகளை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| 5 | **முறைமைகளும் கட்டுப்பாடும்**<br><br>பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகளில் பல்வேறு வகையான குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாடு தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.<br><br>(அ) களஞ்சியப்படுத்தல்<br>(ஆ) அலுவலக விடுதிகள்<br>(இ) வங்கிச் செயற்பாடுகளும், வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தலும்<br>(ஈ) பயன்பாட்டிற்கான காணிகள்<br>(உ) ஒப்பந்தங்கள் வழங்குதலும் பூர்த்தியும்<br>(ஊ) அதிகாரசபையின் பௌதீக செயலாற்றுகை | விசேட கவனத்திற்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது | (அ), (ஆ), (இ)களில் குறிப்பிட்ட குறைபாடுகள் பெரும்பாலானவை சீர்செய்யப்பட்டுள்ளன. களஞ்சியம் சம்பந்தமான இட நெருக்கடிகள் காரணமாக சீர்செய்யப்படவில்லை களஞ்சியத்தை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு எஞ்சிய விடயங்களை சீர்செய்யப்படும்.<br>(ஈ) 40 வீத மீதிக் காணிகள் நிலஅளவை மேற்கொண்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.<br>(உ) மற்றும் (ஊ) தொடர்பாக ஒப்பந்த நிர்வாகம் மிகவும் இறுக்கப்பட்டுள்ளதுடன் தாமதக் கிரய வேறுபாடுகள் ஆகியவற்றை குறைப்பதற்கு ஒப்பந்த நிர்வாகம் முனைப்படுத்தப்பட்டுள்ளது. வீ.அ.அ. சபை உள்ளூர் நிதியுடனான வேலைத் திட்டங்களை மேற்கொள்ளும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008

REPORT

ANNUAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org